Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 11 செவ்வாய்க்கிழமை (27.08.2013) பக்கங்கள் 20 ஓசை - 331




## கூட்டமைப்பில் தொடரும் அதிருப்தி மற்றொருவரும் அரசுடன் இணைவு



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலி.தெற்கு பிரதேசசபை உறுப்பனர் வி.சிவநாதன் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்துள்ளார்.

சுயேட்சையாக போட்டியிடுவதிலிருந்து தான் விலகுவதாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து மக்களுக்கு சேவை செய்ய முடியாததால் இந்த முடிவை எடுத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் யாழ்.காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (25)

## உண்மையான தலைவரினால் உருவாக்கப்படாத கூட்டமைப்பு

### வேட்பாளர் தம்பிராசா விசனம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உண்மையான தலைவரினால் உருவாக்கப்படவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் வடக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் நல்லதம்பி தம்பிராசா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், கடந்த சில நாட்களுக்கு முன்னர் நடந்த அத்துமீறல் சம்பவம் தொடர்பாக விளக்கமளிக்கும் முகமாகவே தான் இந்த ஊடகவியலாளர் சந்திப்பினைக் கூட்டியதாகவும் தெரிவித்த அவர் வடக்கு மாகாணத்தில் செயற்படும் தேர்தல் கண்காணிப்புக் குழுவான பவ்ரல் போன்ற அமைப்பு

19 ஆம் பக்கம் பார்க்க

# இராஜதந்திர ரீதியாகவே நவிப்பிள்ளைக்கு எதிர்ப்பு



### ஆர்ப்பாட்டத்தால் அல்ல என்கிறார் கோமின்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு எதிராக ஏதேனும் எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும் என்றால் அதனை அறிவைப் பயன்படுத்தியும் இராஜதந்திர ரீதியிலுமே செய்ய வேண்டும் என சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் தயாசிறி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆர்ப்பாட்டங்களை நடத்தி எதிர்ப்புகளை வெளியிடுவதில் பெரிய பயன்கள் எதுவும் கிடைக்கப் போவதில்லை.

இதனால் இலங்கைக்கு ஒரு விதத்தில் சாதகமற்ற நிலைமை ஏற்படக்கூடும்.

ஆர்ப்பாட்டங்களை நடத்தி பலத்தைக் காட்டினாலும் அதன் மூலம் கிடைக்கும் நன்மை குறைவானதாகவே இருக்கும்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் என்ற முறையில் நவநீதம்பிள்ளைக்கு இலங்கையில் ஆய்வுகளை மேற்கொள்ள உரிமை உள்ளது என்றார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் வருகையானது பாதகமாக அமைய

19 ஆம் பக்கம் பார்க்க

### செப்ரெம்பர் 15 இல் யாழ்.வருகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)


எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும், சுற்றாடல்துறை அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த நேற்றுத் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் யாழ். மாவட்டப் பிரசார அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 15 ஆம் திகதி மூன்று நாள் விஜயம் மேற்

19 ஆம் பக்கம் பார்க்க







## மக்களின் 29 ஏக்கர் காணி தென்மராட்சியில் விருவிப்பு



(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் படையினரின் பயன்பாட்டில் 17 வருடங்களாக இருந்த 29 ஏக்கர் காணியும் 10 வீடுகளும் நேற்றைய தினம் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற இந்த நிகழ்வில், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ். மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத்தளபதி

19 ஆம் பக்கம் பார்க்க

## யுத்தம் நிறைவடைந்தும் பயங்கரவாத சட்டம் ஏன்?

### அமைச்சர் ஹக்கீமிடம் நவிப்பிள்ளை கேள்வி

(கொழும்பு)

யுத்தம் நிறைவடைந்த நிலையில் பயங்கரவாத தடைச்சட்டம் தற்போதும் நடைமுறையில் ஏன் உள்ளது என ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் கேள்வியெழுப்பியுள்ளார்.

நேற்று முற்பகல் 11.00 மணியளவில் நீதியமைச்சின் கேட்போர் கூடத்தில் அமைச்சர் ஹக்கீமைச் சந்தித்து கலந்துரையாடிய நவிப்பிள்ளை மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியுள்ளார். இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த ஹக்கீம்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் சுயாதீனமாக செயற்படுவது எமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. பல பொதுவான விடயங்களை நாம் பேசினோம். அவர் என்னிடம் பல கேள்விகளைக் கேட்டார்..குறிப்பாக குற்றவியல் சட்டங்களில் கொண்டுவரப்படும் புதிய திருத்தங்கள் தொடர்பாகவும் நீதி

19 ஆம் பக்கம் பார்க்க



5ஆம் பக்கத்தில் சிறப்பு நேர்காணல்

## யாழில் நவிப்பிள்ளை



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இன்றைய தினம் இறுதி யுத்தம் இடம்பெற்ற முள்ளிவாய்க்காலில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடன் விசேட சந்திப்பு ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

நேற்று மாலை 5.52 மணியளவில் விசேட விமானம் மூலமாகக் கொழும்பில் இருந்து பலாலி விமான நிலையத்துக்கு வருகை தந்த நவப்பிள்ளை தலைமையிலான குழுவினர் அங்கிருந்து யாழ்போதனா மருத்துவமனைக்கு வருகை தந்தனர்.

மாலை 6.45 மணியளவில் யாழ்.போதனா மருத்துவமனைக்கு வருகை தந்த நவிப்பிள்ளை குழுவினரை மருத்துவமனையின் பணிப்பாளர் வரவேற்றார்.

தொடர்ந்து போதனா மருத்துவ மனையின் சில பகுதிகளை இக்குழுவினர் பார்வையிட்டனர். குறிப்பாக புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியை சுற்றிப் பார்வையிட்ட பின்னர் பணிப்பாளர் மற்றும் மருத்துவ அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். பின்னர் அங்கிருந்து 7.30 மணியளவில் புறப்பட்டுச் சென்றார்.

இன்றைய தினம் காலை 8.00

19 ஆம் பக்கம் பார்க்க

# இன்று முதல் வழமையான பஸ் சேவை; அமைச்சரின் சமரச முயற்சி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற தனியார் பயணிகள் போக்குவரத்து சேவையாளர்களின் பணிப்பகிஷ்கரிப்பு போராடடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சமரச முயற்சியால் கைவிடப்பட்டிருக்கிறது.

இன்று முதல் வழமையான சேவைகள் இடம்பெறவிருக்கிறது. இவ்விடயம் தொடர்பாக அமைச்சின் அலுவலகத்தில் விசேட சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

கடந்த சில நாட்களில் ஏற்பட்ட தேவையற்ற சம்பவங்களை மறப்போம், மன்னிப்போம் எனும் அடிப்படையில் ஏற்றுக்கொண்டு நியாயமான நடைமுறைத்தீர்விற்கு இணக்கம் காணப்பட்டது.

தனியார் பஸ்வண்டிகளை யாழ். மத்திய பஸ் நிலையப் பகுதியின் வடபுறத்தில் முழுமையாக நிறுத்தாமல் அதன் மத்திய பகுதியிலிருந்து கிழக்குப் புறமாக ஆஸ்பத்திரிப் பகுதிவரை நிறுத்துவதென்றும், குறிகாட்டுவான் ஊர்காவற்றுறை சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் வண்டிகள் சத்திரச் சந்திக்கும் கந்தப்ப செட்டியார் வீதிக்கும் இடையில் மூன்று நிமிடங்கள் வரை தரித்திருந்து பயணிகளை ஏற்ற அனுமதிக்கப்படுவார்கள் என்பதுடன் இ.போ.சபைக்கு சொந்தமான பஸ் தரிப்பு நிலைய எல்லைக்குள் தனியார் சேவைகள் எவ்வகையிலும் உட்பிரவேசிக்கவோ அல்லது பயன்படுத்தவோ அனுமதிக்கப்படமாட்டாது எனவும் இணக்கம் காணப்பட்டது.



இரு தரப்பினரினதும் ஒப்புதலோடு நியாயமான முடிவு மேற்கொள்ளப்படும் என்ற அமைச்சரின் உறுதிமொழியை உள்ளடக்கிய மேற்படி சுமுகமான தீர்வினை இருதரப்பினரும் ஏற்றுக் கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிரந்தர தீர்வினைக் காணும் முகமாக யாழ். மத்திய பஸ்நிலைய பகுதிக்கு கிழக்காக அமைந்துள்ள இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான காணியில் நீண்ட கால திட்டத்தில் தனியார் பிரயா ணிகள் பஸ் சேவைக்கு வழங்கப்படும் எனவும் அதுவரையில் தற்போதைய தீர்வுத்திட்டத்தை இதயசுத்தியுடன் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும் இதன் அமுலாக்கத்தை கண்காணிக்கவும் அமுல்படுத்தவும் காலை 5 மணிமுதல் இரவு 8 மணிவரை பொலிஸாரை அப்பகுதியில் கடமையில் ஈடுபடுத்தவும் அமைச்சர் பணிப்புரைகளை வழங்கினார்.

தனியார் பயணிகள் பஸ் சேவை இன்று முதல் வழமை போல் இடம்பெறுமென்று யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

எமது சேவை பகிஷ்கரிப்பு தொடர்பாக எமது நியாயமான கோரிக்கையினை ஏற்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுறுத்தலுக்கமைய பகிஷ்கரிப்பை நிறைவு செய்து இன்று முதல் வழமை போல் சேவைகள் நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ். குடாவுக்கு தடையற்ற மின்சாரம்; அடுத்த மாதம் முதல் கிடைக்கும்

இரண்டு தசாப்தங்களின் பின்னர் மின்சக்தி கட்டமைப்பில் வடக்கையும் தெற்கையும் இணைக்கும் சுன்னாகம் மின் உப நிலையம் விரைவில் இயங்கவுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தொடக்கம் சுன்னாகம் மின் உப நிலையத்தின் ஊடாக யாழ். குடாநாட்டிற்கு மின்சாரத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுன்னாகம் மின் உப நிலையத்திலிருந்து 63 மெகாவொட் மின்சாரம் யாழ். குடாநாட்டிற்கு விநியோகிக்கப்படவுள்ளதாகவும் இதன் மூலம் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் வீடுகளில் வாழும் மக்கள் நன்மை அடைவார்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுன்னாகம் கிரீட் மின் உப நிலையம் இயங்கும் பட்சத்தில் யாழ். குடாநாட்டின் மின்சக்தி தேவையை முழுமையாக நிறைவேற்ற முடியும் என மின்சக்தி எரிசக்தி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# யாழ். மருத்துவர்களின் இடமாற்றம் இரத்து

யாழ். போதனா வைத்திய சாலையில் கடமையாற்றும் 91 வைத்தியர்களுக்கான இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்திய சாலையின் பிரதிப் பணிப்பாளர் செ.சிறிபவாந்தராஜா நேற்று தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்திய சாலையில் கடமையாற்றும் 91 வைத்தியர்களை இடமாற்றம் செய்யவுள்ளதாக சுகாதாரத் திணைக்களம் அறிவித்திருந்தது.

மேலும், யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்தியர்களுக்கான பற்றாக்குறை நிலவி வருகின்ற நிலையில், 91 வைத்தியர்களை திடீர் இடமாற்றம் செய்யவுள்ளதாக சுகாதாரத் திணைக்களம் அறிவித்திருந்தது.

இந்த நிலையில், வைத்தியர்கள் திடீர் இடமாற்றத்திற்கு விருப்பம் தெரிவிக்காதிருந்த நிலையில், சுகாதார அமைச்சுடன் தொடர்பு கொண்டு வைத்தியர்களுக்கான திடீர் இடமாற்றத்தை இரத்துச் செய்துள்ளதாகவும் அவர கூறினார். (25)

# தொழில்நுட்பமும் மொழிக்கல்வியும் மகிந்த சிந்தனையின் சிறப்பம்சம்

## மாகாணக் கல்வி அமைச்சு செயலாளர் சத்தியசீலன்

(திருநெல்வேலி)

கல்விதான் எமது முக்கிய மூலதனம். தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில பாடங்கள் எதிர்கால சந்ததிக்கு அத்தியாவசியமானவை. மகிந்த சிந்தனையின் கீழ் கல்விக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன்.

கடந்த சனிக்கிழமை காலை மானிப்பாய் ஏன்ஜல் சர்வதேச பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். பாடசாலை அதிபர், பேராசிரியர் அலெக்ஸ் தேவராஜன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய செயலாளர், ஜனாதிபதியின் தலைமையில் எமது ஆளுநரின் வழிகாட்டலில் வடமாகாண கல்வி நிலை மிகுந்த முன்னேற்றம் கண்டுள்ளது.

மாணவர்கள் நல்லபடியாக தமது பாடநெறிகளை கற்று கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மாணவர்களுக்குத் தேவையான செயலமர்வுகள் மற்றும் முன்னோடிப் பரீட்சைகள் நடத்தப் படுகின்றன.

ஆசிரியர்கள் மட்டுமல்ல பெற்றோரும் தமது பிள்ளையின் கல்வியில் அதிக அக்கறை காட்ட வேண்டும். அதிபர், ஆசிரியர், பெற்றோர், பெரியர்வர்களைக் கனம்பண்ணி அவர்களின் அறிவுரைகளை செவிமடுத்து மாணவர்கள் இந்த நாட்டுக்கும், தம்மைப் பெற்று வளர்த்த பெற்றோருக்கும் பெருமை தேடித்தரவேண்டும் எனக் கூறினார். (137)

# கிணறு வெட்டும்போது விபத்து; மண்ணில் புதையுண்டு குடும்பஸ்தர் பலி

(கொடிகாமம்)

பச்சிலைப்பள்ளி தர்மகேணி கிராம அலுவலர் பிரிவில் உள்ள சின்னத்தாளையடி கிராமத்தில் தோட்டக்கிணறு வெட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நபர் ஒருவர் மண் கட்டி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை பகல் இடம்பெற்றுள்ளதுடன் இதில் பச்சிலைப்பள்ளி, தர்மகேணியைச் சேர்ந்த பரமசிவம் சிவகுருநாதன் (வயது - 36) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இபபகுதியில் தோட்டக்கிணறு வெட்டும் நடவடிக்கை இடம்பெற்றுக் கொண்டிருந்தது. இதில் 3 பேர் கிணற்றுக்குள் இறங்கி மண்ணை வெட்டிக்கொண்டிருந்த சமயம் ஒருவரின் நெஞ்சின் மீது மண் கட்டி விழுந்ததில் மயக்கமடைந்த குறித்த நபரை பளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். எனினும் அவர் வைத்தியசாலைக்கு செல்வதற்குள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.


## ஊர்காவற்றுறை பிரதேசசபை பகிரங்க ஏலம் - 2013 நாரந்தனை மாட்டிறைச்சிக்கடை

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் நாரந்தனை உப அலுவலகத்துக்குரிய மாட்டிறைச்சிக்கடை நடப்பு வருடத்தின் இறுதி நான்கு மாதங்களுக்கும் பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளது.

இடம் : பிரதேசசபை தலைமை அலுவலகம், சுருவில் வீதி, ஊர்காவற்றுறை.
காலம் : 30.08.2013 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணி

ஆகக்குறைந்த இழிவுத்தொகை :
ரூபா 62700.00 (ரூபா அறுபத்திரண்டாயிரத்து எழுநூறு மட்டும்)

நிபந்தனைகள் மற்றும் விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் காலை 8.30மணி தொடக்கம் பிற்பகல் 4.15மணி வரை பெற்றுக்கொள்ள முடியும். (தொலைபேசி - 0213212398)

27.08.2013

ம.ஜெயகாந்தன், தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேசசபை

(C/3030)


# யுத்தமும் இல்லை அழிவுகளும் இல்லை புதிய பாதையை நோக்கி பயணிப்போம்



யுத்தத்தின் சத்தங்களும், அழிவுகளும் அகற்றப்பட்டு தெளிவான பாதையை நோக்கி நாங்கள் நகரத் தொடங்கி இருக்கின்றோம் என ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், வடமாகாணசபைத் தேர் தலில் ஐ.ம.சு.முன்னணி யின் சார்பில் போட்டி யிடும் வேட்பாளருமான கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள் ளார்.

வடமாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு ஈ.பி.டி.பியின் தேர்தல் பிரசார ஒன்றுகூடல்கள் அண்மையில் வடம ராட்சி மற்றும் தென்மராட்சி பிரதேசங்களில் பல்வேறுபட்ட இடங்களில் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், மாகாண சபை முறைமையை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற நிலையில் எமது கொள்கைக்காக பல இன்னுயிர்களை விலையாகக் கொடுத்து, கொள்கைப்பற்றுடன் எதற்குமே சளைக்காது எமது நீண்ட நெடும் அரசியல் பயணம் தொடர்கிறது. தோழமையுடன் உறவாடிய தோழர்களின் உயிர்த் தியாகங்களுடன் தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்க திட சங்கற்பம் பூண்டு எமது தலைவரின் உன்னதவழியில் செயற்பட்டு வருகின்றோம்.

இந்தச் சந்தர்ப்பத்திலே உங்களுடைய சிந்தனைகள் தெளிவான பாதைகள் நோக்கியும் சரியான தலைமையை நோக்கியதாகவும் இருக்கும் என நம்புவதுடன் சமுதாயத்திற்கு சரியான பாதையினைக்காட்டவும் தவறமாட்டீர்கள் என நம்புகிறேன். எனக் கேட்டுக் கொண்டார்.

இவ் ஒன்றுகூடல்களில் வட மாகாண சபைத் தேர்தலில் ஈ.பி.டி.பியின் சார்பில் ஐ.ம.சு.முன்னணியின் முதன்மை வேட்பாளர் தவராசா, வேட்பாளர்களான சிறிரங்கேஸ்வரன் (ரங்கன்), சூ.அலெக்சாண்டர் (சார்ள்ஸ்) ஆகியோர் கலந்து கொண்டனர்.


## சிறு விளம்பரம்

### கஜன் பிளாஸ்ரிக் வேக்ஸ்

சகல பிளாஸ்ரிக் வேலைகளுக்கும் 160/1, கண்டி வீதி, மாம்பழம் சந்தி அருகில். தொ.பே: 0771607752. (R/312)

# தமிழர் பண்பாட்டை பரதக்கலை பிரதிபலிக்கிறது

## பேராசிரியர் நா.சண்முகலிங்கன்



(யாழ்ப்பாணம்)

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்வதற்கு பொருள் தேடும் அவலத்தில் அருளைப் பண்பாட்டுக் கோலத்தை மறந்து வாழும் அவலநிலையை எதிர்நோக்கியுள்ள எமது சமூகத்தில் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு ஏதாவது ஒரு கலையைக் கற்றுக்கொடுக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு செல்வி விதுஷா விஜயகுமாரனின் பரதநிருத்திய அரங்கேற்ற விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி அரங்கில் கடந்த ஞாயிற்றுக கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் பேராசிரியர் சண்முகலிங்கன் தொடர்ந்து பேசுகையில்,

இந்த மண்டபத்துக்குள் வரும் போது நெஞ்சுக்குள் ஒரு கம்பீரம் ஏற்படுகிறது. எமது நாட்டை ஆண்ட மன்னன் இராவணனின் பெயரில் எழுந்து நிற்கும் இந்த இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபம், அரங்கு என்பன பரதநிருத்திய அரங்கேறறத்திற்கு மிகப்பொருத்தமான மண்டபமாக அமைந்துள்ளது.

எங்கள் பண்பாட்டில் சிந்தனைகளை வெளிப்படுத்த மொழி உறுதுணையாக உள்ளது போன்று மன எழுச்சிகளை வெளிப்படுத்துவதற்கு இசை, நடனம், ஓவியம் போன்ற கலைகள் உதவுகின்றன.

ஒவ்வொரு இனக்குழுமங்களுக்கும் தமக்கென உரிய பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் கலைகள் காணப்படுகின்றன. தமிழர் பண்பாட்டைப் பிரதிபலிப்பதாக பரதக்கலை அமைந்துள்ளது.

ஜேர்மனியில் இருந்து வந்த செல்வி விதுஷா கடந்த ஒன்பது மாதங்களுக்கும் மேலாக கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவனேசனிடம் குருகுலக் கல்வி போன்று நடனக் கலையைப பயின்றுள்ளார் அவருடைய விடாமுயற்சியும் ஆர்வமும் இன்று அவரை அரங்கப்பிரவேசம் காண வைத்துள்ளது.

பிள்ளையின் மனம், வயது, பககுவம் என்பவற்றுக்கேற்ப விரசம் இல்லாத உருப்படிகளைச் சாகித்தயங்களாகத் தெரிவு செய்தமை குருவுக்கு கிடைத்த வெற்றிக்கு காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார். (10)

# தென்மராட்சி வரணிப் பகுதிகளில் பனை மரங்கள் அழியும் அபாயம்



தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வரணி,கொடிகாமம போன்ற பகுதிகளில் பனைமரங்கள் அதிகமாக தறிக்கப்படுகின்றன.

வீதிஅகலிப்பு, மின்சாரவசதி போன்ற காரணங்களை காட்டி அனுமதி எடுக்கப்பட்டு பெருமளவான பனை மரங்கள் தறிக்கப்படுவதமாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின் றனர்.

இவ்வாறான காரணங்களைக் காட்டி பனைமரம் தறிக்கப்படும் போது பெண்பனை மரங்களும் பெருமளவில் தறிக்கப்படுவதாகவும் தறிக்கப்படும் பனை மரங்களிற்கு பதிலாக புதிய மரங்கள் நாட்டப்படுவது இல்லையென்றும் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் பனை மரங்களை விலைக்கு வாங்கும் வியாபாரிகள் ஒரு காணி உரிமையாளரை பாஸ் எடுக்கச் செய்துவிட்டு அருகில் உள்ள காணிகளிலும் பனை மரங்களை தறிப்பதாகவும் பொதுமக்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து உரிய முறைப்படி பனை மரங்கள் தறிக்கப்படுகின்றனவா என ஆய்வு செய்தால் ஓரளவுக்கேனும் இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதில் இருந்து விடுபடலாம் என சமூக ஆரவலர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். (130)

## ஆழமாக்கப்பட்டு வரும் வேலணை வெட்டுக்குளம்

வேலணை கிழக்கு செட்டிபுலத்தில் உள்ள வெட்டுக்குளம் பாரிய இயந்திரங்கள் மூலமாக ஆழமாக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு ஆழமாக்கப்பட்டு வருகின்ற குளத்தில் இருந்து எடுக்கப் பட்டு வருகின்ற மக்கிகள், கிரவல்களை ஏற்றி கிராமத்திலுள்ள பல வீதிகளுக்கு போடப்பட்டு வீதிகளை செப்பனிடும் வேலைகளை வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் சி.சிவ ராசா செய்துவருகின்றார்.

இதுவரை வேலனை கிராமத்தில் உள்ள பத்துக்கு மேற்பட்ட வீதிகளுக்கு இந்த குளத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கல், மக்கிகளைக் கொண்டு வீதிகளை புனரமைத்துள்ளார்.

மேலும் பல வீதிகளை புனரமைத்து போக்குவரத்து வசதிகளை மக்களுக்கு ஏற்படுத்தி கொடுத்துதவுவதற்கான திட்டங்களையும் முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (05)

## யாழ். நல்லூர் சிரடிசாயிபாபாவிற்கு திவ்ய அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் சீரடிசாயிபாபாவின் திவ்யஅலங்கார உற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பாகவுள்ளது.

11 ஆம் திகதி புதன்கிழமை நவசக்தி கணபதி அபிஷேக பூசை, 12 ஆம் திகதி வியாழக்கிழமை ஸ்ரீசாயி மகாயந்திர பூசை, 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஸ்ரீகர்ப்பரட் சாம்பிகாதேவி விக்ருதுசாந்திவிழா,

14 ஆம் திகதி சனிக்கிழமை விசேட "துணி" பூசையும், 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீசாயி பாத பூசையும், 16 ஆம் திகதி திங்கட்கிழமை திருவிளக்கு பூசையும் குங்குமப்பூ அர்ச்சனையும் , 17 ஆம் திகதி செவ்வாய்கிழமை சாயிநாதர் "பூச்சப்பை இரத பவனி இவ் இரத பவனி மாலை 6.30 மணிக்கு ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி நாவலர் வீதி கச்சேரி நல்லூர் வீதி, றக்காவீதி, கோவில் வீதி, நாவலர் வீதியூடாக ஆலயத்தை வந்தடையும்.

18 ஆம் திகதி புதன்கிழமை திருத தேர் பவனி இடம்பெறும் பி.ப 4 மணிக்கு ஆரம்பமாகும் இத் தேர்ப் பவனி, மருதடி வீதி, றக்கா வீதி, இராசாவின் தோட்ட வீதி, நாவலர் வீதியூடாக ஆலயத்தை வந் தடையும்

19 ஆம் திகதி வியாழக்கிழமை சாயிநாதர் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள ஞானவைரவப் பெருமான் ஆலய திருமஞ்சனக் கிணற்றிலே புனித தீர்த்தத் திருவிழாவும் திருவூஞ்சலும் இடம்பெறும் அதனைத் தொடர்ந்து கொடியிறக்கம இடம் பெறவுள்ளது. (01)

## வருடாந்த மகோற்சவம்

(பூநகரி)

பூநகரி ஜெயபுரத்தில் அமைந்துள்ள அருள்மிகு வரசித்தி வழிப்பிள்ளையார் ஆலய வருடாந்த மகோறசவம் எதிர்வரும் 31 ஆம் திகதி ஆரமபமாகி அடுத்தமாதம் 10 ஆம் திகதி செவ்வாய்கிழமை நிறைவுபெறவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை 108 சங்காபிஷேக கிரியைகளை சிவஸ்ரீ வ.பாதிகுமாரக் குருக்கள் நிறைவேற்றி வைப்பார்.

## மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்



அரச கரும மொழிகள் திணைகளத்தினால் அரச கரும மொழிகள மொழி பெயர்ப்பாளர்களின் கண்காணிப்பாளர்கள் (சிங்களம், ஆங்கிலம்), மற்றும் (சிங்களம், தமிழ்) பதவிகளுக்கு ஆட்சேர்பு செய்வதற்கு தகுதியான இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.


ஆட்சேர்ப்பு படிமுறையிலமைந்த நேர்முகப் பரிட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரிகள இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அரச கரும மொழிகள் ஆணையாளர். அரச கரும மொழிகள் திணைக்களம். இல 341/7 பாஷா மந்திரய கோட்டே வீதி, இராஜகிரி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை 23.08.2013 வர்த்தமானியில் பார்வையிட முடியும்.

## நல்லைக் கந்தனுக்கு இன்று கார்த்திகைத் திருவிழா



### கார்த்திகை கந்தா

ஆறுமுகனுதித்தே ஆணவத்தைப் போக்கியதைக்
கூறுங் திருக்கார்த்திகைவிழா பேறுபெறப்
பேரொளியைத் தந்த பெருமானார் நல்லூரிற்
பாரொளியால் நிற்பான் பணி

நல்லைக் கந்தன் பாமாலை

## நல்லூர் ஆலய சூழலில் இன்று...

நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசாரத் திணைக்களத்தால் தினமும் மாலை 3 மணியளவில் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடைபெறும் இந் நிகழ்வில் கார்த்திகைத் திருவிழாவான இன்று "வேலுண்டு வினை திர்க்க" என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் நவநீதன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

மூளாய் ஞானஒளி, நயினாதீவு அமுதசுரபி, வரணி சிட்டிவோரம் கண்ணகை அம்மன் ஆலய அறிநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கம் தினமும் மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காமணிமண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் இன்று எஸ்.கோபிதாஸன் பாட்டுக் கச்சேரி பக்கவாத்தியக் கலைஞர்கள் சகிதம் இடம் பெறவுள்ளது.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் ப்ரம்மகான சபா நடாத்தும் தெய்வீக இசைச்சங்கம நிகழ்வு தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன புதிய மண்டபத்தில் இடம்பெற்று வருகிறது.

இதில் இன்று ஆசிரிய ஆலோசகர் பிரமஸ்ரீ விஜயகுமாரசர்மா சாந்தகுமாரியின் பாட்டுக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தினால் நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு தெய்வீகப் பேருரை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் இன்று முருகன் திருஅவதாரம் என்னும் விடயம் பற்றி முத்தமிழ் குருமணி அமிர்தஸ்ரீகாந்த குருக்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (42,06)

மகோற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்



சொந்த முயற்சி துணிவு தரும், வீரம் தரும், நம்பிக்கை நல்வழி காட்டும், சந்தேகம் சங்கடம் தரும். - சுவாமி இராமநாதர்.

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## சபையை யாரிடம் தரவேண்டும்?

வடக்கு மக்கள் இதுகாலவரையும் எதிர்நோக்கிய தேர்தல்களைப் போன்றதல்ல இந்த வட மாகாண சபைக்கான தேர்தல். இது மிகுந்த முக்கியமானது. மாகாணத்துக்குரிய கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரக் கட்டுமானங்களை வளப்படுத்திக் கொள்ள இன்றுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தியே மாகாண சபையால் ஏராளம் செய்யமுடியும்.

வட மாகாணத்தை இலங்கையின் வேறு எந்தப் பகுதிக்கும் குறைவில்லாத முன்னுதாரண பூமியாக ஆக்கிக்கொள்ள முடியும். குறிப்பாக யாழ்நகரை கொழும்புக்கு அடுத்த மாநகரம் என்ற நிலைக்கு மீண்டும் கொண்டுவர முடியும். மத்தியுடன் இணக்க ஆட்சியை நடத்துபவர்கள் தெரிவு செய்யப்பட்டாலேயே இவை எல்லாம் சாத்தியம்.

போரினால் பாடுகேடாக அழிந்திருந்த வடமாகாணம் நான்கு வருடங்களுக்குள் எத்தகைய மாற்றங்களை அடைய முடிந்திருக்கிறது என்பதை அரசியல் சுயநலங்களற்ற வெளிநோக்கர்களிடமிருந்து நாம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கையின் மற்றெந்த நெடுந்தூர வீதிக்கும் குறைவில்லாமல் ஏ9 வீதி அதிவிரைவாகவே செய்துமுடிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தங்கள் அரசியல் பிரசாரத்திற்காக குறை சொல்பவர்களும், அதிலேயே எந்த குலுக்கல்கள் நிறுத்தல்களும் இல்லாமல் வெகு வேகமாகத் தங்கள் சொகுசு வாகனங்களில் வந்துபோய்க் கொண்டிருக்கிறார்கள்.

மூன்று எம்.பிக்கள், அதில் ஒரு அமைச்சரவை அந்தஸ்து அமைச்சர், வடமாகாண மக்கள் தங்கள் வாக்குகளை அளித்துக் கொடுத்த இதை வைத்துக்கொண்டே மத்தியிலிருந்து பெறக்கூடிய வற்றைப் பெற்று, ஊசிநூல் நுழையக் கிடைத்த இடத்தில் ஒட்டகத்தையும் நுழைத்துக் கொண்டுவந்துவிடும் சாமர்த்தியமும் முயற்சியும் கடும் உழைப்பும் மக்களது வளமான வாழ்வின் மீது அக்கறையும் கொண்ட அவர்களால்தான் வட மாகாணத்தில் இந்த மாற்றங்கள் நடந்தது என்பதை அரசியலை விடுத்துச் சிந்திக்கும் எவரும் ஒப்புக்கொள்வர்.

மாகாணத்துக்கான விசேட அபிவிருத்திகள், குறிப்பாக மாகாணத்துக்குள்ளேயான வீதிகள், பொருளாதாரத் திட்டங்கள், கல்வி அபிவிருத்திகள், உள்ளூர் வேலைவாய்ப்பு ஊக்குவிப்புகள் என்பன மாகாண சபையால் செய்யப்பட வேண்டியன. அடுத்த சித்திரை வருடப் பிறப்புக்கு திட்டமிட்டபடி புகையிரதம் வந்துவிடும். அதைத் தொடர்ந்து காங்கேசன்துறையிலிருந்து கரையோரமாக பருத்தித்துறை, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு வரையான புகையிரதப்பாதை வேலைகள் தொடங்கிவிடும்.

அதேசமயம் பலாலி விமானப் போக்குவரத்தும் வெளியூர்களுக்குத் திறந்துவிடப்பட்டு, நீர், மின்சார வசதிகளும் பூர்த்தியாக்கப்பட்ட நிலையில், வடமாகாணத்தில் புதிய தொழிற்துறைகளை ஆரம்பிக்க அதன்பிறகு யாரும் தயக்கம் காட்டப்போவதில்லை. தொழிற்சாலைகள் வந்துவிட்டால், வேலைக்கு ஆட்கள் தேடும் நிலை உருவாகுமே தவிர வேலையில்லாத் திண்டாட்டம் இருக்காது.

இவையெல்லாம் மாகாண சபையை அர்த்தமுடன் பயன்படுத்தத் திட்டங்கள் உள்ளவர்களால் தான் சாத்தியமாகும். மத்திய அரசுடன் சண்டையிடுவதற்காகவே மாகாண சபையை எடுத்துக்கொள்ள நினைப்பவர்களால் வெறும் ரோச வசனங்கள்தான் இங்கே விளையும்.

மாகாண சபையை எடுத்துவைத்துக்கொண்டு வேறொரு தீர்வைக் கொண்டுவருவதற்கு மட்டும்தான் அதைப் பயன்படுத்துவோம்; இதைத் தீர்வின் ஆரம்பமாகக் கூட கொள்ள முடியாது என்ற நிலைப்பாட்டில் உள்ளவர்களிடம் மாகாண சபையைக் கொடுத்து என்ன பிரயோசனம்? உள்ளூராட்சி சபைகளைப் போல தூங்குவதற்கா?

ஆரம்பத்திலிருந்தே மாகாண சபையை ஆதரித்து வருபவர்களும், அதை நடத்திப் பார்ப்பதன் மூலம் அதன் குறைகளைக் களைந்து அதிகாரங்களை வலுப்படுத்திக் கொள்ளலாம் என்று அதன் திசையிலேயே ஓடி வருபவர்களால்தான் அதைக் கடந்து மேல் செல்ல முடியும். இது சரிவராது என்று பின்னோக்கு நிலையை எடுத்து அதன் எதிர்த் திசையில் ஓடிக்கொண்டிருப்பவர்களால் அதைச் செய்ய இயலாது.

– ஆசிரியர்

# 305 கோடி ரூபா செலவில் ஜனாதிபதிக்கு வாகனங்கள்

## -தேசிய பிக்குகள் முன்னணி குற்றச்சாட்டு-

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாவனைக்காக 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை 305 கோடி ரூபா செலவு செய்து வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என தேசிய பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது.

நாட்டின் தனி நபர் கடன் சுமார் நான்கு இலட்சத்தை நெருங்கியுள்ள நிலையிலும் ஜனாதிபதிக்காக இந்த பெரும் தொகை பணம் செலவிடப்பட்டுள்ளது என தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் தினியாவல பாலித தேரர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதியின் வெளிநாட்டு பயணங்களுக்காக 550 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவரின் தவறுகள் பற்றியே தேடிக்கொண்டிருக்கும் எவரும் இந்த தவறு பற்றி எதனையும் பேசுவதில்லை.

2006 ஆம் ஆண்டில் மட்டும் ஜனாதிபதியின் செலவுகளுக்காக 129 கோடி ரூபாவுக்கும் மேல் செலவு செய்யப்பட்டுள்ளதுடன் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. 2007 ஆம் ஆண்டில் 10 இலட்சம், 2008 ஆம் ஆண்டில் 90 கோடி, 2009 ஆம் ஆண்டில் 17 கோடி, 2010 ஆம் ஆண்டில் 20 கோடி, 2011 ஆம் ஆண்டில் 47 கோடிக்கும் மேல் பணம் செலவு செய்யப்பட்டு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதியிடம் ஒரு கோடியே 52 இலட்சம் பொறுமதியான வீட்டுத் தளபாடங்கள் இருந்தன. தற்போது 157 கோடிக்கும் மேற்பட்ட பெறுமதி வாய்ந்த வீட்டுப்பாவனைப் பொருட்கள் இருக்கின்றன. ஜனாதிபதிக்கு வாகனங்களை இறக்குமதி செய்ய செலவிட்ட பணத்தை பயன்படுத்தி, இலங்கை போக்குவரத்துச் சபைக்கு பேருந்துகளை இறக்குமதி செய்திருந்தால், அதன் தரத்தை மூன்று மடங்காக உயர்த்தியிருக்கலாம் என்றார்.

# பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கும் ஊடகவியலாளர்கள் பதிவு

(கொழும்பு)

பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டுக்கு வருகைதரும் ஊடகவியலாளர்களை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு எதிர்வரும் நவம்பர், மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெறவுள்ளது.

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு தொடர்பில் செய்தி சேகரிப்பதற்காக சுமார் ஆயிரம் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக வெகுசன ஊடகம் மற்றும் தகவல் அமைச்சு தெரிவித்துள்ளது

இதற்கமைக மாநாட்டிற்கு வரும் ஊடகவியலாளர்களை பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் சரித்த ஹேரத் கூறியுள்ளார். www.chogm2013.lk என்ற இணையத்தளத்தில் உள்ள நடைமுறைகளுக்கு அமைய சர்வதேச மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் தற்போது ஊடகவியலாளர்களை பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாநாடு நடைபெறும் காலப்பகுதியில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் விசேட ஊடக மத்திய நிலையமொன்று இயங்கவுள்ளது. இது தவிர ஊடகவியலாளர்களுக்காக விசேடமாக ஏழு ஹோட்டல்கள் பெயரிடப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களுக்குரிய ஏற்பாடுகளை வெகுசன ஊடகம் மற்றும் தகவல் அமைச்சு, அமைச்சின் உபகுழு தலைமையில் வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து முன்னெடுத்துள்ளது. பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு தொடர்பாகவும் நாட்டின் துரித அபிவிருத்தி பயணம் தொடர்பாகவும் ஊடகவியலாளர்கள் ஊடாக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சாதகமான தகவல்கள் வெளியாகும் என தாம் நம்புவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# புல்மோட்டைப்பகுதியில் நிர்மாணப்பணிகளுக்கு தடை

புல்மோட்டை பிரதேசத்தில் உள்ள காணிகளில் மறு அறிவித்தல் வரை எந்தவொரு நிர்மாண பணிகளையோ அபிவிருத்தி நடவடிக்கைகளையோ மேற்கொள்ள முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

குச்சவெளி பிரதேச செயலர் அ.உமாமகேஸ்வரனினாலேயே இந்த அறிவிப்பு கடந்த வெள்ளிக்கிழமை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் புல்மோட்டை பிரதேசத்திலுள்ள கிராமஉத்தியோத்தர்களுக்கு பிரதேச செயலர் அ. உமாமகேஸ்வ்ரன் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

புல்மோட்டை பிரதேசத்தில் தொல்பொருட் திணைக்களம் மற்றும் பூஜா பூமி தொடர்பான காணிகளை கோரல்' எனும் தலைப்பிலேயே இந்தக் கடிதம் பிரதேச செயலரினால் விடுக்கப்பட்டுள்ளது. நில அளவை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பொது மக்களினால் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைகள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் வரை அளவீட்டு நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படி இந்தக் கடிதத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், பிரதேசத்தில் காணப்படும் அரச காணிகளில் எந்த விதமான அத்துமீறல்களும் இடம்பெறாது. பாதுகாப்பு தொடர்பில் மிகுந்த கவனம் செலுத்துமாறும் அனுமதிப்பத்திரம் மற்றும் உறுதிப்பத்திரங்கள் உள்ள காணிகளாயினும் அவற்றின் உரிமையாளர்களினால் மேற்கொள்ளப்படும். அபிவிருத்தி மற்றும் கட்டுமான நடவடிக்கையை மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை அறிவுறுத்துமாறும் கிராம உத்தியோத்தர்களுக்கு அனுப்பியுள்ள குறித்த கடிதத்தில் பிரதேச செயலர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் திருகோணமலை மாவட்ட செயலாளர், மாகாண காணி ஆணையாளர் மற்றும் புல்மோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கும் அனுப்பியுள்ளார். இதேவேளை, புல்மோட்டை பிரதேசத்தில் அரச நிலஅளவையாளர் களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலஅளவைகளை தற்காலிகமாக இடை நிறுத்துமாறு திருகோணமலை மாவட்ட செயலர் மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வாவினால் கடந்த ஆகஸ்ட் 19 ஆம் திகதி குச்சவெளிப் பிரதேச செயலருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த உத்தரவினை கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர் வன்மையாக கண்டித்துள்ளார். அத்துடன் இது விடயமாக எதிர்வருகின்ற செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள மாகாணசபை கூட்டத்திற்கு முன்பாக ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தில் முதலமைச்சர் தலைமையில் ஒரு விசேட கூட்டம் இடம் பெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# புலமைப்பரிசில் பரீட்சையை தவறவிட்டு தம்பியை பராமரித்த அக்கா

தனது தம்பிக்காக ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை அவரது அக்கா தவறவிட்ட சம்பவம் ஒன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

மேலும், இந்தமுறை நடைபெற்று முடிவடைந்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றாமல் 'வீடுகளில் மறைந் திருந்ததாகக் கூறப்படும்' 7 மாணவர்களை பொலிஸார் அழைத்துச்சென்று பரீட்சை நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். மட்டக் களப்பு மாவட்டத்தின் கல்குடா பொலிஸ் பிரிவிலேயே இந்தச் சம்பவங்கள் பரீட்சை தினமான நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது என்று கல்குடா பொலிஸார் தெரிவித்தனர். கல்குடா நாமகள் வித்தியாலயத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான ஆயத்தங்கள் மேற்கொள் ளப்பட்டன. இதன்போது மாணவர்கள் சிலர் பரீட்சை நிலையத்திற்கு சமுகமளிக்காத நிலைமை காணப்பட்டது.

இது தொடர்பில் பரீட்சை நிலையத்திற்கு பொறுப்பான அதிகாரி ஒருவர் பாதுகாப்புக் கடமைக்கு வந்த பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டுவந்தார். இதனைத் தொடர்ந்து கல்குடா பொலிஸார் இப்பகுதி சிவில் பாதுகாப்புக் குழுக்களின் உதவியுடன் இந்த மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களை பரீட்சை நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது இவ்வாறிருக்க, ஒரு வீட்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவி ஒருவர் தனது தாய் வீட்டில் இல்லாததன் காரணமாக தானே தனது இளைய தம்பியை பாராமரித்துக் கொண்டிருந்தார். இந்த நிலையில், பொலிஸார் இந்தச் சிறுமியை மாத்திரம் விட்டுவிட்டு ஏனைய 7 மாணவர்களையும் பரீட்சை நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.



**எங்களின் உரிமைகள் பறிபோகின்றது. சிங்கள இனவாதம் எம் உரிமைகளைப் பறிக்கின்றது என்று ஏதேதோ சொல்கின்றோம். ஆனால், எங்களின் உரிமைகள் இலங்கையில் மறுக்கப்படவோ இனவாதம் தலைதூக்கவோ நாம் தான் காரணம்.**

# எங்களுடைய சிந்தனைகளே எங்களுடைய அழிவுகளுக்குக் காரணம்

**நேர்கண்டவர் : ஆர். கே. மேனன்**

## வடமாகாண சபை ஐக்கிய தேசியக் கட்சி முதன்மை வேட்பாளர் தியாகராசா துவாரகேஸ்வரன்

**இன்று மக்கள் அனைவரும் சுதந்திரமாக பேசுகின்றார்கள். விழித்திருக்கின்றார்கள். இந்த நாட்டில் தற்போது கருத்துச் சுதந்திரம் பிறந்திருக்கின்றது. குறை நிறைகளை அனைவரும் கதைக்கின்றார்கள். இவ்வாறு இருக்கின்ற போது இந்தச் சூழலைக் குழப்புகின்ற வகையில் பச்சோந்திகளாகத் தொழிற்படுகின்ற அரசியல் வாதிகளால்தான் மீண்டும் இந்த நாட்டிற்கு இழப்புக்கள் தொடரப்போகின்றது.**

**கேள்வி:-** அன்று உங்கள் ஐக்கிய தேசியக் கட்சியால் தோல்வி கண்ட மாகாண சபையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சிக் காலத்தில் இன்று எவ்வாறு உங்களால் அரங்கேற்ற முடியும்?

**பதில்:** வடகிழக்கை தமிழர் தாயக பூமியாக இணைத்து, வடகிழக்கு மாகாண சபைக்குத் தேர்தலை நடத்தியதும் எங்கள் ஐக்கிய தேசியக் கட்சியே, தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஓர் தீர்வாக பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை அறிமுகப்படுத்தியதும் எமது ஐக்கிய தேசியக் கட்சியே, தமிழர் பிரச்சினையை உலக நாடுகள் முன்னிலையில் பேசித் தீர்க்க சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது ஐக்கிய தேசியக்கட்சியே, அமைச்சர் மகேஸ்வரனின் மக்கள் சேவையால் மகிமைப்பட்டதும் ஐக்கிய தேசியக் கட்சியே. இந்தக் கட்சியினுடைய ஆட்சிக் காலங்களில் முன்னெடுக்கப்பட்ட பல தீர்வு முயற்சிகள் தோல்வி கண்டமைக்குக் காரணம் கட்சியின் செயற்பாடல்ல. மாகாண சபை தோல்வி கண்டது ஏன் என்று அனைவரிற்கும் தெரியும். அன்று அரசியலில் நம்பிக்கை இழந்த விடுதலைப்புலிகள் ஆயுத முனையில் நம்பிக்கை கொண்டிருந்தமை போன்ற பல்வேறு காரணங்களால் அது தோல்வி கண்டது. ஆனால், இன்று அனைத்துக் கட்சிகளும் போட்டியிடும் இந்த மாகாண சபைக்கு உரிமையுடையவர்கள் நாமே.

**கேள்வி:-** அப்படியானால், 2005ஆம் ஆண்டுத் தேர்தலில் மக்கள் ஆணை ஏன் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இல்லாது போனது?

**பதில்:** தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கக் கூடிய ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்காமல் நாம் செய்த வரலாற்றுத் தவறுகள் தான் இத்தனை துன்ப துயரங்களையும் சுமக்க வைத்தது. தமிழ் மக்களை நிர்க்கதியாக்கியது. அத்துடன் அழுத்தங்களின் பின்னணியில் நடந்த ஓர் தேர்தல். இத்தேர்தலில் ஜனநாயகம் இருக்கவில்லை.

**கேள்வி:-** அர்த்தமற்ற பிரசாரங்கள் மத்தியிலும் திசை மாறுகின்ற அரசியலின் மத்தியிலும் மக்களிற்கு நீங்கள் எதைச் சொல்ல விரும்புகின்றீர்கள்?

**பதில்:** நீங்கள் ஓர் சுதந்திர ஊடகமென்ற முறையில், மக்களிற்கு சில அரசியல் உண்மைகளை தெளிவுபடுத்த வேண்டிய ஊடகமென்ற முறையில் உங்களிற்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். இந்த வட மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் யார் என தீர்மானிக்கின்ற சக்தி ஐக்கிய தேசியக் கட்சிக்குத்தான் உள்ளது. அது கூட்டமைப்பாக இருக்கலாம், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாக இருக்கலாம் அல்லது வேறு எந்தக் கட்சியாகவும் இருக்கலாம். தீர்மானிக்கின்ற அதிகாரம் எமக்கேயுள்ளது. தற்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தென்னிலங்கையில் விமல் வீரவன்ச, பாட்டலி சம்பிக ரணவக்க போன்றவர்களின் வார்த்தைகளை மொழிபெயர்த்து அற்ப சொற்ப வார்த்தைகளை மக்களிடம் அள்ளிவீசி அதனடிப்படையில் மக்களை ஏமாற்றம் இத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தாலும்கூட அறுதிப் பெரும்பான்மையூடாக ஆட்சிபீடமேறும் தகுதியை நிச்சயமாக இந்த மக்கள் இவர்களிற்குக் கொடுக்கமாட்டார்கள். கட்சிக்குள் முரண்பாடுகள் முற்றிய நிலையில்உள்ளது. ஒவ்வொருவரும் தனித் தனியே செல்கின்றார்கள். முதலமைச்சர் வேட்பாளருடைய படங்களைக்கூட சேர்த்து போஸ்டர் அடிக்கவில்லை. எமது நிலம் எமக்கு வேண்டும் என்பதை முற்கோசமாக வைத்து அன்று வாக்குகளைப் பெற்றார்கள். அதில் உள்ள திரு சிவாஜிலிங்கம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினூடாக நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். பின்னர் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்று ஜனாதிபதித் தேர்த லிலும் போட்டியிட்டார். இது தமிழ் மக்களை முட்டாளாக்குகின்ற செயற்பாடாகவே நாம் பார்க்கின்றோம். இன்று மீண்டும் கூட்டமைப்புக்குள் வந்துள்ளார்.

இப்படிப்பட்ட சிவாஜிலிங்கம் தற்போது வலிவடக்கில் இருந்து இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட வீடுகளை மக்களிற்கு தற்போது கையளிக்க வேண்டுமெனக் கூறுகின்றார். ஆனால், இவர்கள் மக்கள் முன் வந்து என்ன கூறுகின்றனர்? மொத்தத்தில் தமிழ் மக்களை எப்படி இவர்கள் கருதுகின்றனர். இவற்றையெல்லாம் மக்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

**கேள்வி:-**: தமிழ் குழுக்களின் அரசியல் துண்டாட்டம் தான் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை இலங்கையில் நிர்க்கதியாக்கியது. இது தொடர்பாக உங்களது கருத்து என்ன?

**பதில்:** மிக அருமையான கருத்து இது. எங்களின் உரிமைகள் பறிபோகின்றது. சிங்கள இனவாதம் எம் உரிமைகளைப் பறிக்கின்றது என்று ஏதேதோ சொல்கின்றோம். ஆனால், எங்களின் உரிமைகள் இலங்கையில் மறுக்கப்படவோ இனவாதம் தலைதூக்கவோ நாம் தான் காரணம். திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் சொல்கின்றார். திரு. டக்ளஸ் தேவானந்தாவைப் பார்த்து ஆயுதக்குழுவென்று. இந்த சுரேஷ் பிரேமச்சந்திரன் 1987ஆம் ஆண்டு இந்திய இராணுவம் இருக்கும்போதுஎத்தனை தலைகளை உருள விட்டார். இவருக்கு தமிழ் மக்களால் அன்று சூட்டிய பட்டம் மண்டயன் குழுத் தலைவரென்று. திரு. சித்தார்த்தர் எனக்கு செய்த அட்டூழியங்கள் எத்தனை எத்தனை. திரு. சிவாஜிலிங்கம் என்னுடைய லொறியில் உள்ள சீனியை அபகரித்து எனது லொறியை துண்டு துண்டாக கழற்றிவித்தவர். அன்றைய நேரம் செல்வம் அடைக்கலநாதன் தலைவராக இருந்தார். அன்றிருந்த தமிழ் மக்களுக்கு இது தெளிவாகப் புரியும்.

என்னுடைய 41 வருட வாழ்நாளில் இவர்களால் நான் பட்ட துன்பங்களின் உச்சக் கட்டத்தில் தான் இந்த வார்த்தைகளைப்பேசுகின்றேன். நான் வெளி நாடுகளில் சென்று மட்டை அடித்து விட்டு இங்குவரவில்லை. அங்கு கோப்பையை கழுவிவிட்டு இங்கு வரவில்லை. யாரிடமாவது கைக்கூலியாக நான் இருக்கவில்லை. யாருடைய பணத்தையும் நான் சுரண்டவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியில் இடம்பெற்ற எனது தெரிவு மிகவும் அற்புதமான தெரிவு. நியாயபூர்வமான தெரிவு. என்னுடைய அண்ணர் மகேஸ்வரன் செய்த அற்புதமான பணியினை மதித்துத்தான் எனக்கு இந்த முதன்மை வேட்பாளர் அந்தஸ்து கிடைத்தது. என்னுடைய சுய முயற்சியால் நான் முன்னேறியவன். என்னுடைய வியர்வையில் நான் வாழ்கின்றேன். இன்றிருக்கின்ற அரசியல் வாதிகளைப் போன்று அடுத்தவர்களின் துன்பத்தில் நான் குளிர்காய்பவன் அல்ல. இன்று இடம்பெற்ற கூட்டமைப்பு வேட்பாளர் தெரிவில் எத்தனை சர்ச்சைகள் இருக்கின்றது. தெரிவு செய்யப்பட வேண்டிய எத்தனை நேர்மையாளர்கள் வெளியில் புறம்தள்ளப் பட்டுள்ளார்கள்.

முதலாவது ஜெனிவா மாநாட்டில் தமிழர்களுக்கு பிரச்சினை உண்டென்று பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தும் சம்பந்தர் உட்பட அந்தக் கட்சி போகவில்லை. அப்போது பி.பி.சி.வானொலி இவர்களிடம் ஒரு கேள்வி கேட்டது ஏன் ஐயா போகவில்லை என்று. அதற்கு அவர் பதில் கூறினார், நீங்கள் வீண் விவாதங்களைத் தொடுத்து பாமர மக்களை குழப்பத்திற்குள் மூழ்கவைக்காதீர்கள். பாமர மக்கள் பாமர மக்கள் என்று மக்களை மூட்டாள் ஆக்குகின்ற செயற்பாட்டையே இவர்கள் தொடர்ந்து செய்தார்கள். இதற்குத்தான் மகிந்த தேசப்பிரிய ஒன்று சொல்லியிருந்தார், ஆயுதம் பேசும்போது வாய் மௌனித்தது.வாய் பேசும்போது ஆயுதம் மௌனித் திருக்கின்றது என்று. இன்று மக்கள் அனைவரும் சுதந்திரமாக பேசுகின்றார்கள். விழித்திருக்கின்றார்கள். இந்த நாட்டில் தற்போது கருத்துச் சுதந்திரம் பிறந்திருக்கின்றது. குறை நிறைகளை அனைவரும் கதைக்கின்றார்கள். இவ்வாறு இருக்கின்ற போது இந்தச் சூழலைக் குழப்புகின்ற வகையில் பச்சோந்திகளாகத் தொழிற்படுகின்ற அரசியல்வாதிகளால்தான் மீண்டும் இந்த நாட்டிற்கு இழப்புக்கள் தொடரப் போகின்றன. தமிழ் மக்களிற்கான விடிவினை இந்த பச்சோந்தி அரசியல் வாதிகளால் பெற்றுக்கொடுக்க முடியாது. இது தான் உண்மை. இதை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பெரும்பாலான சபைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கைப்பற்றியிருந்தது. இன்று வரை கூட்டுகின்ற தும்புத்தடியைக் கூட வாங்குவதற்கு இந்தக் கூட்டமைப்புக்கு வழியில்லை. 22 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்தபோது, இவர்களுக்கு இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் கிடைத்தன. இந்த பலமான சந்தர்ப்பங்கள் உருவாகியும் கூட எது நடந்தது? முள்ளிவாய்க்காலில் மக்களின் அவல நிலைகள் தான் மிஞ்சியது. இன்று எந்த நிலைப்பாட்டில் இவர்கள் எப்படி வெற்றி பெற்றாலும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துதான் செயற்பட வேண்டும். இவர்கள் நடந்ததை நடக்கவில்லை. என்பார்கள். நடக்காததை நடந்ததென்பார்கள். இந்தக் கூட்டமைப்பில் குறிப்பாக ஒரு ஆறு பேரைத் தவிர சர்வதேச நாடுகளிற்குச் செல்வதற்கு விசாவே இந்த அரசு கொடுக்காது. அப்படியிருக்கும்போது மாகாண சபை அதிகாரங்கள் எப்படி கிடைக்கப்போகின்றது. மக்கள் மண் வாசனை நிமித்தம் மாற்றுவழியின்றி இவர்களுக்கு வாக்களிக்கலாம். ஆனால், மாகாண சபை அதிகாரங்களை இவர்கள் மத்திய அரசிடமிருந்து என்றுமே பெற்றெடுக்க முடியாது.

இறுதியாக ஒன்றை தமிழ்மக்களுக்கு ஆணித்தரமாகச் சொல்ல விரும்புகின்றேன். விடுதலைப் புலிகள் என்ற பெயரில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப்பார்த்து வாக்குகளைவீண்விரயமாக்கும் போக்கு என்று எம்மக்களிடமிருந்து விலகுகின்றதோ அன்றுதான் அர்த்தமான அரசியல் அரங்கேறி தமிழ் மக்களுக்கான விடுதலைப்பயணம் தொடர ஆரம்பிக்கும். எங்களுடைய சிந்தனைகளே எங்களுடைய அழிவுகளுக்குக் காரணம். ●

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி

# 4000 மில்லியன் ரூபா நஷ்டஈட்டுக் கோரிக்கை



ஐ.தே.க.விலிருந்து விலகி 25 கோடி ரூபாவை பெற்றுக் கொணடே ஸ்ரீலங்கா சு.க.வில் இணைநது கொண்டார் என தம் மீது சுமத்தபபட்டுள்ள அவதூறு களுக்கு எதிராக 4000 மில்லியன் ரூபாவை நட்டஈடாக நாடாளு மன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கோரியுள்ளார்.

இவர் தனது கட்சியை மாத்திரமன்றி மதத்தினையும் மாற்றிக் கொண்டுள்ளார் என அவர் மீது ஏற்படுத்தப்பட்ட அவதூறுடன் தொடர்புடைய 8 பேரிடம் 4000 மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரி தயாசிறி ஜயசேகர வின் சட்டத்தரணி சுதந்த சென ரத் பண்டாரவினால் நஷ்டஈடு கோரும் முன்னறிவித்தல் அனுப் பபபட்டுள்ளது.

குறித்த நபர்களுக்கு இது பற்றி இம் மாதம் 23 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் அவர்கள் 7 நாட் களுக்குள் இக்குற்றச்சாட்டினை ஏற்று அதற்கான பதில் வழங்க வேண்டும் இல்லையெனில் நீதி மன்றில் வழக்குத் தொடரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களான ரஞ்சன் ராம நாயக்க மற்றும்அகில விராஜ் காரியவசம் ஆகியோருக்கு இவ் நஷ்டஈடு கோரும் முன்ன றிவித்தல் அனுப்பபப்பட்டுள்ளது.

பத்திரிகைகளினூடாக இவ ருக்கு எதிரான அவதூறுகளை ஏற் படுத்தியிருந்த பத்திரிகை ஆசிரியர்களுக்கும், அச்செய்தி களை எழுதிய பத்திரிகையாளர் களுக்கும் இந்த நஷ்ட ஈடு கோரும் முன்னறிவித்தல் அனுப்பபப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி உறுப் பினர்களான ஹரின் பிரனாந்து மற்றும் தயா கமகே ஆகியோர் அதனுடன் தொடர்பான பத்திரிகை களுக்கும் நஷ்டஈடு கோரி அறிக்கை அனுப்புவதற்கான சட்ட நடவடிக்கை எடுத்திருப்ப தாகவும் குறிப்பிட்டார்.

# பௌத்த துறவியாகும் பிரபல நடிகர் சனத்குணதிலக



பிரபல திரைப்பட நடிகரும், அரசியல்வாதி யுமான சனத் குணதிலக்க அண்மையில் பௌத்த துறவற வாழ்க்கையை ஆரம்பித்தார்.

ஹங்குராங்கெத்த விமலரட்ன தேரர் என்ற பெயரில் பௌத்த பிக்குவாக புதிய பரிணாமம் எடுத்துள்ளார்.பென்தர சபுகொட விஹாரையில் சனத் குணதிலக தனது பௌத்த துறவற வாழ்க்கையை ஆரம்பித் துள்ளார். எனினும், இந்த பௌத்த துறவற வாழ்க்கை தற்காலிகமானது என தெரிவிக்கப்படுகிறது.

பௌத்த மத வழிபாட்டு முறைகளின் சகல நியதிகளையும் பின்பற்றி ஒரு வார காலம் துறவறத்தை பேணப் போவதாக அவர் அறிவித்துள்ளார்.துறவற வாழ்க்கையின் மகிமையை அறிந்து கொள்ளவும், எதிர்காலத்தில் நடிக்க உள்ள திரைப்பட மொன்றிற்கான அனுபவங்களை பெற்றுக் கொள்ளவும் இவ்வாறு பௌத்த துறவறத்தை தழுவிக் கொள்வதாக துறவறம் பூணு வதற்கு முன்னதாக சனத் குணதிலக ஊடகங்களுக்கு தெரிவித் துள்ளார்.

# 20 பெண்கள் கைது



கொழும்பு புறநகர் பகுதியான சீதுவையில் விபசாரத்தில் ஈடுபட்ட சந்தேகத்தின்பேரில் 20 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித் துள்ளது. சீதுவை பிரதேசத்தில் அமைந்துள்ள இரவு நேர விடுதி யிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித் துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 20 முதல் 37 வயதுக் கிடைப்பட்டவர்கள் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேர விடுதியின் முகாமையாளரும் கைது செய்யப்பட் டுள்ளார். கைது செய்யப்பட்ட அனைவரும் நீதமன்ற உத்தரவின் படி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அஷ்ரப்பின் பணியைத் தொடர்வதால் அரசியல் பயணம் வெற்றி

## அமைச்சர் அதாவுல்லா

அஷ்ரபின் பணியினைத் தொடர்வதனாலேயே எனது அரசி யல் பயணம் வெற்றி பெற்றுள் ளது என தேசிய காங்கிரஸின் தேசியத் தலைவரும் உள்ளூ ராட்சி மற்றும் மாகாண சபை கள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

கல்முனை சந்தாங்கேணி மைத்தானத்தில் கடந்த சனிக் கிழமை நடைபெற்ற கால்பந் தாட்ட போட்டியில் உரையாற் றும்போதே அமைச்சர் அதா வுல்லா மேற்கண்டவாறு தெரி வித்தார். அவர் அங்கு தொடாந்து உரையாற்றுகையில்,

கட்சிகள் காலத்தின் தேவை. முஸ்லிம் காங்கிரஸ் இருக்கும் போதே தேசிய ஐக்கிய முன்ன ணியினை தலைவர் அஷ்ரப் உருவாக்கினார். கட்சியின் பெயர் முககியமல்ல. அதன் தலைமைத் துவமும் வழி நடத்தல்களுமே முக கியமானது. பெரும் தலைவர் அஷரபோடு பயணித்து அவரின் பயணத்தின் வழி நடத்தல்களை கற்றுக்கொண்டதன் பயனாகவே இன்று எமது அரசியல் பயணம் வெற்றிப்பாதையில் நகர்ந்து கொண்டிருக்கிறது.

எந்தவொரு விடயமாக இருந் தாலும் அது தொடர்பில் நல்ல எண்ணம் வேண்டும். அப்போது தான் அது சிறந்த வாழ்வை நமக குத் தரும் எண்ணமே வாழ்க்கை யாக அமைகிறது. ஒரு குடும்பத் தில் 3 ஆண் பிள்ளைகளை பரிபாலிக்க முடியாது எத்தனை பெற்றோர்கள் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு நமது சொந்தப் பிள்ளைகளி டையே ஏற்படும் சிக்கல்களைக் கூட சரியான முறையில் கையாள முடியாத நாம், மூவின மககளும் வாழும் இந்த நாட்டில் சமூகங் களுக்கிடையே ஏற்படுகின்ற பிரச் சினைகளை அவசரப்பட்டு கையாள முற்படுவதேன். இளைஞர்களை உணர்ச்சி வசப்படுத்தி, பொது மேடைகளில் வாய்கிழியப் பேசி, பின்னர் அவை எல்லாமே திறக் கப்பட்ட சோடா போத்தலின் நிலையை அடைய வேண்டுமா?

முஸ்லிம்களால் வாய் கிழி யப் பேச மாத்திரம்தான் முடி யும் என்று நம்மை நாம் பகிரங் கப்படுத்திக்காட்ட வேண்டுமா? அதை விட பேசாமல் இருந்து எவ்வாறு சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற முடியும் என்று சிந்திப்பது மேல் என்று எண்ணுபவன் தான் நான் என்றார்.



# வெளிநாட்டுப் பயணத்தை நிறுத்துவது பெண்களுக்கு ஏற்படுத்தும் அநீதியாகும்

பெண்கள் வெளிநாடு செல் வதை உடனடியாக நிறுத்த முடியாது என வெளிநாட்டு வேலை வாய்ப்பு நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

வெளிநாட்டு நலன்புரி நிதி யத்தின் மூலம் 7 பேருக்கு 15 இலட்சம் ரூபா நிதி வழங்கல் நிகழ்வு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலை மையகத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

பிள்ளைகளுக்கு சிறந்த கல் வியை வழங்கவும் குடும்பத்தின் எதிர்காலம் முன்னேற்றத்திற்கு பணம் தேடுவதற்காகவும் அநேக மான தாய்மார் தமது பிள் ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றனர்.

இந்த நிலைமையில் பெண் கள் வெளிநாடு செல்வதனை ஒரேயடியாக நிறுத்த முடியாது. அவ்வாறு செய்தால் அவர்க ளுக்கு பெரும் அநீதி ஏற்படும். பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதனை ஒரே இரவில் நிறுத்துமாறு அனேக அரசியல் வாதிகள் நிர்ப்பந்தம் செய்கின் றனர்.

ஆனால் அமைச்சர் என்ற வகையில் எனக்கு ஜனாதிபதி பொறுப்பொன்றை ஒப்படைத் திருப்பதால், அவற்றை சிறப்பாக நிறைவேற்ற வேண் டும்.

வெளிநாட்டு வேலைக்காக செல்லும் போது வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ள வேண்டும். இது பாதுகாப்பு, நலன்புரி, காப்புறுதி நடவடிக் கைகளுக்கான பணமாகும்.

சிலர் பணியகம் தொழி லுக்கு செல்வோரிடம் பணம் மட்டுமே அறவிடுகின்றன. அவர் களுக்கு எதனையும் செய்வ தில்லை எனத் தெரிவிக்கின்றனர். ஆனால் இவ்வாறான பெறும் தொகை பணம் வழங்கப்படு வது இப்போதே இவர்களுக்கு தெரியவந்துள்ளது.

பதிவு செய்யாமல் வெளி நாடுகளுக்கு செல்வோர் சார் பிலும் அசௌகரியங்கள் ஏற்பட் டால் அவர்களுக்கும் நட்டஈடு வழங்க நான் உத்தரவிட்டுள் ளேன்.

பெண்கள் வெளிநாடு செல் வதைக் குறைப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குடும்பப் பின்னனி அறிக் கையை கட்டாயமாக்குதல், தேசிய தொழில் திறன் சான்றிதழின் தம்மட்டத்தை கட்டாயப் படுத்துதல், அதி குறைந்த வயதெல்லையை நிர்ணயித்தல் இதில் பிரதான மாகும்.

எவ்வாறாயினும் தொழில் சார்ந்த வேலைகளுக்காக ஆண் களையும், பெண்களையும் வெளிநாடுகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது என அமைச்சர் தெரிவித் தார்.

# முஸ்லிம் காங்கிரஸின் உதவியின்றி ஐ.தே.க.ஆட்சியமைக்க முடியாது

## நீதியமைச்சர்

முஸ்லிம் காங்கிரஸின் உத வியின்றி ஐ.தே.க. ஆட்சிய மைக்க முடியாது என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளாா.

மத்திய மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு கண்டி, மஹிய்யாவையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில, மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் நோக் கங்களில் ஒன்று தன்னைப் பாது காத்துக் கொள்வதற்கு என்பதில் ஐயமில்லை. மத்திய மாகாணத் தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனித்து போட்டியிடு கின்றது.

இவர்களை எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியகட்சி விமர்சிப்ப தில்லை. எதிர்காலத்தில் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி அமைக்க வேண்டுமானால் அமைசசர் ஆறு முகம் தொண்டமானின் உதவி தேவைப்படும் என்பதால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை விமர் சிப்பதில்லை. இதேநிலை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் உண்டு. இத்தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை விமர் சனத்திற்குட்படுத்தாத ஆளும் தரப்பும் மற்றும் எதிர்க்கட்சிகள் எம்மை விமர்சிப்பது பொருத்த மானதா? என்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்றார்.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 3 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கிழக்கு ஐரோப்பிய நாடான பெலாரஸிற்கு சென்றடைந்துள்ளார். பெலாரஸின் மின்ஸ்க் தேசிய விமான நிலையத்தை சென்றடைந்த ஜனாதிபதியை- அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் வெலாத்மீர் மகாய் வரவேற்கும் காட்சிகள்....

# மாற்றுவலுவுள்ளோருக்கான நலனோம்பு அடையாள அட்டை

## -இறுதிக்கட்ட வேலைத்திட்டம்-

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் மாற்றுவலுவுள்ளோர்களுக்கு சமூக நலனோம்பு அடையாள அட்டை வழங்குவதற்கான வேலைத் திட்டத்தின் ,இறுதிக் கட்டம் ஓகஸ்ட் 29, 30 , ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன. இதற்கான ஏற்பாடுகளை கரைச்சிப் பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் மேற்கொண்டுள்ளார்.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்களின் இரண்டு குழுவினர் ஒரே நேரத்தில் இவ் வேலைத்திட்டத்தில் ஈடுபட உள்ளனர்.மாற்றுவலுவுள்ளோர் அனைவரும் ஏற்கனவே 4 பக்க படிவம் நிரப்பி பதிவு செய்யப் பட்டுள்ளனர். பதிவு செய்யாமல் தவறவிடப்பட்டோரும் இந்த வேலைத்திட்டத்தில் பதிவு செய்யப்பட உள்ளனர்.

மாற்றுவலுவுள்ளோர் அனைவரும் இலவசமாக புகைப்படம் எடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட உள்ளனர். பின்னர் சமூக நலனோம்பு அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப் படும்.

இதற்காக அவர்கள் கட்டாயம் தமது குடும்ப அட்டை, அடையாளஅட்டை சகிதம் அறிவிக்கப்படும் இடங்களில் உள்ள கிராம அலுவலர் அலுவலகங்களுக்கு உரிய நேரத்தில் சமூகமளிக்க வேண்டுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

இவ் வேலைத் திட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கிராம வெளிக்கள உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பனர், சமூக சேவைகள் தொண்டர் ஆகியோரும் கிராம அலுவலருடன் இணைந்து பணியாற்ற பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் வகை செய்துள்ளார்.

எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை முதலாவது குழுவினர் காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரை சிவிக் சென்ரர் கிராம அலுவலர் பிரிவிலும், அதே தினம் மு.ப 10.40 மணி முதல் பிற்பகல் 1.40 மணி வரையும் வட்டக்கச்சி கிராம அலுவலர் பிரிவிலும் , பிற்பகல் 1.45 மணி முதல் மாலை 3.45 மணி வரையும் மாயவனூர் கிராம அலுவலர் பிரிவிலும் , பிற்பகல் 4 மணி முதல் மாலை 6 மணி வரையும் மாவடியம்மன் கிராம அலுவலர் பிரிவிலும் இவ் வேலைத் திட்டத்தைச் செய்ய உள்ளனர்.

இரண்டாவது குழுவினர் அதே தினம் காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரையும் புதுமுறிப்பு கிராம அலுவலர் பிரிவிலும், மு.ப 10.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரையும் ஊற்றுப்புலம் கிராம அலுவலர் பிரிவிலும் , பிற்பகல் 12.30 மணி முதல் மாலை 4.30 மணி வரையும் கோணாவில் கிராம அலுவலர் பிரிவிலும் , மாலை 4.30 மணி முதல் பிற்பகல் 6.30 மணி வரையும் கண்ணகைபுரம் கிராம அலுவலர் பிரிவிலும் இவ் வேலைத்திட்டத் தைச் செய்ய உள்ளனர்.அடுத்த நாள் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதலாவது குழுவினர் காலை 7.30 மணி முதல் மு.ப 11.00 மணி வரையும் இராமநாதபுரம் கிராம அலுவலர் பிரிவில் இவ் வேலைத்திட்டத்தைச் செய்ய உள்ளனர்.அதே தினம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரண்டாவது குழுவினர் காலை 7.30 மணி முதல் மு.ப 10.00 மணி வரையும் ஸ்கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவிலும் ,காலை 10 மணி முதல் 11.30 மணி வரையும் அக்கராயன்குளம் கிராம அலுவலர் பிரிவிலும் , மு.ப 11.30 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையும் ஆனைவிழுந்தான் கிராம அலுவலர் பிரிவிலும் , பிற்பகல் 1.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரையும் வன்னேரிக்குளம் கிராமஅலுவலர் பிரிவிலும் இவ் வேலைத் திட்டத்தைச் செய்ய உள்ளனர்.

மாற்றுவலுவுள்ளோர் அனைவரையும் உரிய நேரத்தில் உரிய இடங்களில் சமூகமளிக்கு மாறும் பிரதேசசெயலர் அறிவித்துள்ளார்.

இந்த நேரஒழுங்கில் மாற்றுவலுவுள்ளோரைச் சமூகமளிக்குமாறு பிரதேச செயலரால் அறிவிக்கப்பட்டுள்ளது. நேரடியாக சமூகமளிக்க முடியாத மாற்றுவலுவுள்ளோருக்கு வீட்டில் சென்று உரிய அதிகாரிகளால் புகைப்படம் எடுக்கவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 42 கிராம அலுவலர் பிரிவில் 29 கிராம அலுவலர் பிரிவுகளில் இவ்வேலைத்திட்டம் ஏற்கனவே நிறைவு செய்யப் பட்டுள்ளது. (90)

# வளலாய்,தம்பாலை பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் அதிகரிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலியிலுள்ள வளலாய், தம்பாலை, கதிரிப்பாய் போன்ற பிரதேசங்களில் கட்டக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக்காணப்படு வதாகப் பொது மக்கள் தொவிக்கின்றனர்.

பெரும்பாலும் இவை வீதிகளிலே தமது இரவுப் பொழுதைக்கழித்து வருவதுடன் விதிகளில் போக்குவரத்தை மேற்கொள்ளும் பயணிகளும் இவற்றால் தாம் பாதிக்கப் படுவதாகத் தெரிவிக்கின்றனர் அத்துடன் இவை கூட்டமாகச் சென்று விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள பயிர்வகைகளுக்கு சேதத்தை ஏற்படுத்தி வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இவை வீடுகளில் வளர்க்கும் கோழிகளையும் பிடித்து உண்பதற்கும் முயற்சிப்பதாகவும் மக்கள் கூறுகின்றனர்.மற்றும் மேய்ச்சலுக்காக வயல் நிலங்களில் கட்டிவிடப்படும் ஆடுகளையும் இவை துரத்திச் திரிவதாகவும் இதனால் அவை கட்டிவிட்ட இடங்களில் இருந்து திசை மாறி வேறு இடங்களுக்கும் இராணுவ முகாம்களுக்குள் சென்று விடுவதாகவும் இதனால் அவை காணாமல் போகும் சந்தர்ப்பங்களும் ஏற்படுவதுடன் இவற்றை தேடி உரியவர்கள் அலைந்து திரிவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சில வேளைகளில் குறித்த நாய்க்கூட்டங்கள் ஒன்றாகச் சேர்ந்து ஆடுகளைக் கடித்துக் குதறி உண்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

எனவே பல கஷ்டத்தின் மத்தியில் ஆடுகளை பராமரித்து வளர்த்தும் கட்டாக்காலி நாய்களுக்கு அவை இரையாவதையிட்டு தாம் மிகவும் கவலையடைவதுடன் தமக்குப்பாரிய வருமான இழப்பும் ஏற்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களை கட்டுப்படுத்துமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (85)

# நிறுத்தப்பட்ட வீதிப்புனரமைப்பு நெருக்கடியில் போக்குவரத்து

(சுன்னாகம்)

எழாலை ஸ்ரீ முருகன் பாடசாலையை அண்டிய பிரதேசத்தில் வைரவர் கோயிலடியில் வீதி அகலிப்புக்காக வீதி யோரத்தில் கிரவல் மண் கொண்டு நிரப்புவதற்காக ஒரு அடி ஆழமான 3அடி அகலத்தில் மண் அகழப்பட்டு கிடங்காக்கப்பட்ட நிலையில் குறித்த வீதியின் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

எனினும்வீதி இவ்வாறான நிலையில் உள்ளதால் அப்பிரதேசத்தில் போக்குவரத்து செய்யும் பயணிகளும் வாகனங்களும் தொடர்ந்து விபத்துக்களை சந்தித்து வருகின்றனர். உரியவர்கள் நடவடிக்கை எடுத்து வீதிக்கு விமோசனம் தருவார்களா? என பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதேவேளை ஏழாலை மயிலங்காடு ஊடாக புன்னாலைக்கட்டுவன் செல்லும் வீதி கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் வீதி அகலிப்பு பணிக்கு என அப்பிரதேச குடியிருப்பாளர்களின் வேலிகள் அகற்றப்பட்ட நிலையில் தற்போது சீரமைக்கப்பட்டுள்ளது. (66)

# பொங்கல் உற்சவம்

(நெடுங்கேணி)

நெடுங்கேணியில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நொச்சியடி ஐயனார் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் கடந்த சனிக்கிழமை வெகுசிறப்பாக இடம்பெற்றது.

இப்பொங்கல் உற்சவம் ஆலய பிரதம பூசகர் இ.கோபலசிங்கத்தினால் பண்டைய முறைப்படி மடப்பண்டங்கள் எடுக்கப்பட்டு ஆலயத்தை சென்றடைந்து பூசைகள் இடம்பெற்றது. தொடர்ந்து ஆடியார்களினால் காவடி, பாற்செம்பு, தீசசட்டி, போன்ற நேர்த்திக்கடன்கள் செய்துடன் இரவு நிகழ்வாக கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இதில 1500 இற்கும் மேற்பட்ட அடியார்கள் கலந்து கொண்டனர். (40)

# தரமுயர்த்தல் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழில்நுட்ப வியல் சேவை 1 ஆம் வ்குப்பு அலுவலர்களை விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. பரீட்சை கொழும்பில் நடத்தப்படவுள்ளதுடன் பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மொழி மூலத்தில் மாற்றங்கள் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் சிங்களம், தமிழ்,ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி மூலகங்களிலும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்கள் கிடைக்குமிடத்து அம்மூன்று மொழி மூலகங்களிலும் பரீட்சை நடாத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ,ஒழுங்குபடுத்தல் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,-இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை பத்திரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலதிக விபரங்களை 23.08.2013 திகதிய வர்த்தகமானியை பார்வையிட முடியும்.

## கிளை திறப்பு

சிங்கர் நிறுவனத்தின் யாழ். கிளை திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 11.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இக்கிளை அலுவலகம் இல. 86,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியில் அமைக்கப்பட்டுள்ளது.

## முரசின் இன்றைய பலன்

(27.08.2013 செவ்வாய்க்கிழமை)



விஜய வருஷம் ஆவணி மாதம் 11 ஆம் திகதி.
கார்த்திகை விரதம் பரணி நட்சத்திரம் பி.ப 02.25 வரை,பின் கார்த்திகை
ஸப்தமி திதி , சித்தயோகம்
இராகுகாலம 03.05- 04.35 வரை.
சுபநேரம 10.35- 12.05 வரை.

ஜோதிட விதயா ரதனா வி.ஏ.சிவராசா அவாகளால கணிககபபடடது.

| | |
|---|---|
| மேடம் | கடன்பெற வங்கியிலிருந்து கழதம், நோய்க்கட்டுப்பாட்டில்,விசாப்பிரச்சினையினால் தாயகம் திரும்பும் நிலை,நடமாடும் சேவை மூலம் பயன். |
| ரிஷபம் | சவித்திறன் குறைபாட்டை நீக்க வைத்திய ஆலோசனை,தடைப்பட்ட விவாகத்திற்கான சம்மதம், பிதாவினால் உதவி,காசோலை மோசடி. |
| மிதுனம் | பொறுத்த கட்டத்தில் நண்பர் காப்பாற்றுதல், வாகனம் மாற்றி எடுத்தலினால் களேபரம், அசாதாரண பேகத்தினால் காவல்துறையினரால் எச்சரிக்கை. |
| கடகம் | புதிய ஒப்பந்தங்களை கைவிடத்திட்டம், வைத்திய மனையில் தாயாரைச் சேர்த்தல், வரன்தேட தரகர்களை நாடுதல், இனிப்புப்பண்டங்களினால் தேகசுகம் பாதிப்பு. |
| சிம்மம் | ஒப்பந்த நிமித்தம் கடன்பட்டதால் கவலை, சிறுநீரகக் கோளாறு அச்ச மூட்டுதல்,புதிய பொறுப்புக்களைச் சுமக்க நேரிடல். |
| கன்னி | இடமாற்றம் பற்றிய செய்தியால் கவலை, பிராணிகள் குறுக்கே பாய்ந்ததினால் விபத்து, வாடகைக்கு வீடு பெற முடியாது கவலை தேக்கம், கடன்காரரின் தொல்லை. |
| துலாம் | கடந்த கால துன்பச் செயல் மனதை வாட்டுதல், இழுபட்டுக்கொண்டிருந்த காரியம் முற்றாகும் நிலைப்பாடு,கௌரவம் கொடுக்காமையால் புறக்கணிப்பு, சுவீப்பில் அதிர்ஷ்டம். |
| விருச்சிகம் | மனக்கவலையினால் நித்திரைக்குழப்பம், வியாழ சுகமின்மையால் காரியம் இழுபடல்,நம்பி நடந்தமையினால் மோசடி,வாக்கினால் காரிய சித்திபெறல். |
| தனுசு | அவசரப்பட்டதினால் பொன்னான சந்தர்ப்பம் இழக்கும் நிலை,சளி நோய் மாறும் அறிகுறி, தனித்திருந்தமையினால் அச்சமேற்படல், கடன்கட்ட நண்பர் உதவி. |
| மகரம் | மீற்றர் வட்டியினால் துயரம்,காசோலை திரும்புவதால் கணக்கு அற்றுப்போகும் நிலைப்பாடு, தகராறு சுமுகமடைதல், விவாதிப்பதினால் எதிரி உருவாகும் நிலை. |
| கும்பம் | இழுபட்ட வெளியூர் பயணம் வெற்றியைத்தக்க வைத்தல்,உளவளநிலையம் சென்று மனச்சாந்தி பெறும் நிலைப்பாடு,தனியார் தொழிலைக்கைவிட்டுவிட்டு அரசுத் துறையில் சேர பச்சைக்கொடி காட்டல். |
| மீனம் | கண்ணுக்கு வந்த துன்பம் புருவத்துடன் சென்றதால் மகிழ்ச்சி,ஒரு தலைக்காதலால் துன்பநிலை, மாமன்மாரின் உறவில் விரிசல்,மனத்துணிவினால் ஒழுக்கத்தைக் காப்பாற்றுதல். |

# இங்கிலாந்து முன்னேற்றம்

(டுபாய்)

சர்வதேச கிரிக்கெட் சபையால் வெளியிடப்பட்டுள்ள டெஸ்ட் தரப்படுத்தலில் இங்கிலாந்து அணி இரண்டாமிடத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆஷஸ் டெஸ்ட் தொடர் நிறைவடைந்ததைத் தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட் சபை டெஸ்ட் போட்டிக்கான தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. ஆஷஸ் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதனால் இங்கிலாந்து அணி மூன்றாவது இடத்திலிருந்து இரண்டாது இடத்திற்கு முன்னேறியுள்ளது. இதேவேளை, நான்காவது இடத்திலிந்த அவுஸ்ரேலிய அணி ஐந்தாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

தரப்படுத்தல் விபரம் வருமாறு

| இல: | நாடுகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 01) | தென்னாபிரிக்கா | 135 |
| 02) | இங்கிலாந்து | 116 |
| 03) | இந்தியா | 116 |
| 04) | பாகிஸ்தான் | 102 |
| 05) | அவுஸ்ரேலியா | 101 |
| 06) | மே.தீவுகள் | 099 |
| 07) | இலங்கை | 088 |
| 08) | நியூசிலாந்து | 079 |
| 09) | பங்களாதேஷ் | 043 |

# ஹடின் சாதனை



ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் அதிக பிடிகளை எடுத்து அவுஸ்ரேலிய விக்கெட் காப்பாளர் ஹடின் புதிய சாதனை படைத்துள்ளார். முதல் இனிங்ஸில் 3 பிடிகளையும், 2ஆவது இனிங்ஸில் ஒரு பிடியையும் எடுத்த அவுஸ்ரேலிய விக்கெட் காப்பாயர் பிராட் ஹடின் புதிய உலக சாதனைக்குசொந்தக்காரர் ஆனார். இந்த ஆஷஸ் தொடரில் அவர் மொத்தம் 29 பிடிகளைப் பிடித்துள்ளார். இதன் மூலம் ஒரு டெஸ்ட் தொடரில் அதிக பிடிகளைப் பிடித்தவர் என்ற புதிய சாதனை அவரது வசம் ஆனது. இதற்கு முன்பு 1982, 1983ஆம் ஆண்டு ஆஷஸ் தொடரில் அவுஸ்ரேலிய விக்கெட் காப்பாளர்ரோட் மார்ஷ் 28 பிடிகளை எடுத்ததே (5 டெஸ்ட்) இந்த வகையில் சாதனையை இருந்தது. அதனை 35 வயதான ஹடின் முறியடித்துள்ளார்.




# ஆஷஸ் தொடர் இங்கிலாந்து வசம்

(லண்டன்)

இங்கிலாந்து,அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் ஓவலில் நடைபெற்ற ஐந்தாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் நிறைவு பெற்றது. இதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 3-0 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டது. ஒரு போட்டியில் கூடவெற்றிபெறமுடியாத அவுஸ்ரேலிய அணிக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்ரேலிய அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் நான்கு போட்டியின் முடிவில், இங்கிலாந்து அணி 3-0 என முன்னில்ல வகிக்கிறது. ஐந்தாவது மற்றும் கடைசிப் போட்டி, லண்டனில் உள்ள ஓவல் மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய அவுஸ்ரேலிய அணி ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 492 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில், முதல் இனிங்ஸில் இங்கிலாந்து அணி நான்கு விக்கெட்டுக்களை 247 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.. கனமழை காரணமாக நான்காவது,நாள் ஆட்டம் இரத்தானது.

ஐந்தாம் நாள் நேற்று முன்தினம் தொடர்ந்து முதல் இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 377 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிறிஸ் வோக்ஸ் 25, மட் பிரையர் 47, ஸ்வான் 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரார்க் மூன்று, ஹரிஸ் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய அவுஸ்ரேலியா அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. இதில் வட்சன் 26, பால்க்னர் 22, கிளார்க் 28, ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் புரொட் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

227 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக போட்டி நிறுத்தப்பட்டது. இதில் பீற்றர்சன் 62, ட்ரொட் 59, குக் 34, இயன் பெல் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹரிஸ் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக வட்சன், தொடர் நாயகனாக இயன்பெல் மற்றும் ஹரிஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். ஐந்தாவது போட்டி சமநிலையில் நிறைவுபெற்றது. இதன் மூலம், ஆஷஸ் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 3-0 என கைப்பற்றியது.


# நடுவருடன் வாக்குவாதம்




இங்கிலாந்துடனான ஆஷஸ் தொடரின் இறுதி டெஸ்ட் போட்டியின் இறுதி நாளின்போது போதிய வெளிச்சமின்மை எனக் கூறி ஆட்டத்தை நிறைவு செய்த பாகிஸ்தான் நடுவர் அலீம் தாருடன் அவுஸ்ரேலிய அணிக் கப்டன் கிளார்க் மோதல் போக்கைக் கடைபிடித்தார்.

மைக்கல் கிளார்க்கை தொட்டுப் பேச முயன்ற அலீம் தாரிடம் என்னைத் தொடாதே என்று கிளார்க் மிகவும் ஆக்ரோஷமாக தெரிவித்துள்ளார். வெளிச்ச மீற்றரை வைத்து அலீம் தாரும், குமார் தர்மசேனாவும் போட்டி நிறைவு செய்யபோது கிளார்க் ஆத்திரமடைந்துள்ளார். அப்போது நடுவர்கள் அருகில் கிளார்க் சென்றவேளை, நடுவர் அலீம் தார் கிளார்க்கை தள்ள முயன்றுள்ளார். உடனே கிளார்க் மேலே கை வைக்காதே என்று எச்சரித்துள்ளார். இது குறித்து கிளார்க் குறிப்பிடுகையில், நான் என்ன கூறினேன் என்பது ஞாபகம் இல்லை. அலீம் தார் என்னைத் தொட முயன்றார் நான் அவரிடம் நயமாகவே கூறினேன், மேலே கை வைக்காதீர்கள் என்று. ஏனெனில் நான் அவர் மேல் கை வைத்தால் 3 போட்டிகளில் நான் விளையாட தடை விதிக்கப்படும். அதனால் அமைதியாக மேலே கை வைக்கவேண்டாம் என்றேன். ஒரு வீரர் நடுவரைத் தொட அனுமதி கிடையாது. ஆனால் இதனால் எனக்குச் சொந்தமாக எந்த வருத்தமும் இல்லை என்றார்.

# கிண்ணம் வென்றது பயஸ் ஜோடி



(கரோலினா)

வின்ஸ்டன் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், கனடாவின் டேனியல் நெஸ்டர் ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

அமெரிக்காவில் உள்ள வடக்கு கரோலினாவில், 45ஆவது வின்ஸ்டன் ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடைபெற்றது. இதன் ஆண்கள் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், கனடாவின் டேனியல் நெஸ்டர் ஜோடி, பிரிட்டனின் டொம்னிக், பிலிப்பைன்சின் டிரிட் ஜோடியை சந்தித்தது.

ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய பயஸ் ஜோடி, 'டைபிரேக்கர்' வரை சென்ற முதல் செட்டை 7-6 என போராடி வென்றது. தொடர்ந்து இரண்டாவது செட்டிலும் ஆதிக்கம் செலுத்திய பயஸ் ஜோடி 7-5 என தன்வசப்படுத்தியது. முடிவில், பயஸ்-நெஸ்டர் ஜோடி 7-6, 7-5 என்ற நேர் செட்களில் வென்று சம்பியன் பட்டம் வென்றது.

இத்தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ஆஸ்திரியாவின் ஜோர்ஜன் மெல்ஜர், பிரான்சின் கேல் மான்பில்சை சந்தித்தார். இதன் முதல் செட்டை 6-3 என மெல்ஜர் வென்றார். இரண்டாவது செட்டில் 2-1 என மெல்ஜர் முன்னிலை வகித்த போது, மான்பில்ஸ் காயம் காரணமாக விலகினார். இதையடுத்து ஆஸ்திரியாவின் ஜோர்ஜன் மெல்ஜர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு, சம்பியன் பட்டத்தை வென்றார்.



அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் நேற்றைய தினம் ஆரம்பமான வேளை, முன்னணி வீரர்களான நடால், பெரடர், செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் மைதானத்தில் தோன்றி இரசிகர்களை மகிழ்வித்தனர்.

# நேதாஜியின் வருடாந்த விளையாட்டு

(வல்வை)

வல்வெட்டித்துறை - காட்டுவளவு நேதாஜி இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் 49ஆவது ஆண்டு நிறைவு விழாவும், வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியும் இன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு நேதாஜி உல்லாசக் கடற்கரை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கடல் விளையாட்டுக்கள் உட்பட பல நிகழ்வுகள் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நேதாஜி இளைஞர் விளையாட்டுக்கழகத் தலைவர் நவரெத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற தவிசாளர் நடராசா அனந்தராஜ், சிறப்பு விருந்தினரா்க வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குமாரசிங்க உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். இப்போட்டி நிகழ்வில் கிராம வாசிகளை கலந்து கொண்டு போட்டியாளர்களுக்கு உற்சாகமூட்டுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

# வென்றது ஆர்சனல்



(லண்டன்)

புல்ஹாம் அணிக்கு எதிரான பிரிமியர் லீக் கால்பந்துத் தொடரின் லீக் போட்டியில் ஆர்சனல் அணி வெற்றி பெற்றது.

இங்கிலாந்தில் பிரிமியர் லீக் கால்பந்துத் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் லீக் போட்டியில் ஆர்சனல், புல்ஹாம் அணிகள் மோதின. போட்டியின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ஆர்சனல் அணிக்கு முதல் பாதியில், ஆலிவர் (14ஆவது நிமிடம்), லூகாஸ் (41ஆவது நிமிடம்) ஆகியோர் கோல் அடித்தனர். இதற்கு புல்ஹாம் அணி வீரர்களால் பதிலடி கொடுக்கமுடியவில்லை.

பின், இரண்டாவது பாதியிலும் ஆதிக்கத்தை தொடர்ந்த ஆர்சனல் அணிக்கு ஈலூகாஸ் (68ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு புல்ஹாம் அணியின் டேரன் (77ஆவது நிமிடம்) பதிலடி கொடுத்தார். முடிவில், ஆர்சனல் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

விளையாட்டு செய்திகள்

# மெலிஞ்சிமுனை இருதயராஜாவின் மாபெரும் கால்பந்து கிண்ணம் வென்றது துறையூர் ஐயனார்




(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழகம் நடாத்திய மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை வேலணை துறையூர் ஐயனார் அணி கைப்பற்றிக் கொண்டது.

தீவகப் பிரதேச அணிகளுக்கிடையில் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழகமும், சனசமூக நிலையமும் இணைந்து மாபெரும் கால்பந்தாட்டத் தொடரை நடாத்தியது.

இப்போட்டித் தொடர் கடந்த 17,18,19ஆம் திகதிகளில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

30இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொண்ட இத்தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் புங்குடுதீவு நசரத் அணியும், வேலணை துறையூர் ஐயனார் பி அணியும் மோதின. இதில் ஐயனார் பி அணி 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் புங்குடுதீவு காந்தி அணியும், துறையூர் ஐயனார் ஏ அணியும் மோதின. இதில் துறையூர் ஐயனார் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

ஒரு கழகத்தைச் சேர்ந்த துறையூர் ஐயனார் ஏ, பி. அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன. இதன் காரணமாக போட்டியை நடாத்திய ஊர்காவற்றறை மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியை இறுதிப் போட்டி மோதுமாறு துரையூர் ஐயனார் அணியால் கோரப்பட்டது. இதற்கு இணங்க இறுதிப் போட்டியில் துறையூர் ஐயனார் ஏ அணியும், மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியும் மோதின.

தீவகத்தில் கால்பந்து போட்டியில் முடிசூட மன்னர்களாக வலம் வரும் துறையூர் ஐயனார் அணி போட்டி ஆரம்பித்திலிருந்து பந்தைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. துறையூர் ஐயனாரின் பந்துப் பரிமாற்றம், பந்தைக் கடத்தும் தந்திரம் என்பன மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியை திக்குமுக்கடா வைத்தது. போட்டியின் ஆரம்பத்திலிருந்து ஆதிக்கம் செலுத்திய துறையூர் ஐயனார் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. தீவலகத்தில் இந்தாண்டு இடம்பெற்ற கால்பந்தாட்டப் போட்டிகளில் துறையூர் ஐயனார் அணி பங்குகொண்ட அனைத்து சுற்றுப் போட்டிகளில் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி நிகழ்வில் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் மற்றும் கழகத் தலைவர்கள், வீரர்கள், ஆர்வலர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(21)

## அளவெட்டி மத்தியின் மாபெரும் மென்பந்து தொடர்

(அளவெட்டி)

அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகம் வடக்கு மாகாண அணிகளுக்கிடையில் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரை நடாத்தி வருகின்றது.

இதன் முதற் சுற்று ஆட்டங்கள் பிரதேச ரீதியாக இடம்பெறவுள்ளதாகவும், இதற்கமைய தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம், தீவகம் என அந்தந்த பிரதேச அணிகளுக்கிடையில் தெரிவுப் போட்டிகள் இடம்பெற்று வருவதாகவும், பின்னர் தெரிவு செய்யப்பட்ட பிரதேச அணிகளுக்கிடையிலான போட்டிகள் இடம்பெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதில் அதிகளவிலான மென்பந்து கிரிக்கெட் அணிகள் பங்குகொண்டுள்ளதாகவும், கிண்ணம் வெல்லும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும், ஆட்டநாயகன், தொடர் நாயகன், சிறந்த அணி எனப் பல்வேறு விருதுகளும் வழங்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (93)

## முன்னேற்றம் வேண்டும்

பெரிய அணிகளுடன் மோதுகின்ற போது துடுப்பாட்ட வீரர்கள் நிதானமாக ஆடவேண்டும். எங்களைப் பொறுத்த வரையில் துடுப்பாட்டத்தில் இன்னும் முன்னேற்றம் தேவை. அவ்வாறு முன்னேறும் பட்சத்திலேயே பெரிய அணிகளுக்கு எதிரான போட்டிகளில் சிறப்பாக ஆடி வெற்றிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என சிம்பாப்வே அணியின் கப்டன் பிரண்டன் ரெய்லர் தெரிவித்துள்ளார்.

## இணுவில் கலைஒளி மென்பந்து முத்துத்தம்பி சம்பியன்

(இணுவில்)

இணுவில் கலைஒளி மன்றம் நடாத்திய மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை திருநெல்வேலி முத்துத்தம்பி அணி கைப்பற்றிக் கொண்டது.

இணுவில் கலைஒளி மன்றத்தினால் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் தொடர் நடாத்தப்பட்டது. கடந்த வாரம் இணுவில் கலைஒளி மன்ற மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் உதயசூரியன் அணியும், திருநெல்வேலி முத்துத்தம்பி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய திருநெல்வேலி முத்துத்தம்பி அணி நிர்ணயிக்கப்பட்ட எட்டு ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லவன் 15, கோபி ஒன்பது, விதுன் ஏழு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கனிஸ்ரன், பெஞ்ஜோய் தலா இரண்டு விக்கெட்டுக்களைக்கைப் பற்றினர்.

பதிலுக்கு 41 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய உடுவில் உதயசூரியன் அணி எட்டு ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் பெஞ்ஜோய் 15, வெலிஸ்ரன் ஆறு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுரேந்திரன், கோபி தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போடடியின் ஆட்டநாயகனாக திருநெல்வேலி முத்துத்தம்பி அணியைச் சேர்ந்த லவன், தொடர் ஆட்டநாயகனாகஅதே அணியைச் சேர்ந்த வாமணன், சிறந்த துடுப்பாட்ட வீரராக உடுவில் உதயசூரியன் அணியைச் சேர்ந்த பெஞ்ஜோய், சிறந்தபந்து வீச்சாளராக திருநெல்வேலி முத்துத்தம்பிஅணியைச் சேர்ந்த சுரேந்திரன்ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## மயிலிட்டி வள்ளுவர் சம்பியன்

(இணுவில்)

இணுவில் அறிஞர் விளையாட்டுக்கழகம் நடாத்திய மாபெரும் தாச்சிப் போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை மயிலிட்டி வள்ளுவர் அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அறிஞர் விளையாட்டுக்கழகம் மாவட்ட அணிகளுக்கிடையிலான மாபெரும் தாச்சிப் போட்டியை நடாத்தியது. இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மாலை இணுவில் அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் மயிலிட்டி வள்ளுவர் அணியும், உடுவில் சிந்து அணியும் மோதின. முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடின. முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் 3-3 என்ற பழம் அடிப்படையில் சமநிலையில் இருந்தது.

இடைவேளைக்குப் பின்னர் ஆக்ரோஷம் கொண்ட மயிலிட்டி வள்ளுவர் அணி ஆதிக்கம் செலுத்தியதுடன் மளமளவென்று பழங்களைப் பெற்றுக்கொண்டது. இறுதியில் மயிலிட்டி வள்ளுவர் அணி 7-4 என்ற பழம் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக மயிலிட்டி வள்ளுவர் அணியைச் சேர்ந்த விவேக், சிறந்த அணியாக வைகரை ஏ அணி தெரிவு செய்யப்பட்டது. இப்போட்டி நிகழ்வில் சுன்னாம் பொலிஸ் பொறுப்பதிகாரி, மற்றும் விளையாட்டுக்கழகங்களைச் சேர்ந்த வீரர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், கிராமப் பெரியோர், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியாளர்களுக்கு உற்சாகமூட்டியமை குறிப்பிடத்தக்கது.



## யாழ். மத்திய கல்லூரி பெருவெற்றி

கார்த்தீபன்,செந்தூரன்,விதுஷன் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் யாழ்.மத்திய கல்லூரி அணி பெரு வெற்றிபெற்றது. இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற ஒரு நாள் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி கார்த்தீபனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப்பெற்றது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கார்த்தீபன் ஒரு சிக்ஸர், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 46 ஓட்டங்களைப்பெற்றார். மற்றும் பிரியலக்ஷன் 45, நிசான் 37, கௌதமன் 24, நிக்ஷன் 17 ஓட்டங்களைப்பெற்றனர். பந்து வீச்சில் பவிதரன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பதிலுக்கு 226 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 28.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 75 ஓட்டங்களைப்பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் தசிபன் 20, கிளிங்ரன் 10 ஓட்டங்களைப்பெற்றனர்.பந்து வீச்சில் செந்தூரன் ஏழு ஓவர்கள் பந்துவீசி மூன்று ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், விதுஷன் ஆறு ஓவர்கள் பந்து வீசி ஐந்து ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், கௌதமன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் யாழ்.மத்திய கல்லூரி அணி 150 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.(எஸ்.பி.)

# அரசும் அதிகாரமும்...

**- அ. மார்க்ஸ் -**

ஏதேனும் ஒன்று தம்மைப் பாதிப்பதாக ஒரு பிரிவினர் தடை கோருவது அல்லது நடவடிக்கை எடுக்க அரசை வற்புறுத்துவது என்பன, "அரசை" ஒரு நடுநிலைத் தீர்ப்பாளராக (arbiter) ஏற்றுக் கொள்வதற்கும், அரசிற்கு கடும் அதிகாரங்களை அளிப்பதற்கும் சமம் என்றொரு கருத்தை இணையத்தில் பார்த்தேன்.





தடை, கருத்துச்சுதந்திரம் முதலான விஷயம் ஒரு பக்கம் இருக்கட்டும். அரசைச் சில அம்சங்களில் arbiter ஆக ஏற்கவேண்டிய சூழல் சிறுபான்மையினருக்கு அவசியமாவதை நாம் கவனத்தோடு பரிசீலிக்க வேண்டும்.

தோரோ, டால்ஸ்டாய் போன்ற anarchist சிந்தனையாளர்களை தன் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்ட காந்தி "அரசு எத்தனைக்கு எத்தனை பலவீனமாகவும், அதிகாரங்கள் குறைந்ததாகவும் உள்ளதோ அவ்வளவுக்கு அவ்வளவு மக்களுக்கு நல்லது" என்கிற கருத்தைக் கொண்டிருந்தார். அந்த அடிப்படையிலேயே அதிகாரங்கள் குறைக்கப்பட்ட மத்திய அரசு என்கிற கருத்தாக்கத்தின் அடிப்படையில் "பஞ்சாயத்து ராஜ்" என்பதை முன்வைத்தார்.

ஆனால் இத்தகைய பஞ்சாயத்துராஜ் என்பது கிராம அளவில் சாதி அதிகாரத்திற்கே வழிவகுக்கும், அது தலித்கள், முஸ்லிம்கள் முதலான சிறுபான்மையினருக்கு எதிராக அமையும் என டாக்டர் அம்பேத்கர் அதைக் கடுமையாக எதிர்த்தார். அதை அடிப்படை உரிமை ஆக்க அம்பேத்கர் இறுதி வரை மறுத்தார்.

காலங்காலமாக உரிமைகள் மறுக்கப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு முதலான உரிமைகளை நிறைவேற்ற ஒரு குறிப்பிட்ட அளவு அரசு பலமாக இருப்பதை பெரியாரும் ஏற்றுக் கொண்டார்.

இன்று உலக முதலாளியத்தின் பிடியில் தேசிய அரசுகள் பலவீனப் பட்டுள்ள நிலையில் கார்பொரேட்களில் இட ஒதுக்கீடு சாத்தியமில்லாமல் இருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

இந்த வகையில்தான் அம்பேத்கர், பெரியார் முதலானோர் அடித்தட்டு மக்களின் பிரச்சினைகளில் பிரிட்டிஷ் அரசையும் கூட ஒரு குறிப்பிட்ட அளவு யசடிவைநச ஆகப் பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதைக் காரணங் காட்டியே இங்குள்ள உயர் சாதியினர் அவர்களை ஏகாதிபத்திய ஆதரவாளர்கள் என ஏசினர்.

அரசை நடுநிலை அமைப்பு எனக் கருத இயலாது, அது ஒரு வர்க்க அடக்குமுறைக் கருவி முதலான கருத்துக்களை அம்பேத்கர், பெரியார் முதலானோர் புரிந்துகொள்ள இயலவில்லை என்பதல்ல இதன் பொருள்.

பிரச்சினைகளின் சகல பரிமாணங்களையும் நோக்கினால்தான் extreme positions களிலிருந்து விடுபட முடியும். தெரியாமலா சொன்னார் புத்தர் தன் அணுகல்முறையை "மஜ்ஜிம பதிபாதம்" என்று!



## சில யோசனைகள்

- பாலுக்கு உறை மோர் இல்லாவிட்டால் ஒரு பச்சை மிளகாய் காம்பை பாலில் கிள்ளிப் போட்டால் தயிர் தயாராகிவிடும்.
- இஞ்சியைத் துணியில் சுற்றி தண்ணீர் குடத்தின் மேல் வைத்திருந்தால் 10 நாட்கள் வரை கெடாது.
- துவரம் பருப்புடன் இரண்டு சொட்டு கடலை எண்ணெய்விட்டு வேக வைத்தால் பொங்காமல் இருக்கும்.
- எலுமிச்சம் பழத்தை ஒருமணி நேரம் தண்ணீரில் போட்டு எடுத்து வைத்தால் ஆறு நாட்கள் வரை கெடாமல் இருக்கும்.
- தோசைக்கு அரைத்த மா பொங்காமலிருக்க வாழை இலையைப் போட்டு மூடி வைக்க வேண்டும்.
- கோப்பிக்கு பால் நன்றாக கொதித்திருக்கக் கூடாது.
- கீரைகளை மூடி போட்டு சமைக்கக் கூடாது.
- சிறிது உப்பு கரைத்த நீரில் தக்காளியைப் போட்டு வைத்தால் இரண்டு நாள்கள் வரை கெடாது.

## முன்னேற்றம்...


ஐன்ஸ்டீன். நண்பர் பிலிப் பிராங்குடன் பெர்லினில் இருந்த வானிலை ஆராய்ச்சி நிலையத்துக்குச் செல்ல விரும்பினார்.

இருவரும் போஸ்டாம்ப் என்ற பகுதியிலுள்ள பாலத்தில் சந்தித்துக் கொள்வது என ஏற்பாடு. பிலிப், பெர்லினுக்குப் புதியவர். அதனால் குறித்த நேரத்துக்குத் தன்னால் வர முடியாதே என்று வருத்தப்பட்டுக் கொண்டார்.

உடனே ஐன்ஸ்டீன், "பரவாயில்லை. எவ்வளவு நேரமானாலும் காத்திருக்கிறேன்" என்றார்.

"உங்கள் பொன்னான நேரம் வீணாகுமே?" என்றார் பிராங்க்.

"நான் செய்யும் வேலையை எங்கிருந்து வேண்டுமானாலும் செய்வேன். வீட்டிலிருந்து செய்யும் ஆராய்ச்சியை பாலத்தின்மீது அமர்ந்து செய்தால் போச்சு" என்றார் ஐன்ஸ்டீன் அலட்சியமாக.



சூழ்நிலைகளையும் இடையூறுகளையும் பொருட்படுத்தாதவர்கள்தான் சாதிக்கிறார்கள்.

# பிழையின்றித் தமிழ் 42

**- ஞானச்செல்வன் -**

ஒரு வாக்கியத்தில் அமைந்த சொற்களுக்கு இடையே - விளக்கம் தரும் வகையில் வேறொரு சொல் இடைப்பட வரும்போது இடைப்பிறவரல் குறி (-.......-) இடல் வேண்டும்.

(எ-டு) நீ எப்போதும் வெற்றி பெறுவாய் - நேர்மையாக நடந்தால் - என்பதை மறவாதே.

ஒரு சொல்லுக்கு விளக்கம் தர வேறொரு சொல் எழுதப்பட்டால் சிறுகோடு (-) இடப்படுதல் வேண்டும்.

(எ-டு) அந்தக் காட்சி அளவிடற்கரிய வியப்பை - ஆச்சர்யத்தை உண்டாக்கியது.

அது அவன் மனதில் பசுமையாக - அழுத்தமாகப் பதிந்துவிட்டது.

அடைப்புக்குள் எழுதப்படும் செய்திகளுக்குப் பிறைக்குறி இட வேண்டும். சில இடங்களில் அடைப்புக் குறிக்கும் மேல் பகர அடைப்பு [ ] வருதலும் உண்டு.

விளிப்பெயர்களில் காற்புள்ளிதான் இட வேண்டும். உணர்ச்சிக்குறிகளைப் போட்டு எழுதுதல் பிழை. இராமா, முருகா, நண்பா, அண்ணா என்பதுபோல் வர வேண்டும். இராமா! முருகா! நண்பா! அண்ணா! என்றெழுதிட வேண்டா.

### மாற்றமும் மகிழ்ச்சியும்

நமது செய்தி ஏடுகளில் பல்லாண்டுகளாக எழுதப்பட்ட கருப்பு எனும் சொல் இப்போது கறுப்பு எனச் சரியாக எழுதப்படுகிறது. இயக்குநர் எனும் தவறான சொல்லும் இயக்குநர் என்று சரியாக எழுதப்படுகிறது. தொலைக்காட்சி எழுத்துகளிலும் இம்மாற்றம் கண்டு மனம் மகிழ்ச்சியடைகிறது. இன்னும் மேலாக, "உங்களைப் பாதுகாப்பது மிகவும் இடரான வேலையாகிவிடும்" என்ற வாக்கியத்தைப் பார்த்தபோது மகிழ்ச்சி இரட்டிப்பானது.

"கஷ்டமான வேலையாகிவிடும்" என்பதுதான் நடைமுறையில் இருந்தது. வன்முறைச் சம்பவங்களால் பதற்றம் நிலவுகிறது என்பதைப் பார்த்தபோதும் மகிழ்ச்சியே. பதட்டம் என்றே எழுதிவந்தார்கள். மாற்றம் வரவேற்கத்தக்கது. வன்முறை நிகழ்வுகளால் (சம்பவங்களால்) என்று எழுதியிருப்பின் இன்னும் சிறப்புடைத்தாகும்.

"குழந்தையின் மைக்குக் காரணிகள் என்ன?" ஏதோ ஒரு விளம்பரத்தில் படித்ததாக நினைவு. எவை என்னும் பன்மைச் சொல்லைப் பொதுவாகப் பலரும் மறந்து விட்டோம். "விலைவாசி உயர்வுக்குக் காரணங்கள் என்ன?" "ஊழல் பெருகிவிட்டதன் அடிப்படைகள் என்ன?" என்றே பலகாலும் கேட்க நேர்கிறது. பன்மையில் "கள்" ஈறு பெற்று வரும்போது எவை எனச்




சொல்ல வேண்டும் என்பதை மறக்கலாமா? அடிப்படை -என்ன? என்றால் போதுமே. அடிப்படைகள் என்று தேவையின்றிக் "கள்" விகுதி ஏன்?

### ஓர் ஐயமும் விளக்கமும்

செய்தி ஏடுகளில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடந்தது என்று எழுதுகிறார்கள். இதன் பொருள் என்ன? ஆர்ப்பு என்றால் ஒலித்தல் (ஒலி). ஆட்டம் என்பது ஆடுவது. கறுப்புக் கொடிக்கும் ஒலித்து ஆடுவதற்கும் என்ன தொடர்பு? இவ்வாக்கியம் கறுப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர் என்றிருந்தால் சரியாயிருக்கும். ஆர்ப்பாட்டம் என்பதும் தொடர் முழக்கம் (கோஷம் போடுதல்) என்பதையே குறிக்கிறது போலும்! எப்படியோ நம்மவர்க்கு இத்தொடர் நன்கு பழகிவிட்டது.

### புறமும் புரமும்

நாட்டுப்புறப் பாடல்கள் என்று சொன்னால் நன்கறிவோம். கிராமியப் பாடல்கள் என்றும் சொல்வதுண்டு. அண்மையில் ஒரு பாட நூலில் நாட்டுப்புரப் பாடல்கள் என்று அச்சிட்டிருப்பதாக அறிகிறோம். நாட்டுப்புரம் என்பதே சரி என்றும் வாதிடுகிறார்களாம் சிலர். புறம் என்பது தூய தமிழ்ச் சொல் புறநானூறு நாமறிவோம். புறஞ்சேரி இறுத்த காதை சிலப்பதிகாரத்தில் உள்ளது. இந்நாளில் புறநகர் என்று சொல்லுகிறோமே அதுவே புறஞ்சேரி எனப்பட்டது.

நகர்ப்பகுதிக்கு வெளியே அமைந்ததே நாட்டுப்புறம் என்று சொல்லப்பட்டது. அஃதாவது சிற்றூர் (கிராமம்) சார்ந்தவை அவை. அந்த மக்களின் இசை, நடனம் முதலிய கலைகள் நாட்டுப்புறக் கலைகள் எனப்பட்டன. புரம் என்பது வடசொல். வாழ்விடம் எனும் பொருள் கொண்டது. புரம் - கோட்டை எனும் பொருளிலும் வரும். திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் என்பர் சிவபெருமானை. இந்நாளில் பெரிய நகரங்களின் உள் பகுதிகளுக்குப் புரம் என்று பெயர் அமைத்துள்ளார்கள். (எ-டு) உமையாள்புரம், மன்னார்புரம்.

அந்தநாளில் மன்னர்களின் அரண்மனையில் அரசியார் இருக்குமிடம் அந்தர்ப்புரம் எனப்பட்டது. (அந்தப்புரம் என்பது பிழை) அந்தர்ப்புரம் என்பதே சரி. (கதிரைவேற் பிள்ளையின் பேரகராதி காண்க) இச்சொல்லுக்கு உள் வீடு, அரசியார் மாளிகை என்று பொருள் கொள்ளலாம். நாட்டுப்புறத்தோடு - புரத்தைச் சேர்ப்பது பொருந்தாது.

முன்னர் எழுதினோம்: மாறன் - தமிழ்ச்சொல் (பாண்டியன்). மாரன் - வடசொல் (மன்மதன்). ஆதலின் சுகுமாரனைச் சுகுமாறன் என்றெழுதுதல் பிழை என்பதாக. (திருமாறன், நன்மாறன், நெடுமாறன் - நற்றமிழ்ச் சொற்கள்) அதுபோன்றே நாட்டுப்புறம் என்பதை நாட்டுப்புரம் எனல் பிழையேயாகும்.

# சின்னச் சின்ன....

★ பழங்காலத்தில் தமிழகத்தில், பனை ஓலையை மணமகளின் கழுத்தில் மணமகன் அணிவித்துத்தான் திருமணம் என்ற சடங்கு நடந்தது. இப்படி அணிவிப்பதற்குப் பெயர் "தால பத்திரம்". இதுவே பின்னாளில் தாலி என்று மருவியது.

★ தற்காலத்தில் வாகனங்களில் ஒரு சில்லு பழுதாகிவிட்டால் ஸ்டெப்னி எனப்படும் மாற்றுச்சக்கரம் பொருத்தப்படுகிறது. வண்டியின் அச்சு முறிந்துவிட்டால் அதற்கு மாற்றாகப் பயன்படுத்துவதற்கு "சேம அச்சு" கொண்டு செல்லப்பட்டதாக புறநானூறு 102 ஆம் பாடல் கூறுகின்றது.

★ சில்க் என்றால் பட்டு அல்லது ஸ்மிதா என்ற தமிழ் நடிகைதான் நினைவுக்கு வருவார் இல்லையா? தமிழ் அகராதியில் சிலுக்கு என்ற சொல்லுக்கு இரும்பு, மோதிரம், சண்டை, சிலம்பு, வெட்டிய துண்டு என்று பல அர்த்தங்கள் கூறப்பட்டுள்ளன.

★ "இழவு" என்ற சொல்லை துக்க காரியங்களை குறிப்பதற்கு பயன்படுத்துகிறோம். இச்சொல்லின் உண்மையான பொருள் "இழப்பு" என்பதுதான். கம்பராமாயணத்தில் அனுமன் சொல்வதாக கம்பர் பாடியுள்ள ஒரு பாடலில் இச்சொல்லை "இழவு" என்றே பயன்படுத்தியுள்ளார்.

"அளியா லிவ்வூர் காணும்
நலத்தினால் அணைகின்றேன்
எளியேனுற்றால் யாவனக்கிங்
கிழவு"



★ "கம்யூனிசம்" என்பதைப் பொதுவுடைமை என்று தமிழில் முதன் முதலில் கூறியவர், பாரதியார். அவரது "பாரத சமுதாயம் வாழ்கவே!" என்ற பாடலில்தான் பொதுவுடைமை என்ற சொல் முதன்முதலாக கையாளப் பெற்றிருந்தது. சுதந்திரம் என்ற சொல்லுக்கு "விடுதலை" என்ற இணையான ஒரு தமிழ்ச் சொல்லையும் உருவாக்கினார் பாரதி.

★ அன்றாடம் பேச்சுவழக்கில் இப்போதும் வழங்கும் "சொற்பொழிவு" என்னும் அழகான தமிழ்ச்சொல்லை உருவாக்கியவர் தமிழறிஞர் பால்வண்ண முதலியார். எப்படி மேடையில் பேசுவது என்பது பற்றி "சொற்பொழிவாற்றுப்படை" என்னும் சிறந்த நூல் ஒன்றையும் எழுதியிருக்கிறார்.

★ தொல்காப்பியம் தோன்றுவதற்கு 4000 ஆண்டுகளுக்கு முன்னரே யாழ் உருவாயிற்று. 5000 ஆண்டுகளுக்கு முந்தைய ஹரப்பா நாகரிகத்தில் யாழ் காணப்படுகிறது. 21 நரம்புகள் கொண்டது பேரி யாழ் 17 நரம்புகள் கொண்டது சகோட யாழ் 7 நரம்புகளைக் கொண்டது செங்கோட்டு யாழ்.

# அப்பத்தா

- ராஜா ஜெய்சிங் -

எனக்கு அப்போது ஏழு வயது என்று நினைவு. பனைஓலை வேய்ந்த ஒரு குடிசையில்தான் நாங்கள் வசித்துக்கொண்டிருந்தோம். நினைவு தெரிந்த நாள் முதலே நான் அங்குதான் வளர்ந்தேன். என் தங்கையும் கூடத்தான். எங்களுக்கு அப்பத்தாவின் சமையலும், இருமலும் பெரிதாகப் பழக்கப்பட்டிருந்த நாட்கள் அவை. அப்பத்தாவிற்கு அப்போது அறுபது வயதிருக்கலாம். தங்கை பிறந்த அன்றே ஜன்னி வந்து இறந்துபோன அம்மாவிற்கு பிறகு அப்பத்தாதான். காலைக் கஞ்சிக்கு விறகொடிப்பதிலிருந்து இரவு எங்களை உறங்கச்செய்யும் வரை அனைத்தையும் பார்த்துக்கொண்டவள்.

அப்போது தொலைவிலிருக்கும் நகரமொன்றில் அப்பா வேலை செய்துகொண்டிருந்தார். வேலை என்றால் யாரோ ஒரு பெரும்பணக்காரரின் வீட்டில் வேலையாள். தினமும் நள்ளிரவுக்கு சற்று முன்புதான் வருவார். அவருக்கு இரவுச்சோற்றை போடும்வரையிலும் அப்பத்தா தூங்கியதில்லை. இருவரும் சாப்பிட்டபிறகு அவள் வாசலை மறித்தவாறு அமர்ந்துகொள்வாள். வயதாவதால் தூக்கம் வருவதில்லை என்று வருத்தப்பட்டுக்கொள்ளும் அவளிடம் அப்பா ஒன்றும் சொல்லியதில்லை. அவரும் நெடுநேரம் அவளுடன் அமர்ந்திருப்பார்.

ஏதோ ஒரு ஐப்பசி மாதத்தின் பெருமழை பெய்த இரவொன்றில் அப்பா வரமுடியாமல் போய்விட்டது. நைந்து போன ஓலைகளின் வழியே ஒழுகிய மழைநீரில் நானும் தங்கையும் போர்த்தியிருந்த கோணிச்சாக்குகள் நனைந்துவிட தூக்கம் கலைந்து ஒண்டியிருந்தோம். கதவற்ற குடிசையின் வாசலில் உள்ளே வர முற்பட்ட தவளைகளையும், பூச்சிகளையும் விரட்டியபடி அமர்ந்திருந்த அப்பத்தா இரவு முழுவதுமே தூங்கியிருக்கவில்லை. ஓய்ந்து போன கைகளுடன் காலையில் அப்பா செய்து வைத்த மூங்கில் பரலும், அதில் இறுகக் கட்டியிருந்த சணல் பைகளும் அவளுக்கு திருப்தி அளித்திருக்கவில்லை. எங்கள் காதுகளுக்குக் கேட்காதவாறு அவள் பாம்பொன்றை விரட்டியதாக அப்பாவிடம் சொல்லியதை நாங்கள் இருவருமே கேட்டிருந்தோம்.

அரையளவுக்கு மணல் மேடமர்த்தி அதில் பரல் வைத்த அன்று அவள் மடியில் நானும் தங்கையும் தலை சாய்த்துப் படுத்துக்கொண்டோம். எரிந்து கொண்டிருந்த சிம்னி விளக்கை அணைப்பதற்குக் கூட அவள் அன்று எழுந்திருக்கவில்லை.

கார்த்திகை மாதம் ஆரம்பித்த நாட்களில், மூங்கில் பரலின் கோணிப்பைகளைத் தாண்டி வரும் குளிர் காற்றில் உடல் நடுங்க ஆரம்பித்தது. அவள் தனது டிரங்குப்பெட்டியிலிருக்கும் புடவைகள் அனைத்தையும் எடுத்து எங்களுக்குப் போர்த்தி விட்டுக்கொண்டிருந்தாள்.

தனது பருத்த உடலைச் சரித்து வாசலில் அமர்ந்து கொள்வதை மீண்டும் வழக்கமாகக் கொண்டாள். முடிவேயில்லாத இருளை வெறித்தபடி இருக்கும் அவளைப் பார்க்க சற்று பயமாகவும் இருக்கும். அருகில் சென்று அமர்ந்தால் உள்ளே படுக்கச்சொல்வாள். காரணமில்லாமல் சிணுங்கிக்கொண்டிருக்கும் தங்கையை மட்டும் சிலநேரம் முந்தானையில் போர்த்தி அணைத்து உறங்க வைப்பாள்.

பின் ஒரு மார்கழி மாத இரவொன்றில் அவள் இறந்திருந்தாள். இரவு திரும்பிவந்த அப்பா வாசலில் அமர்ந்திருந்த அவளை எழுப்ப முற்பட்ட போது அவள் அசைவில்லாமல் அமர்ந்திருந்தாளாம். அவளது உடல் சற்றே சில்லிட்டு விறைத்திருந்ததாய் அக்கம்பக்கத்தினர் சொல்லி கேள்விப்பட்டிருந்தேன்.

ழுழுழு ழுழுழு ழுழுழு

தங்கை வீடுகட்டிக் குடியேறியபோது அவ்வீட்டின் பிரம்மாண்டமான வாசற்கதவைக் கவனித்தேன். மிகுந்த பொருட்செலவில் அவளே பார்த்துப்பார்த்து வடிவமைத்ததாய் அவளது கணவர் பெருமைப்பட்டுக்கொண்டார்.

நாங்கள் வீடு மாறியபோது கதவுக்குத் திலகமிட்டு தொட்டு வணங்கியதை விசித்திரமாகப் பார்த்துக்கொண்டிருந்த மனைவி "வீடென்றால் அவருக்கு உயிர்" என்று பிறந்த வீட்டினரிடம் சமாளித்துக்கொண்டிருந்தாள்.

இரவு நெடுநேரம் கழித்து திரும்பிவரும்போது வாசற்கதவில் தலைசாய்த்து அமர்ந்திருக்கும் அப்பாவை பலமுறை கவனித்ததுண்டு. "தூக்கம் வரலைடா" என்பதுடன் அவர் முடித்துக்கொள்வார்.

வலிகள் மட்டும் மிச்சமிருக்கின்றன.

கோபம், துக்கம், மனக்கசப்பு எதுவாக இருந்தாலும் குடும்பத்தில் யாரும் கதவுகளை அறைந்து சாத்திப் பார்த்ததில்லை என்பது மட்டும் நன்றாக நினைவிலிருக்கிறது.



# பாதிப்பில் உருவான படங்கள்




7. Mrs. Doubtfire (1993)

மனைவியை விவாகரத்து செய்து பிரிந்திருக்க நேரும் ஒரு நடிகன், தன் குழந்தைகளோடு இருக்கும் ஆசையில் பெண் வேஷம் போட்டுக்கொண்டு தன் வீட்டிலேயே வேலைக்குச் சேர்ந்து குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளும் கதை. கிறிஸ் கொலம்பஸ் இயக்கத்தில் றொபின் வில்லியம்ஸ், சல்லி ஃபீல்ட், பியர்ஸ் ப்ரஸ்னன் ஆகியோர் நடித்தது.


தமிழில் - கமல்ஹாசன், மீனா நடித்து கே.எஸ். ரவிக்குமார் இயக்கிய அவ்வை சண்முகி (1996)




8. What About Bob? (1991)

ஒரு பிரபலமான உளமருத்துவர் தனது நோயாளியின் மனநிலையை குணமாக்குவதற்காக குடும்பத்தினருடன் சுற்றுலா அழைத்துச் செல்கையில் நேரும் நகைச்சுவைகளைக் கொண்ட கதை. பில் முர்ரே, றிச்சர்ட் ட்றிஃபஸ், ஜூலி ஹகேட்டி ஆகியோர் நடித்தது.

தமிழில் - கமல்ஹாசன், ஜோதிகா, ஜெயராம் நடித்து கே.எஸ்.ரவிக்குமார் இயக்கிய தெனாலி (2000)




9. Tsotsi (2005)

ஜொஹன்னஸ்பேர்க் நகர தாதா ஒருவனின் வன்முறையுடன் கூடிய ஆறு நாள் வாழ்க்கையில் ஒரு குழந்தையையும் திருடிக்கொண்டு வந்துவிடுவதில் நேரும் பிரச்சினைகளை விவரிக்கும் கதை. காவின் ஹூட் இயக்கத்தில் ப்ரெஸ்லி சியுனியாகே, மொதுசி மாகனோ ஆகியோர் நடித்தது.

தமிழில் - அமீர், மதுமிதா நடித்து சுப்ரமணியசிவா இயக்கிய யோகி (2009)

(தொடரும்)




## சிந்தித்து விடையளிப்போம்

ஒரு மைதானத்தில் குதிரைப் பந்தயம் மிகப்பிரபலமாக நடந்து கொண்டிருந்தது. ஏதேனும் புதுமை செய்ய எண்ணி அதையே மெதுவாக நடக்கும் போட்டியாக அறிவித்தார்கள் அதற்குப் பின் ஸ்டார்ட் சொல்லியும் எந்தக் குதிரையும் நகருவதாக இல்லை.

அதிக நேரம் காத்திருந்து பார்த்துவிட்டு, குழுவில் அனைவரும் கூடி ஒரு முடிவு எடுத்தார்கள். அதற்குப் பிறகு குதிரைகளின் சொந்தக்காரர்கள் தங்களுடைய குதிரைகளை ஓட்டாமல் மற்றவர்களின் குதிரைகளை ஓட்ட வேண்டுமென்று தீர்மானித்தார்கள் எல்லா குதிரைகளும் பிய்த்துக் கொண்டு ஓடின. அவர்கள் எடுத்த முடிவு என்ன?

(பிற்குறிப்பு) அவர்கள் மெதுவாக நடைக்கும் போட்டியை வேகநடைப் போட்டியாக மாற்றவில்லை.

பதில்

விதிப்படி கடைசியாக வரும் குதிரையே வெல்லும் என்பதால் அனைவரும் குதிரைகளை வேகமாக ஓட்டினார்கள்.

# பறக்கும் தட்டு மர்மங்கள்



தட்டுக்கள் இந்தப் பெயரைக் கேட்டாலே ஒருவித அச்சமும் பிரமிப்பும் பலருக்கு ஏற்படும். பறக்கும் தட்டுக்களை தாங்கள் அவ்வப்போது பார்த்ததாக உலகெங்கும் உள்ள பலர் தெரிவித்துள்ளனர்.

வழக்கம் போல விஞ்ஞானிகள் பறக்கும் தட்டுக்கள் இருப்பதற்கான சாத்தியங்கள் இல்லை எனவும், அவ்வாறு ஒருவேளை இருந்தாலும் ரேடர் போன்ற கருவிகள் அவற்றைத் துல்லியமாகக் கண்டுபிடித்துக் கூறி விடும் என்றும் கூறுகின்றனர்.

ஒரு சில ஆய்வாளர்களோ பறக்கும் தட்டுக்கள் மிக வேகமாகப் கிட்டத்தட்ட ஒளியின் அளவிற்கு வேகமாகப் பறப்பவை என்றும் அதனால்தான் ரேடாரின் கண்களுக்குச் சிக்குவதில்லை என்றும் கூறுகின்றனர்.

1960 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஓரிகன் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பகுதியில், பறக்கும் தட்டு ஒன்று இறங்கியது அதை அப்பகுதியைச் சேர்ந்த ஒரு தம்பதியினர் பார்த்தனர். பால் ட்ரெண்ட் என்பவர் அதனை படமெடுத்தார். பத்திரிகைகளிலும் அது பற்றிய செய்திகள் வெளியானது. ஆனால் அரசு மேற்கொண்டு அது குறித்து ஆய்வுகள் ஏதும் செய்யாததால் அது பற்றிய செய்திகள் பரவவில்லை. ஆனால் அதற்கு முன்னாலேயே 1947 லேயே பறக்கும் தட்டை உலகெங்கும் பலர் பரவலாகக் கண்டுள்ளனர்.

அதுபோல 1973 இல் அமெரிக்காவின் நியூ ஆர்லின்ஸ் துறைமுகத்தில் பணிபுரியும் ,ருவர் பறக்கும் தட்டைக் கண்டனர். இரவு நேரத்தில் வேலை முடித்து அவர்கள் வீடு திரும்பும் போது பறக்கும் தட்டு அவர்கள் முன் தோன்றியது. அதிலிருந்து இறங்கிய சில உருவங்கள் அவர்கள் இருவரையும் பறக்கும் தட்டுக்குள் கொண்டு சென்று சில ஆய்வு க்ளைச் செய்தன. அரைகுறை மயக்கத்தில் ,ருந்த இருவரும் தங்களுக்கு நடப்பனவற்றை உணர முடிந் தாலும் அவர்களால் அந்த பறக்கும் தட்டு மனிதர் களை எதிர்த்து எதுவும் செய்யாத நிலை.

சிலமணி நேரங்களில் அவர்களைக் கீழே தள்ளி விட்டு பறக்கும் தட்டு சென்று விட்டது. நீண்ட நேரம் மயங்கிக் கிடந்த அவர்கள் பின்னர் மயக்கம் தெளிந்து மக்களிடம் உண்மையைச் சொன்னனர். முதலில் யாரும் அவர்களது கூற்றை நம்பவில்லை.

ஆனால் மருத்துவர்கள் குழு வந்து அவர்களை ஹிப்னாடிச உறக்கத்தில் ஆழ்த்திச் சோதனை செய்த போது, அவர்கள் பொய் சொல்லவில்லை என்பதும், அமானுஷ்யமான சில அனுபவங்கள் அவர்களுக்கு ஏற்பட்டது உண்மைதான் என்பதும் தெரிய வந்தது.

அமெரிக்கா, கனடா, ரஷ்ய நாட்டைச் சேர்ந்தவர் கள் பல ஆண்டுகளாக பறக்கும் தட்டுக்கள் குறித்து ஆய்வு நடத்தி வருகிறார்கள்.

எந்த அரசும் இன்றுவரை பறக்கும் தட்டுக்களையோ அல்லது அன்னியர்கள் பிரவேசத்தையோ வெளிப் படையாக ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் பிரிட்டன் மட்டும் பறக்கும் தட்டுக்கள் தொடர்பாக தாம் சேகரித்து வைத்துள்ள இரகசிய அறிக்கைகளை சமீபத்தில் வெளியிட்டது.


சுமார் 6000 ப்க்கங்கள் கொண்ட இந்த அறிக்கை 1994 - 2000 ஆண்டு வரையான காலப் பகுதியில் பறக்கும் தட்டுக்கள் குறித்து திரட்டப்பட்ட தகவல்களை உள்ளடக்கியிருக்கிறது.

அதில் 1997 இல் பிரிட்டன் கன்சவேட்டிவ் கட்சித் தலைவர் மிக்கல் கவாட்டின் இல்லத்தின் மேல் முக்கோண வடிவிலான ஒரு பறக்கும் தட்டு வந்திறங் கிய சம்பவமும் பதிவு செய்யப்பட்டுள்ளது.


பறக்கும் தட்டு குறித்த தகவல்களை மேலும் மேலும் மக்களிடம் மறைப்பது பயனற்றது என்பதால் தமது சேமிப்புக்களை வெளியிட்டுள்ளதாக பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## கணக்கு புதிர்கள்

1. கீழ்காணும் ' ? ' குறியிட்ட இடத்தில் வரும் எண் என்ன?




2. கீழ்காணும் ' ? ' குறியிட்ட இடத்தில் வரும் எண் என்ன?




3. கீழ்க்கண்ட மூன்று திகதிகளிலும் உள்ள ஒற்றுமை என்ன?

**15 February 1984**

**2 July 1983**

**16 December 1983**

4. இந்த UMNI நான்கு எழுத்துக்களை மட்டுமே பயன்படுத்தி, ஏழு எழுத்துக்களில் வரும் வாக்கியத்தை அமையுங்கள்...

5. இவ் எண்களின் மாறுபட்ட ஒரு எண் (odd one out) என்ன? விளக்கத்துடன் கூறவும்...

67626, 36119, 96131, 41225, 78428

## விடுகதைக்கு விடையெடுப்போம்

ஒரு மனிதனால்தான் உருவாக்கப்படுகிறது... ஆனால் எந்த மனிதனுக்கும் அதில் விருப்பமில்லை. ஒரு மனிதனால்தான் அது வாங்கப்படுகிறது. .... ஆனால் அது அவனுக்குத் தேவையில்லை. ஒரு மனிதனுக்கு அது தேவை...ஆனால் அதை வாங்கியது அவனுக்குத் தெரியாது. அது என்ன?......

விடை - சவப்பெட்டி

## தந்தை பெரியார் பொன்மொழிகள்! சில:

மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு. பகுத்தறிவு என்பது மனிதனுக்கு உயிர்நாடி

மூடநம்பிக்கையும் குருட்டுப் பழக் கமும் சமூகத்தின் முதல் பகைவன். விதியை நம்பி மதியை இழக்காதே.

மக்களின் ஒழுக்கத்தையும் மதியையும் கெடுப்பது மது.

மனிதப் பண்பை வளர்ப்பதே என் வாழ்நாள்ப் பணி.

வாழ்க்கை அவனவன் வாழ்வதற்கு என்று மட்டும் கருதக் கூடாது மற்றவர்கள் நலனுக்கும் என்று கருத வேண்டும்.

ஒரு நாடு சுபீட்சத்துடன் வாழ வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் ஒழுக்கமுள்ளவர்களாக இருத்தல் அவசியம்.

ஒருவன் தன்னிடம் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென எதிர் பார்க்கிறானோ, அப்படி எல்லோரிட மும் தான் நடந்து கொள்வதே ஒழுக்க மாகும்.

## கற்கள் தானாக நகரும் இடம்

இந்த இடத்திற்கு ரேஸ்ட்ராக் பால்யா (Racetrack Playa) என்று பெயர். இது கலிபோர்னியாவில் உள்ள ஒரு வறண்ட ஏரி என்றாலும், கண்ணுக்கினிய ஒரு விஷயம் உள்ளது.

அது என்னவென்றால், இந்த இடத்தில் இருக்கும் கற்கள் தானாக நகர்கிறது என்பது தான். மேலும் அவ்வாறு நகரும் கற்கள் நகர்ந்ததற்கான அடையாளத்தோடு நகர்கிறது என்பது தான் இதன் சிறப்பு.

அதிலும் இந்தக் கற்கள் பலத்த காற்றின் காரணமாக நகர்கிறது என்பது உண்மை. அப்படியெனில் எந்த அளவுக்கு காற்றடிக்கும் என்று யோசித்து பாருங்களேன்பெரும் ஏழை

## யானை முகம் அபூர்வ மனிதன் உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் காட்சி



பொதுவாக மனிதனுக்கும் விலங்குகளுக்கும் முக அமைப்பில் பல வேறுபாடுகள் இருக்கும் ஆனால், இங்கே பாருங்கள் யானை முகத்தில் ஒரு அபூர்வ மனிதனை பார்க்கின்றீர்கள் பார்க்க மட்டுமல்ல இந்தக் காட்சி, உங்களை நிச்சயம் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் என்பது சந்தேகமில்லை. யூடியூபில் பிறந்த இந்த மனிதப்பிறப்பு உலக எதிர்விளைவின் பின்னணியென அறிவிய லாளர்கள் சிந்திக்கின்றார்கள்.

# நல்லூரில் முக்கிய திருவிழா நாட்களில் மேலதிக பொலிஸார் கடமையில்

## -பொலிஸ் அத்தியட்சகர்-

(யாழ்.நிருபர்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருந்திருவிழாவின் போது நகை திருட்டுக்களை முற்றாகத்தடுக்கும் நோக்குடனும் சட்டம்,ஒழுங்கை நிலைநாட்டி பக்தர்கள் அச்சமின்றி ஆலய வழிபாட்டினை மேற்கொள்வதற்கேற்ற உகந்த சூழலை உருவாக்கும் நோக்குடன் யாழ்.மாவட்ட பொலிஸார் திணைக்களம் சிறப்பாக சேவையாற்றி வருகிறது என யாழ். மாவட்ட பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மொகமட் ஜெப்ரி தெரிவித்துள்ளார்.

ஆலயத்தின் உள்வீதியில் இம்முறை அதிகளவில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர் பெண் பொலிஸார் சேலை அணிந்தும் ஆண் பொலிஸார் வேட்டி சால்வை அணிந்தும் சாதாரண அடியார்கள் போல் நடமாடி வருவதால் இம்முறை ஆலயத்தில் திருட்டுச் செயல்களில் ஈடுபடும் நோக்குடன் வருபவர்கள் பாடு பெரும் திண்டாட்டம் தான் வெளி வீதிகளிலும் பெருமளவு பொலிஸார் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அடியார்கள் பெருமளவிற்கு வருகைதரும் கார்த்திகைத் திருவிழா, சப்பறத்திருவிழா, தேர்த் திருவிழா நாட்களில் மேலதிக பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார் (10)

# வேகத்தை குறைக்குமாறு சாரதிகளிடம் வேண்டுகோள்

(அச்சுவேலி)

யாழ். குடாநாட்டில் தற்போது பெரும்பாலான வீதிகள் காபபெற் போடப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளமையால் வாகன சாரதிகளும் தமது வாகனங்களைக் கட்டுப்பாடின்றி வேகமாகச் செலுத்துகின்றனர்.

இதனால் விபத்துக்களும் அதிகரித்து வண்ணமுள்ளன. குறிப்பாக வீதியோரங்களில் உள்ள வீட்டு உரிமையாளர்கள் வளர்க்கும் செல்லப் பிராணிகளும் இத்தகைய வாகனங்களுக்குள் அகப்பட்டு இறக்க நேரிடுகின்றன.

வருமானத்தை தரும் பறவை இனங்களும் இவ்வாறு வீதிகளில் உலாவுவதால் அவற்றையும் பொருட்படுத்தாது சாரதிகள் மிக வேகமாக வாகனத்தைச் செலுத்துவதால் அவையும் விபத்துக்குள்ளாகின்றன.

எனவே இவ்வாறு நாளுக்கு நாள் மனித உயிர்களும், ஏனைய உயிர்களும் பறிபோகும் நிலை ஏற்படுகின்றது. இவ்வாறு அதிகரித்துச் செல்லும் வீதி விபத்துக்களை ஓரளவு கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வருவது சாரதிகளின் கைகளிலே தங்கியுள்ளது.

எனவே, இவ்வாறு வீதி ஓரங்களில் உள்ள வீடுகளுக்கு முன்னால் செல்லும் போது மிகவும் அவதானத்துடனும் வேகத்தைக் குறைத்தும் வாகனங்களைச் செலுத்துமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.அத்துடன் போக்குவரத்துப் பொலிஸாரின் கண்காணிப்புகள் குறிப்பிட்ட சில இடங்களில் இல்லாமையாலுமே இத்தகைய விபத்துக்கள் ஏற்படுவதற்குக்காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (85)

## "ஞானச்சுடர்" வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதியான் ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வெளியிடப்படும் ஞானச்சுடர் மலரின் ஆவணி மாத மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆசிரியர் க.பிறிசந்திரன் மதீப்பீட்டுரையை இளைப்பாறிய அதிபர் க.நடேசன் (தெணியான்) ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# கவனிப்பாரற்ற நிலையில் கொடிகாமம் பஸ்தரிப்பிடம்

(கொடிகாமம்)

A 9 வீதி கொடிகாமம் சந்தியில் உள்ள பஸ்தரிப்பிடமானது கவனிப்பாரற்ற நிலையில் உள்ளது.

வெளி மாவட்டங்களிற்கு செல்லும் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் போன்ற மக்கள் கொடிகாமம் பஸ்தரிப்பிடத்தை பயன்படுத்துகின்றனர். சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை வெளி மாவட்டங்களிற்கு செல்வதற்கு பஸ்தரிப்பிடத்தில் கால்கடக்க நின்று பயணிக்கவேண்டிய நிலை உள்ளது. மழைகாலம் தொடங்க முன்பு இந்த பஸ்தரிப்பிடத்தை அமைக்க உரிய அதிகாரிகள் முன்வருவார்களா? என பேருந்திற்கு காவல் நிற்கும் பயணிகள் மனம் குமுறுவதனை காண முடிகிறது. மேலும் இந்த பஸ்தரிப்பிடமானது இரவு வேளைகளில் இருள் சூழ்ந்த பகுதியாகவே காணப்படுகின்றது. இதனால் இரவு நேரங்களில் பயணம் செய்யும் பெண்கள் அச்சத்துடன் இருள் சூழ்ந்த பகுதியில் நின்று பயணம் செய்வதனையும் காணமுடிகின்றது. சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் உடன் கவனமெடுத்து சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட கொடிகாமம் சந்தி பஸ்தரிப்பிடத்தினை உரிய முறையில் அமைத்த பிரயாணிகளின் போக்குவரத்தினை இலகுபடுத்த வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)

# நல்லை ஆதீனத்தில் இன்று பீடாரோஹண விழா



உலகெலாம உணர்ந்து ஓதற்கரியவனாகிய எல்லாம் வல்ல பரம்பொருள் முருகப்பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கும் நல்லூர் ஆலயத்தின் மேற்கு வீதியில் கிழக்கு நோக்கிய வண்ணம் அமைந்திருக்கின்ற நல்லை திருஞானசம்பந்தர் ஆதினத்திலே இன்று 47 ஆவது பீடாரோஹண விழா வெகு சிறப்பாக நடைபெறுகின்றது.

கதாப்பிரசங்கம் செய்தே சைவத்தையும் தமிழையும் மேலோங்கச்செய்த இவ்வாதீனத்தின் ஸ்தாபகர் முதலாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்தப் பரமாச்சாரியசுவாமிகளை நாம் இன்று நினைவு கூராமல் இருக்கமுடியாது. தம்முடைய கணீரென்ற இனிமையான குரலிலே கதாப் பிரசங்கம் செய்யும் இவருக்கு நிகராக வேறு ஒருவருமே இல்லை என்று தான் கூறவேண்டும். யாழ்ப்பாணத்தில் இவரது பிரசங்கம் இடம்பெறாத கோவில்களே இல்லை என்று கூறுமளவுக்கு மூலை முடுக்கெல்லாம் சென்று கதை செய்து தமிழ் வளர்த்த பெருமை இவரையே சாரும்.

நல்லூர் ஆலய மகோற்சவம் தொடங்கி விட்டால் 25 நாள்களும் கதாப் பிரசங்கம் செய்வார். கந்தபுராணம், பெரியபுராணம், மகாபாரதம், இராமாயணம், திருவிளையாடற்புராணம் என்று பலவற்றையும் தொடர்பிரசங்க மாகச் செய்யும் ஆற்றல் நிறைந்தவர். இன்று குரு முதல்வராக இருக்கும் இரண்டாவது குருமகா சந்நிதானம் அவர்களும் எங்கெல்லாம் சமய விழாக்கள் கும்பாபிஷேகங்கள் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் சென்று அருளாசியுரைகளை நல்கி சைவத்தைப் பேணி வருகின்றார்.

இன்று நடக்கும் பீடாரோஹண விழாவிலே குரு மூர்த்தி ஆலயத்தில் விசேட பூசை, பட்டணப்பிரவேசம், திருவீதிவலம் என்றும் மகேஸ்வரபூசை எனப்படும் அன்னதானமும் நடைபெறும். ஆதலால் சைவமக்கள் ஒவ்வொருவரும் இந்த நிகழ்வுகளில் கலந்து பங்கேற்று ஆதினம் செய்யும் அறப்பணிகளுக்கு பூரண ஆதரவை நல்கி தமிழ் வளரவும் வாழவும் உந்து சக்தியாகத் திகழ்வார்களாக.

– தெய்வத்தமிழ்ச்சுடர் இராசையா ஸ்ரீதரன்–

# பதிவிறக்கப் பெட்டகம்

'இப்ப எழுதுறவங்கள்ல, எஸ்.ராமகிருஷ்ணன் என்னுடைய கதையெல்லாம் நல்லா இருக்குன்னு சொல்லுறாரு. ஆனா என்னால ராமகிருஷ்ணன் கதைகளைப் படிக்கவே முடியல. அவர் ஷங்கண்ணா என்ற பேரில் அற்புதமான சிறுகதைகள் எழுதியிருக்காரு. ஆனா, இப்ப வரவர அவரோட எழுத்து வந்து அதோட அழகு, அதோட மென்மை, அந்த நுட்பம் எல்லாம் போயிட்ட மாதிரி இருக்கு. அப்படித்தான் கோணங்கியும். அவரோட மதினிமார் கதைகள் பிரமாதமா இருந்தது. இப்ப எழுதுற கோணங்கிய நாம் வாசிக்கவே முடியல. பாழி கீழின்னுல்லாம் எழுதினா ஒண்ணும் புரியவும் மாட்டேங்குது.

ஜெயமோகனைச் சொல்லாம இருக்க முடியாது. அவர்கிட்டே இருக்கிற சிக்கல் என்னன்னா, எக்கச்சக்கம் எழுதுறாரு. எதைப்பத்தி வேணா சொல்லுறாரு. இப்ப இந்த பேப்பரைப் பத்தி அபிப்பிராயம் சொல்லுன்னா உடனே சொல்லிடுறாரு. அது ரொம்ப டேஞ்சர். ஆபத்தான இடத்துக்கு போயிட்டிருக்காரு. அப்புறம் ஒண்ணுமே எழுத முடியாம போயிடும். எழுத முடியாம போயிடும்னா எழுதிட்டு இருப்பார், வசவசன்னு போயிடும். அவரோட விஷ்ணுபுரம் கதை ரொம்ப விசேஷம்னு சொன்னாங்க. ஆனா என்னால அந்தக் கதைக்குள்ளயே போக முடியல. என்னைப் பொறுத்த வரைக்கும், அவரோட 'ரப்பர்'தான் எனக்கு இன்னைக்கும் நல்லா இருக்கு. 'ரப்பர்' நாவல் வந்து ரொம்ப அருமையான நாவல். தமிழ்ல கிளாஸிக்ஸ்ன்னு பத்து இருபது சொன்னா அந்த நாவலையும் சொல்லணும். அப்புறம் வந்த நாவல்கள் எல்லாம் படிச்சேன். எனக்கு அப்பீல் ஆகல. ஜெயமோகனால எந்த விஷயத்தையும் கதையா எழுதிட முடியுது. அது ஒரு திறமைதான். எந்த ஒரு விஷயத்தைக் குடுத்தாலும் இந்த வாட்சைப் பத்தி ஒரு கதை எழுதுன்னா கதை எழுதிடுவாரு. அவரோட திறமை அப்படிப்பட்டது. ஆனா அது எல்லாமே இலக்கியமா இருக்குமான்னா சந்தேகமாத்தான் இருக்கு.

யானை டாக்டர் கதையில் என்ன சொல்றார், திரும்பத் திரும்ப யானைக்கு ட்ரீட்மெண்ட் பண்றதை ஒரு மூணு பக்கம் சொல்றார். ஆச்சா, யானை டாக்டர்ன்னு ஒருத்தன் இருந்தான், யானைங்ககிட்ட பரிவா இருந்தான், அது சரிதான் ஆனா, அது இலக்கியபூர்வமா ஆகலை. அது செய்தியாதான் இருக்கு. செய்தியாதான் எனக்கு உள்ள போகுது அது. அதுக்கு மேல போக மாட்டேங்குது. ஆத்மானுபூதியா, தேடறதுன்னு இருக்குல்ல, ஏதோ ஒண்ணைத் தேடறதுன்னு இருக்குல்ல, ஒரு கதைன்னா ஏதோ ஒண்ணைத் தேடறதா இருக்கணும்ல, ஏதோ ஒரு விஷயத்தைச் சொல்ற மாதிரி இருக்கணும். இது இல்லாத வேற ஒண்ணு சொல்ற மாதிரி இருக்கணும். ஸ்க்ரீனுக்குப் பின்னாடி, மெல்லிய திரைக்குப் பின்னாடி வேற ஏதோ ஒண்ணு தெரியற மாதிரி இருக்கணும். அந்த மாதிரியெல்லாம் ஒரு அனுபவமும் கிடைக்கலை... ஒரு பேப்பரைப் படிக்கிற மாதிரி இருக்கு. அவரோட கதைகள் அப்படித்தான் இருக்கு.

நாஞ்சில் நாடனின் நாவல்கள் ரொம்ப பிரமாதமா இருக்கு. சிறுகதைகள்ல ஏதோ ஒரு சுவை குறையற மாதிரி இருக்கு. ஏதோ ஒரு சுவை. கதைகள் மோசம்னு சொல்ல வரலை. ஏதோ ஒரு சுவை குறையுது. ஆனா நாவல்கள் அப்படியில்லை.

அவரோட நாவல்களுக்கும் கதைக்கும் எனக்கு ஒரு வித்தியாசம் தெரியுது. அவர் எழுதுற விதத்துல நாவல்கள் ரொம்ப பிரமாதமா இருக்கும். நாவல்களின் உரைநடையும் சரி, அந்த உருவம், கட்டுக்கோப்பு இதெல்லாம் ரொம்ப வித்தியாசமா இருக்கும். சிறுகதைகள்லயும் அந்தக் கட்டுக்கோப்பு இருக்கு. ஆனா அந்த சுவை வித்தியாசம் இருக்கு. சில கதைகள்ல வந்து ஏதோ ஒரு அம்சம் குறைவா இருக்கு. அது என்னன்னு படிச்சாதான் தெரியும். அந்த வித்தியாசம் தெரியுது எனக்கு, ஆனா அது என்னன்னு சொல்லத் தெரியல.

— வண்ணநிலவன்

ஒரு கலைப்படைப்பு கலைஞனை தனக்கான ஊடகமாக பயன்படுத்துகிறது. கலை எப்போதும் கலைஞனை கடந்து மகத்துவம் கொள்ளுகிறது. கலைஞன் ஒரு விளக்கை போல இருக்கிறான். ஒளிதரும் சுடர் மறைந்ததும் அவன் ஒரு வெற்று உலோகமாகி விடுகிறான். சுடர் ஒரு ஞான தெறிப்பை போல் அவனிடம் வந்து அமர்ந்து பின் மறைந்து போகிறது.

— அபிலாஷ்

# மக்கள் நலனில் நேரடி அக்கறை

## பிணக்குகளை தீர்க்க நேரடி சமரச முயற்சி




(யாழ்ப்பாணம்)

கடந்த சில நாட்களாக தெல்லிப்பளை, கட்டுவன் மேற்கு பகுதியைச் சேர்ந்த இரு பிரிவினரிடையே ஏற்பட்ட பிணக்கானது கைகலப்புவரை சென்ற நிலையில் அப்பகுதிகளைச் சேர்ந்தவர்களினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டினை அடுத்து அமைச்சர் அப்பகுதிகளுக்கு நேற்றுமுன்தினம் நேரடியாக விஜயம் செய்தார்.

கட்டுவன் மேற்கு வள்ளுவன் சன சமூக மண்டபத்தில் நேற்று முன்தினம் முற்பகல் அப்பகுதி பிரதிநிதிகளையும் பிரதேச மக்களையும் நேரடியாக சந்தித்து கலந்துரையாடிய அமைச்சரவர்கள் எந்தவொரு பொதுமக்களும் எவ்வகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்பதில் தாம் உறுதியாக இருப்பதுடன் இதனையே பொலிஸாரும் தமது நடவடிக்கைகள் மூலம் மேற்கொள்வார்கள் எனத் தெரிவித்தார்.

இதன் தொடர்ச்சியாக நேற்றுமுன்தினம் ஞாயிறு மாலை கட்டுவன் மேற்கு நாச்சிமார் கோவிலடி அண்ணா சன சமூக நிலையத்தில் அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடிய அமைச்சர் கடந்த காலத்தில் இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்களை மறப்போம் மன்னிப்போம் என்ற நியமத்திக் கேற்ப தேவையற்ற விவாதங்களையும் நடவடிக்கைகளையுமு தவிர்த்துக் கொள்ளும்படியும் கேட்டுக் கொண்டார்.

குறிப்பிட்ட பிரதேசங்களில் எதிர்காலத்தில் எந்தவொரு பொதுமக்களும் பாதிக்கப்படக்கூடாது என்பனத உறுதிப்படுததிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் எதிர்வரும் நாட்களில் தாம் மீண்டும் அப்பிரதேசங்களுக்கு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை கண்டு கொள்ளவும் சந்திப்புக்களை மேற்கொளளவுள்ளதாகவும் தெரிவித்தார்.

பிரதேச மக்களுடனான இச்சந்திப்பின் போது பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி என்.எஸ்.கஸ்தூரியாராட்சி, அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ராஜ்குமார், சட்டத்தரணி ரெங்கன் தேவராஜன், ஜே. 239 கிராம உத்தியோகத்தர் புருஷோத்தமன், சமுர்த்தி முகாமையாளர் தர்மகுலசிங்கம், ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் வடக்கு இணைப்பாளர் ஜெயபாலசிங்கம் அன்பு ஆகியோரும் உடனிருந்தனர்.

## தேவைகள் குறித்து ஆராய்வு



யாழ். மாவட்ட தென்னை பனை வள சங்கங்கள் மற்றும் சமாச நிர்வாகத்தினரும் பிரதிநிதிகளும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச்சந்தித்து தமது தேவைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து எடுத்துக் கூறினார்கள்.

அமைச்சரவர்களின் யாழ். பணிமனையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மேற்படி சந்திப்பில் கடந்தகாலங்களில் தமது சங்கத்திற்கும் பனந்தொழில்சார் வல்லுநர் குடும்பங்களிற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காட்டிய கரிசனைக்கும் மேற்கொண்ட உதவிகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்ட பிரதிநிதிகள் தமது தேவைகள் குறித்தும் எடுத்துக் கூறினார்கள்.

குறிப்பாக பனை தென்னை வளங்களைப் பயன்படுத்தி தொழில் முயற்சிகளை மேம்படுத்தல், அவற்றின் உற்பத்தி தராதரத்தினை அதிகரித்தல், மற்றும் கலால் திணைக்களத்துடன் முறையான தொடர்புகளைப் பேணி தொழில் முயற்சிகளை மேற்கொள்ளல் உட்பட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

மேற்படி சங்க சமாச பிரதிநிதிகளின் வேண்டுகோள்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இவ்விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் மேலதிக திட்டங்கள் தொடர்பில் அவர்களுடன் தொடர்ந்தும் கலந்துரையாட உள்ளதாகவும், உடனடி நடவடிக்கையாக தென்னை பனைவள உற்பத்திகளில் கலால் திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்புபட்டிருப்பதனால் அத்திணைக்களத்தின் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதென்றும் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட தென்னை பனை வள சங்கங்கள் மற்றும் சமாச நிர்வாகத்தினர் மற்றும் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது பனை அபிவிருத்தி சங்கத் தலைவர் பசுபதி சீவரத்தினம், அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ராஜ்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

## சுன்னாகம் மின் உப நிலையம் அடுத்த மாதம் இயங்கும்

இரண்டு தசாப்தங்களின் பின்னர் மின்சக்தி கட்டமைப்பில் வடக்கையும் தெற்கையும் இணைக்கும் சுன்னாகம் மின் உப நிலையம் விரைவில் இயங்கவுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தொடக்கம் சுன்னாகம் மின் உப நிலையத்தின் ஊடாக யாழ். குடாநாட்டிற்கு மின்சாரத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாக அமைசசு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுன்னாகம் மின் உப நிலையத்திலிருந்து 63 மெகாவொட் மின்சாரம் யாழ். குடாநாட்டிற்கு விநியோகிக்கப்படவுள்ளதாகவும் இதன் மூலம் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் வீடுகளில் வாழும் மக்கள் நன்மை அடைவார்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சுன்னாகம் கிரீட் மின் உப நிலையம் இயங்கும் பட்சத்தில் யாழ். குடாநாட்டின் மின்சக்தி தேவையை முழுமையாக நிறைவேற்ற முடியும் என மின் சக்தி எரிசக்தி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## விசேட தேவையுடையோர் வாக்களிக்க உறவினர் உதவலாம்

எதிர்வரும் மாகாண சபைத்தேர்தலில் விசேட தேவை உடையவர்கள் தமது உறவினர் ஒருவருடன் சென்று வாக்களிக்க இடமளிக்கப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. விசேட தேவை உடையவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார். இதன் படி இந்த முறை தேர்தலின் போது விசேட தேவை உடையவர்கள், வாக்கு சாவடியினுள் தமது உறவினர் ஒருவருடன் சென்று வாக்களிக்க முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## கொழும்பு- கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலைப்பணிகளை பார்வை

(கொழும்பு)



கொழும்பு கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் காலை பார்வையிட்டுள்ளார். பெலாரஸிற்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்வதற்காக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு செல்லும் வழியிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை பார்வையிட்டுள்ளார். இதேவேளை, இந்த அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துமாறும் அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

## தமிழ் யுவதிகள் 45 பேர் இராணுவத்தில் இணைவு



(கொழும்பு)

இலங்கை இராணுவத்தில் மேலும் 45 தமிழ் பெண்கள் இணைந்துகொண்டனர். வவுனியாவில் அமைந்துள்ள வன்னி இராணுவ கட்டளைத் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கை இராணுவத்தில் புதிதாக உருவாக்கப்படவுள்ள படைப்பிரிவில் இணைப்பதற்காகவே இவர்கள் தெரிவாகியுள்ளனர். அண்மையில் நாடு பூராகவும் இடம்பெற்ற நேர்முகத் தேர்வுகளில் தோற்றிய தமிழ் பெண்களில் 45 பேர் தெரிவு செய்யப்பட்ட நிலையிலேயே இவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

வடக்கு மற்றும் மலையகத்தை சேர்ந்த தமிழ் யுவதிகளுடன் 10 சிங்கள யுவதிகளும் இன்றைய தினத்தில் இராணுவத்தில் இணைந்திருந்தனர். இவர்களை இராணுவத்தில் இணைத்துக் கொள்வதற்காக வன்னி தலைமையகத்தில் சிறப்பு நிகழ்வொன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தமது பிள்ளைகளை இராணுவத்தில் இணைத்த பெற்றோர், கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.




மாற்றுத்திறனாளிகளின் கலை நிகழ்வொன்று நேற்றுமுன்தினம் தெஹிவளை பிரதேசத்தில் தெஹிவளை வை.எம்.சீ.ஏயின் ஏற்பாட்டில் நடைபெற்றபோது...

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

## வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

1) வியாபார நிறுவனங்களில் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுவதற்கு ஆதாரமாக, அத்தாட்சியாக அமைவது
1) மூலப்பதிவேடு　3) பேரேடு
3) மூல ஆவணம்　4) பரீட்சை மீதி　(..............)

2) மூலப்பதிவேடுகளானவை
1) எட்டு　2) ஆறு
3) ஒன்பது　4) நான்கு　(..............)

3) மூல ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டு முதன் முறையாகப் பதியப்படும் இடம்
1) துணையேடு　2) துணைப்பேரேடு
3) பேரேடு　4) பொதுத்தினசேரி　(..............)

4) மூலப்பதிவேட்டில் முக்கியமான ஏடாகக் கருதப்படுவது
1) காசேடு　2) சில்லறைக் காசேடு
3) உட்திரும்பல் நாளேடு　4) விற்பனை நாளேடு　(..............)

5) மூலப்பதிவேடாகக் கருத முடியாதது
1) விற்பனை நாளேடு　2) வெளித்திரும்பல் நாளேடு
3) விற்பனைப் பேரேடு　4) பொதுத்தினசரி　(..............)

6) நாளேடுகள்... வகைப்படுத்தப்படும்
1) நான்கு　2) ஆறு
3) ஐந்து　4) மூன்று　(..............)

7) வியாபார நிறுவனங்களில் இடம்பெறுகின்ற பணப் பெறுவனவுகளையும் பணக் கொடுப்பனவுகளையும் மட்டும் பதிவுசெய்து கொள்வதற்காக பராமரித்துக் கொள்ளப்படும் ஏடு
1) ஒருநிரல் காசேடு　2) இருநிரல் காசேடு
3) மூன்றுநிரல் காசேடு　4) சில்லறைக் காசேடு　(..............)

8) காசேடானது .... வகைப்படுத்தப்படும்
1) இரண்டு　2) ஐந்து
3) நான்கு　4) மூன்று　(..............)

9) வியாபார நிறுவனங்களில் இடம்பெறுகின்ற காசுதொடர்பான பெறுவனவுகளையும் கொடுப்பனவுகளையும் மட்டும் பதிவு செய்து கொள்வதற்காக பராமரிக்கப்படுவது
1) காசேடு　2) இருநிரல் காசேடு
3) சில்லறைக் காசேடு　4) ஒருநிரல் காசேடு　(..............)

10) வியாபார நிறுவனங்களில் இடம்பெறுகின்ற காசுதொடர்பான கொடுக்கல் வாங்கல்களுடன் வங்கி தொடர்பான கொடுக்கல் வாங்கல்களையும் மட்டும் பதிவு செய்து கொள்வதற்காக பராமரிக்கப்படுவது
1) முற்பணமுறைச் சில்லறைக் காசேடு　2) இருநிரல் காசேடு
3) காசேடு　4) நிரல்முறைச் சில்லறைக் காசேடு　(..............)

11) வியாபார நிறுவனங்களில் இடம்பெறுகின்ற காசு, வங்கி, காசுக்கழிவு தொடர்பான கொடுக்கல் வாங்கல்களைச் சேர்த்துப் பதிவு செய்து கொள்வதற்காக பராமரிக்கப்படும் காசேடு
1) சில்லறைக் காசேடு　2) முற்பணமுறைச் சில்லறைக் காசேடு
3) மூன்றுநிரல் காசேடு　4) இருநிரல் காசேடு　(..............)

12) உட்திரும்பல் நிகழ்விற்கான மூலஆவணம்
1) வரவுத்தாள்　2) செலவுத்தாள்
3) அடியிதழ்　4) விற்பனைப் பட்டியல் (..............)

13) வெளித்திரும்பல் நிகழ்விற்கான மூலஆவணம்
1) வரவுத்தாள்　2) செலவுத்தாள்
3) கொள்வனவுப் பட்டியல்　4) அடியிதழ்　(..............)

14) விற்பனைப் பட்டியலை மூல ஆவணமாகக்கொண்ட கொடுக்கல் வாங்கல்
1) காசு விற்பனை　2) காசோலை மூலம் விற்பனை
3) விற்பனை　4) கடன் விற்பனை

15) வங்கிக்கூற்றை மூலஆவணமாகக் கொண்ட கொடுக்கல் வாங்கல்
1) கடன்பட்டோன் வங்கியில் நேரடி வைப்பு
2) வங்கி செலுத்திய மின்சாரம்
3) வங்கி வசூலித்த பங்குலாபம்
4) மேற்கூறிய அனைத்தும்　(..............)

16) சம்பளம் செலுத்திய இன் நிகழ்விற்கான மூலஆவணம்
1) சம்பளப் பட்டியல்　2) பற்றுச்சீட்டை
3) கச்சாத்து　4) அடியிதழ்　(..............)

17) காசோலை மூலம் கொடுப்பனவு இன் நிகழ்விற்கான மூலஆவணம்
1) பற்றுச்சிட்டை　2) அடியிதழ்
3) கச்சாத்து　4) பட்டியல்　(..............)

18) காசு பெறுவனவிற்கான மூலஆவணம்
1) கச்சாத்து　2) பட்டியல்
3) பற்றுச்சிட்டை　4) செலவுத்தாள்　(..............)

19) காசுக்கொடுப்பனவிற்கான மூல ஆவணம்
1) கச்சாத்து　2) வரவுத்தாள்
3) பற்றுச்சிட்டை　4) அடியிதழ்　(..............)

20) பிரயாணம் செலுத்தியது, சிறிய செலவுகள், அறவிடமுடியாக்கடன் இவற்றுக்கான சரியான மூலஆவணத் தொடர்
1) வழிச்செலவுத்துண்டு, சிறிய செலவுகள் கச்சாத்து, நாட்குறிப்புச் கச்சாத்து
2) பற்றுச்சிட்டை, கச்சாத்து, விற்பனைப்பட்டியல்
3) வரவுத்தாள், செலவுத்தாள், அடியிதழ்
4) செலவுத்தாள், அடியிதழ், வரவுத்தாள்　(..............)

21) வங்கியில் வைப்பு இன் நிகழ்விற்கான மூலஆவணம்
1) செலவுத்துண்டு　2) வரவுத்துண்டு
3) செலவுத்தாள்　4) வரவுத்தாள்　(..............)

22) மூலப்பதிவேடாகவும் பேரேட்டுக் கணக்கில் ஒன்றாகவும் தொழிற்படும் துணையேடு
1) விற்பனை நாளேடு　2) கொள்வனவு நாளேடு
3) காசேடு　4) முறையான நாட்குறிப்பு(..............)

23) காசேட்டின் வங்கிநிரலில் வரவில் பதியப்படும் பொருத்தமான ஓர் கொடுக்கல் வாங்கல்
1) காசு விற்பனை　2) காசோலைமூலம் விற்பனை
3) கடன்பட்டோரிடம் பெற்ற காசோலை
4) வங்கி வசூலித்த பங்குலாபம்　(..............)

24) காசேட்டில் எதிர்ப்பதிவு எனக் கூறப்படும் மிகமுக்கியமான கொடுக்கல் வாங்கல்
1) காசுவிற்பனை　2) வங்கியில் வைப்பு
3) வங்கி செலுத்திய காப்புறுதி　4) மின்சாரம்　(..............)

25) காசேட்டில் பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்
1) கவிக்கு விற்பனை　2) கொடுக்க வேண்டிய வாடகை
3) சுகந்தனிடம் கொள்வனவு　4) மேற்கூறிய அனைத்தும்

26) காசேட்டில் பதிவு செய்துகொள்ளப்படும் கழிவு
1) காசுக்கழிவு　2) கணியக் கழிவு
3) வியாபாரக் கழிவு　4) பருவகாலக் கழிவு　(..............)

27) காசேட்டின் ஞாபக நிரலாகக் கருதப்படும் நிரல்
1) வங்கி நிரல்　2) காசு நிரல்
3) கழிவு நிரல்　4) எவையுமல்ல　(..............)

28) காசேட்டின் பெறுவனவுப் பக்க (வரவுப்பக்க) கழிவு நிரல்
1) காசுக்கழிவு　2) கொடுத்த கழிவு
3) பெற்றகழிவு　4) வியாபாரக் கழிவு　(..............)

29) காசேட்டின் கொடுப்பனவுப்பக்க (செலவுப்பக்க) கழிவு நிரல்
1) பெற்றகழிவு　2) கணியக்கழிவு
3) வியாபாரக்கழிவு　4) பருவகாலக்கழிவு　(..............)

30) காசேட்டின் வரவுப்பக்க கழிவுத்தொகை
1) காசுக்கழிவுக்கணக்கில் பதியப்படும்
2) கொடுத்த கழிவுக்கணக்கில் வரவில் பதியப்படும்
3) பெற்றகழிவுக்கணக்கில் செலவில் பதியப்படும்
4) வியாபாரக் கழிவுக்கணக்கில் பதியப்படும்.　(..............)

31) காசேட்டின் செலவுப் பக்க கழிவுத்தொகை
1) வியாபாரக்கழிவுக்கணக்கில் பதியப்படும்
2) கணியக்கழிவுக் கணக்கில் பதியப்படும்
3) பெற்றகழிவுக் கணக்கில் பதியப்படும்
4) கொடுத்தகழிவுக் கணக்கில் பதியப்படும்　(..............)

32) காசேட்டின் செலவுப்பக்க வங்கி நிரலில் பதியப்படும் கொடுக்கல் வாங்கல் அல்லாதது
1) வங்கி செலுத்திய மின்சாரம்　2) வங்கிக்கட்டணம்
3) காப்புறுதி　4) காசோலைப் புத்தகக் கட்டணம்
(..............)

33) காசேட்டின் வரவுப்பக்க வங்கி நிரலில் பதியப்படும் கொடுக்கல் வாங்கல்கள் அல்லாதது
1) கடன்பட்டோனின் வங்கியில் நேரடி வைப்பு
2) வங்கி வசூலித்த பங்குலாபம்
3) வங்கியிலிட்ட பணம்
4) காசோலை மூலம் விற்பனை　(..............)

34) நிறுவனக் கணக்குப் புத்தகங்களில் பதிவு இடப்படாத கழிவு
1) காசுக்கழிவு　2) கணியக்கழிவு
3) வியாபாரக்கழிவு　4) பருவகாலக்கழிவு　(..............)

35) பட்டியல் விலையிலிருந்து குறைத்து வழங்கப்படும் கழிவு
1) வியாபாரக் கழிவு　2) கணியக்கழிவு
3) காசுக்கழிவு　4) பருவகாலக்கழிவு　(..............)

36) 'நன்றி மீண்டும் வருக' எனும் வியாபாரப்புள்ளியில் 'ண்ண்க' எனும் குறி குறிக்கும் விலைப்பெறுமதி யாது?
1) ரூபா 580　2) ரூபா 250
3) ரூபா 620　4) ரூபா 520　(..............)

37) பட்டியல் விலையானது எது சேர்ந்த விலையாகக் காணப்படும்?
1) கொள்விலை + இலாபம்
2) விற்பனை விலை + இலாபம்
3) உற்பத்திச் செலவு + இலாபம்
4) விற்பனைவிலை + கொள்விலை　(..............)

38) விற்பனை நாளேட்டில் ................. பதியப்படும்
1) காசு விற்பனை　2) நிலையான சொத்து கடன்விற்பனை
3) நாளாந்த கடன்விற்பனை　4) காசோலை மூலம் விற்பனை
(..............)

39) விற்பனை நாளேட்டின் இறுதி மொத்தத் தொகையானது ...... பதியப்படும்
1) விற்பனைக் கணக்கின் வரவுப்பக்கம்
2) கடன்பட்டோர் கணக்கின் வரவுப்பக்கம்
3) விற்பனைக் கணக்கின் செலவுப்பக்கம்
4) கடன்பட்டோர் கணக்கின் செலவுப்பக்கம்　(..............)

40) கொள்வனவு நாளேட்டில் ........... பதியப்படும்
1) காசோலை மூலம் கொள்வனவு
2) காசுக் கொள்வனவு
3) நிலையான சொத்து கடன்கொள்வனவு
4) மீள் விற்பனைக்கான பொருட்களின் கடன்கொள்வனவு (.............)

41) கொள்வனவு நாளேட்டில் .........இறுதி மொத்தத் தொகையானது
1) கொள்வனவுக் கணக்கின் வரவுப்பக்கம்
2) கடன்கொடுத்தோர் கணக்கின் செலவுப்பக்கம்
3) கடன்கொடுத்தோர் கணக்கின் வரவுப்பக்கம்
4) கொள்வனவுக் கணக்கின் செலவுப்பக்கம் (.............)

42) உட்திரும்பல் நாளேட்டில் ......... பதியப்படும்
1) காசுக்கு விற்ற தளபாடம் திரும்பிவரின்
2) கடனுக்கு விற்ற சரக்கிருப்பு திரும்பிவரின்
3) காசுக்கு கொள்வனவு செய்த சரக்கிருப்பு திருப்பியனுப்பின்
4) கடனுக்கு கொள்வனவு செய்த சரக்கிருப்பு திருப்பியனுப்பின் (.............)

43) உட்திரும்பல் நாளேட்டின் இறுதி மொத்தத் தொகையானது .... பதியப்படும்
1) உட்திரும்பல் கணக்கின் செலவுப் பக்கம்
2) உட்திரும்பல் கணக்கின் வரவுப் பக்கம்
3) கடன்பட்டோர் கணக்கின் செலவுப் பக்கம்
4) கடன்பட்டோர் கணக்கின் வரவுப் பக்கம் (.............)

44) வெளித்திரும்பல் நாளேட்டில் .......... பதியப்படும்
1) காசுக்கு கொள்வனவு செய்த தளபாடம் திருப்பியனுப்பின்
2) கடனுக்கு விற்ற சரக்கிருப்பு திரும்பிவரின்
3) காசுக்கு விற்பனை செய்த சரக்கிருப்பு திரும்பிவரின்
4) கடனுக்கு கொள்வனவு செய்த சரக்கிருப்பு திருப்பியனுப்பின் (.............)

45) வெளித்திரும்பல் நாளேட்டின் இறுதி மொத்தத் தொகையானது ... பதியப்படும்
1) கடன்கொடுத்தோர் கணக்கின் வரவுப்பக்கம்
2) கடன்கொடுத்தோர் கணக்கின் செலவுப்பக்கம்
3) வெளித்திரும்பல் கணக்கின் வரவுப்பக்கம்
4) வெளித்திரும்பல் கணக்கின் செலவுப்பக்கம் (.............)

46) சில்லறைக்காசாளன் தலைமைக்காசாளனிடமிருந்து ஆரம்பத்தில் பெற்ற தொகை 9000 ரூபா சில்லறைக்காசாளன் குறிப்பிட்ட காலப்பகுதியில் செலவிடப்பட்ட தொகை 640 ரூபா எனின் கட்டுநிதி மீளளிப்பு இடம்பெறும் தொகை
1) 640 ரூபா 2) 8360 ரூபா
3) 9640 ரூபா 4) 9000 ரூபா (.............)

47) பொதுத் தினசேரியில் பதிவிடப்படும் கொடுக்கல் வாங்கல்
1) ஆரம்பப் பதிவு 2) செம்மையாக்கல்கள்
3) மூடும் பதிவு 4) மேற்கூறிய அனைத்தும் (.............)

48) பல இன பேரேட்டுக் கணக்குகளும் உள்ளடங்கிய ஓர் தொகுதி
1) மூலப்பதிவேடு 2) பேரேட்டுக் கணக்கு
3) பேரேடு 4) பொதுப்பேரேடு (.............)

49) பேரேட்டின் வகைகள்
1) துணைப் பேரேடு, பொதுப் பேரேடு
2) விற்பனைப் பேரேடு, கொள்வனவுப் பேரேடு
3) வருமானப் பேரேடு, செலவினப் பேரேடு
4) சொத்துப் பேரேடு, பொறுப்பேரேடு (.............)

50) துணைப்பேரேட்டில் உள்ளடங்குபவை
1) விற்பனைப் பேரேடு, விற்பனை நாளேடு
2) விற்பனைப் பேரேடு, கொள்வனவுப் பேரேடு
3) வருமானப் பேரேடு, செலவினப் பேரேடு
4) உப பேரேடு,பொதுப் பேரேடு (.............)

51) விற்பனைப் பேரேட்டில் .......... பதியப்படும்
1) கடன்பட்டோர் பெயர்கள் மட்டும்
2) கடன்கொடுத்தோர் பெயர்கள் மட்டும்
3) விற்பனைக் கணக்குகள் மட்டும்
4) கொள்வனவுக் கணக்குகள் மட்டும் (.............)

52) மீள்விற்பனைக்கான கடன்கொள்வனவின் போது எழுகின்ற தனிநபர் கடன்கொடுத்தோர் பெயர்களை உள்ளடக்கும் பேரேடு
1) விற்பனைப் பேரேடு 2) விற்பனைக் கணக்கு
3) கொள்வனவுக் கணக்கு 4) கொள்வனவுப் பேரேடு (.............)

53) இரட்டைப் பதிவு விதி என்பது
1) கொடுக்கல் வாங்கலுக்கு வரவுப் பதிவுக்கு சமமான செலவுப் பதிவு ஒன்று இடல்வேண்டும்.
2) கொடுக்கல் வாங்கலுக்கு வரவுப் பதிவுக்கு சமமான செலவுப் பதிவு இடல் வேண்டும்.
3) கொடுக்கல் வாங்கலுக்கு இரண்டு பதிவுகள் இடல்வேண்டும்.
4) கொடுக்கல் வாங்கலுக்கு வரவில் அல்லது செலவில் இரண்டு பதிவு இடல் வேண்டும். (.............)

54) இரட்டைப்பதிவுத் தத்துவத்தின் தந்தை
1) இத்தாலி நாட்டைச் சேர்ந்த லூகா பெசியோலி
2) இஸ்ரேலிய நாட்டைச் சேர்ந்த லூகாபெசியோலி
3) இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஜோய்
4) இஸ்ரேலியநாட்டைச் சேர்ந்த ஜோய் (.............)

55) இரட்டைப் பதிவுத் தத்துவம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
1) 1449 ஆம் ஆண்டு 2) 1049 ஆம் ஆண்டு
3) 1494 ஆம் ஆண்டு 4) 1944 ஆம் ஆண்டு (.............)

56) கொடுக்கல் வாங்கலுக்கான இரட்டைப் பதிவினை பூரணப்படுத்துவதற்காக பராமரித்துக் கொள்ளப்படுவது
1) பேரேடு 2) பேரேட்டுக் கணக்கு
3) மூலப்பதிவேடு 4) பரீட்சைமீதி (.............)

57) பேரேட்டுக் கணக்கின் சரியான வகைப்படுத்தல்
1) வருமானக் கணக்கு, செலவினக் கணக்கு
2) மெய்க் கணக்கு, பேரளவுக் கணக்கு
3) பெயருள் கணக்கு, பெயரளவுக் கணக்கு
4) ஆட்குறிக்கும் கணக்கு, ஆட்குறியாக் கணக்கு (.............)

58) பெயருள் (ஆட்குறிக்கும்) கணக்கின் பிரிவுகள்
1) கடன்பட்டோர் கணக்கு, கடன்கொடுத்தோர் கணக்கு
2) வருமதியாளர் கணக்கு, வாடிக்கையாளர் கணக்கு
3) வழங்குனர் கணக்கு, விநியோகஸ்தர் கணக்கு
4) வருமதியாளர் கணக்கு, கடன்பட்டோர் கணக்கு (.............)

59) பெயரில் (ஆட்குறியாக்) கணக்கின் பிரிவுகள்
1) பேரளவுக் கணக்கு, பெயரளவுக் கணக்கு
2) பேரளவுக் கணக்கு, மெய்க் கணக்கு
3) கடன்பட்டோர் கணக்கு, கடன்கொடுத்தோர் கணக்கு
4) பெயருள் கணக்கு, மெய்க் கணக்கு (.............)

60) வருமானம், செலவீனம், நட்டம் என்பவற்றின் பெயரில் பராமரிக்கப்படும் கணக்கு
1) பெயரளவுக் கணக்கு 2) மெய்க்கணக்கு
3) பெயருள் கணக்கு 4) பெயரில் கணக்கு (.............)

61) சொத்துக்களின் பெயரில் பராமரிக்கப்படும் கணக்கு
1) பெயருள் கணக்கு 2) பேரளவுக் கணக்கு
3) பெயரளவுக் கணக்கு 4) மெய்க் கணக்கு (.............)

62) பெயரளவுக் கணக்கினை கொண்டுள்ள தொகுதி
1) தளபாடக் கணக்கு, சம்பளக் கணக்கு, விற்பனைக் கணக்கு
2) விற்பனைக் கணக்கு, விளம்பரக் கணக்கு, காப்புறுதிக் கணக்கு
3) மோட்டார்க் கணக்கு, காசுக் கணக்கு, வங்கிக் கணக்கு
4) வங்கிக் கணக்கு, வங்கிக்கடன் கணக்கு, வங்கிக் கட்டணக்கணக்கு (.............)

63) மெய்க் கணக்கினை கொண்டுள்ள தொகுதி
1) மின்சாரக் கணக்கு, விளம்பரக் கணக்கு. காசுக் கணக்கு
2) பெற்றவாடகைக் கணக்கு, பெற்ற வட்டிக் கணக்கு, விற்பனைக் கணக்கு
3) மின்சாரக் கட்டுப்பணக் கணக்கு, காசுக் கணக்கு, பெறவேண்டிய வாடகைக் கணக்கு
4) காசுக் கணக்கு, காப்புறுதிக் கணக்கு, மின்சாரக் கட்டணக் கணக்கு (.............)

64) வரவு மீதியைக் கொண்டுள்ள கணக்குகள்
1) வாடகைக் கணக்கு, தளபாடக் கணக்கு, காசுக் கணக்கு
2) பெற்ற கழிவுக் கணக்கு, தளபாடக் கணக்கு, வங்கிக் கணக்கு
3) பெற்றவாடகைக் கணக்கு, மோட்டார் கணக்கு, விற்பனை கணக்கு
4) மின்சாரக் கணக்கு, முதலீட்டுக் கணக்கு, முதலீட்டு வருமானக் கணக்கு (.............)

65) செலவு மீதியைக் கொண்டுள்ள கணக்குகள்
1) முதலீட்டுக் கணக்கு, காசுக் கணக்கு, வங்கிக் கணக்கு
2) பெற்றவட்டிக் கணக்கு, பங்குலாபக் கணக்கு, விற்பனைக் கணக்கு
3) தளபாடக் கணக்கு, சம்பளக் கணக்கு, வங்கிக் கணக்கு
4) மோட்டார் கணக்கு, மின்சாரக் கணக்கு, பங்குலாபக் கணக்கு (.............)

66) வருமானக் கணக்குகளின் தொகுதி
1) பெற்றவாடகைக் கணக்கு, பெறவேண்டிய வாடகைக் கணக்கு
2) மோட்டார் திருத்தச் செலவுக் கணக்கு, சில்லறை வருமானக் கணக்கு
3) சம்பளக் கணக்கு, பெற்றதரகுக் கணக்கு
4) பெற்றவட்டிக் கணக்கு, பெற்றவாடகைக் கணக்கு (.............)

67) செலவீனக் கணக்குகளின் தொகுதி
1) காப்புறுதிக் கட்டுப்பணக் கணக்கு, சம்பளக் கணக்கு
2) மின்சாரக் கணக்கு, மின்சார வைப்புக் கணக்கு
3) வங்கிக்கூலிக் கணக்கு, இறைவரிக் கணக்கு
4) காசாளன் பிணைப்பணக் கணக்கு, காசோலைப் புத்தகக் கணக்கு (.............)

68) சொத்துக் கணக்குகளின் தொகுதி
1) மோட்டார்ப் பெறுமானத் தேய்வுக் கணக்கு, தளபாடக் கணக்கு
2) வங்கிக்கடன் கணக்கு, வருமதி உண்டியல் கணக்கு
3) சென்மதி உண்டியல் கணக்கு, காசுக் கணக்கு
4) சேமிப்பு சான்றிதழ் கணக்கு, நன்மதிப்புக்கணக்கு (.............)

69) பொறுப்புக் கணக்குகளின் தொகுதி
1) அட்டுறு செலவுகள் கணக்கு, முற்பணமாகப் பெற்ற கடன்கணக்கு
2) பெறவேண்டிய வாடகைக் கணக்கு, பெற்றவாடகைக் கணக்கு
3) மின்சார வைப்புப்பணக் கணக்கு, மின்சாரக் கணக்கு
4) காசுக் கணக்கு, வங்கிக்கூலிக் கணக்கு (.............)

70) உடமைக் கணக்குகளின் தொகுதி
1) மூலதனக் கணக்கு, முதலீட்டுக் கணக்கு, பங்குலாபக் கணக்கு
2) மூலதனக் கணக்கு, முதலீட்டுக் கணக்கு, முதலீட்டு வருமானக் கணக்கு
3) மூலதனக் கணக்கு, தேறியலாபக் கணக்கு, பற்றுக் கணக்கு
4) மூலதனக் கணக்கு, முதலீட்டுக் கணக்கு, பற்றுக் கணக்கு (.............)

# பேருந்துகள் பகிஸ்கரிப்பு; நடுத்தெருவில் பயணிகள்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய பேருந்து தரிப்பிடத்தில் பேருந்துகளை நிறுத்துவது தொடர்பாக இலங்கைப் போக்குவரத்துச் மற்றும் தனியார் போக்குவரத்து பேருந்து சேவை ஊழியர்களிடையே ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து இடம்பெற்ற பணிப்பகிஷ்கரிப்பால் மாணவர்கள் மற்றும் பயணிகள், உத்தியோகத்தர்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.


இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் நேற்று முன்தினம் தனியார் போக்குவரத்துச் சேவை ஊழியர்கள் மாறி மாறி பகிஸ்கரிப் பில் ஈடுபட்டதன் காரணமாக க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் பயணிகளும வழமையான சேவை கிடைக்கப் பெறாததையடுத்து அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

அரச பேருந்து நிலையங்களிலும் பேருந்து தரிப்பிடங்களிலும் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அத்துடன் சில பேருந்துகளில் பயணிகளை ஏற்றுவதில் இடைநெருக்கடி ஏற்பட்டதன் காரணமாக பயணிகள் பேருந்து தரிப்பிடங்களிலேயே பேருந்துகளுக்கு காத்துக்கிடக்க வேண்டியேற்பட்டது.

அத்துடன் தொழிலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் இவ்வாறான போக்குவரத்து தாமதத்தினால் தமது அலுவலகங்களுக்கு தாமதமாகி செல்ல நேரிட்டதையும் அவதானிக்க முடிந்தது. (பா)

# முதற்பெண்மணி ஷிரந்தி; தாயார் நினைவாக அன்பளிப்பு



(கொழும்பு)

முதற் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷ காலஞ்சென்ற தமது தாயார் வயலட் விக்ரம சிங்க நினைவாக வெலிசற கடற்படை மருத்துவ மனைக்கு ஓர் அம்புலன்ஸ் வண்டியையும் மற்றும் மருத்துவ உபகரணங்களையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இது தொடர்பான வைபவம் வெலிசற கடற்படை மருத்துவ மனையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. எட்டு மருத்துவமனை படுக்கைகள் ஒரு சக்கர நாற்காலி இரண்டு டிராலிகள் பல மருத்துவ கருவிகள மற்றும் மருத்துவ மனைக்குத் தேவையான பொருட்களையும் அவர் வழங்கினார்.

மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் மாலுமிகளையும் அவர் சென்று பார்வையிட்டார். கடற்படை உயர் அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# சூடைக்குடாவில் மீள்குடியேற்றம்



திருகோணமலை, மூதூர் கிழக்கு சூடைக்குடா கிராமத்தில இருந்து இடம் பெயர்ந்த 56 குடும்பங்கள் நேற்று மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். குறித்த பிரதேச மக்கள் தமது சொந்த காணிகளை துப்புரவு செய்வதற்கான அங்கீகாரத்தை மாவட்ட செயலாளர் மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வா அனுமதி வழங்கியுள்ளார்.

கூனித்தீவு நாவலர் வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வின்போது மூதூர் பிரதேச செயலாளர் பிரதீபன் முனனிலையில் சூடைக்குடா பதில் கிராம சேவை உத்தியோகத்தர் க.செல்வரெத்தினத்திடம் மாவட்ட செயலாளரின் கடிதம் வழங்கப்பட்டது.

இதில் திருகோணமமலை மாவட்ட கட்டளைத் தளபதி பிரிகேடியர் விக்கிரமரத்தன, சம்பூர் கடற்படை முகாம் கட்டளை அதிகாரி கே.ஜி.போல் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

தமது சொந்த கிராமத்திற்குச் செல்வதற்காக கிளிவெட்டி நலன்புரி நிலையத்தில் தங்கியிருநதவர்கள் இராணுவத்தினரால் பஸ்கள் மூலம் அழைத்துவரப்பட்டனர்.

கூனித்தீவில் இருந்து 500 மீற்றர் தொலைவில் உள்ள டைக்குடா கிராமத்திற்கு கால்நடையாக சென்ற இவர்கள் அங்குள்ள விநாயகர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் தமது காணிகளை துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

# சிறந்த பெண்மணிக்கான விருது பெற்ற மட்டு.மாவட்ட செயலாளர் கௌரவிப்பு

(மட்டக்களப்பு)

பெண்களுக்கான விருதினை பெற்ற மாவட்ட செயலாளர் பி.எஸ்.எம். சார்ள்ஸை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை மட்டக்களப்பு நகரில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு காவியா பெண்கள் அமைப்பு, மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம் மற்றும மட்டக்களப்பு சிவில் சமூக அமைப்பு ஆகிய நிறுவனங்கள் இணைந்து இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தன.

மட்டக்களப்பு காந்தி சதுக்கத்திற்கு முன்னாள் வரவேற்கப்பட்ட மாவட்ட செயலாளர் ஊர்வலமாக மட்டக்களப்பு நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு முன்னாள் அமைக்கப்பட்டிருந்த விசேட மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டு கௌரவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

2012/2013 ஆண்டின் சிறந்த பெண்மணிகளுக்கான விருது சிறுபான்மை இனத்தினை சேர்ந்த இருவருக்கு வழங்கப் பட்டுள்ளது.



சிறந்த பெண்மணிக்கான விருது மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் பி.எஸ்.எம்.சார்ள்ஸிற்கும் சிறந்த பெண் தொழில் வல்லுனரிற்கான விருது தென் கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் வேந்தர் தேசபந்து ஜெஸீமா இஸ்மாயிலிற்கும் வழங்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கான தேசிய விருது வழங்கும் விழா எனும் தலைப்பிலான இந்த விருது வழங்கல் நிகழ்வினை பெண்களுக்கான முகாமைத்துவ நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.

கொழும்பில் கடந்த வாரம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரத அதிதியாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த கலந்துகொண்டார்.

இதன்போதே சிறந்த பெண் மணிக்கான விருது மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் பி.எஸ்.எம்.சார்ள்ஸிற்கும் சிறந்த பெண் தொழில்வல்லுனரிற்கான விருது தென் கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் வேந்தர் தேசபந்து ஜெஸீமா இஸ்மாயிலிற்கும் வழங்கப்பட்டது.



(கொழும்பு)

திட்டமிடப்பட்டுள்ள மெற்றோ கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக உலக வங்கி கடன் உதவித்திட்டத்தின் மூலம் 500 மில்லியன் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள பாரிய இயந்திரங்கள் காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திடம் கடந்த வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்த இயந்திரங்களைக் கையளித்தார். நகர அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதாபய ராஜபக்ஷவும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

# மோப்ப நாய்களுக்கு திருமணம்

கண்டி, அஸ்கிரிய பொலிஸ் மோப்பநாய்ப் பிரிவைச்சேர்ந்த மோப்பநாய்களில் 8 ஜோடி நாய்களுக்கு நேற்று திங்கட்கிழமை திருமணம் நடத்திவைக்கப்பட்டது.

பொலிஸ் பிரதானிகள் முன்னிலையிலேயே திருமணம் நடத்திவைக்கப்பட்டது. இந்த திருமணவைபவத்தில் கலந்துகொண்டவர்களுக்கும் விருந்தினர்களுக்கும் பாற்சோறு விருந்துபசாரம் வழங்கப்பட்டது.

திருமண பந்தத்தில் நேற்று இணைந்துகொண்ட மோப்ப நாய்களில் மூன்று ஜோடி நாய்கள தேனிலவுக்காக நுவரெலியாவுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. பொலிஸ் சேவைக்காக 100 மோப்பநாய்கள் வெளிநாடுகளிலிருந்து அஸ்கிரியவுக்கு கொண்டுவரப்பட்டன.



இந்த மோப்ப நாய்களின் ஊடாக அந்த இனத்தைப் பெருககிக்கொள்ளும் நோக்கிலேயே திருமண ஏற்பாடுகள் நடத்தப்பட்டதாக அஸ்கிரிய பொலிஸ் மோப்பநாய் பிரிவு அறிவித்துள்ளது.

# அமெரிக்கா தாக்கினால் விளைவுகள் விபரீதமாகும்

## எச்சரிக்கிறது சிரியா



அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் விளைவுகள் விபரீதமாகும என சிரியா அரசாங்கம் எச்சரித்துள்ளது. சிரியாவில் ஜனாதிபதி பஷில் அல் ஆசாத் படைக்கும் போராளிகளுக்கும் இடையே கடும் சண்டை நடந்து வருகிறது.

இந்நிலையில் போராளிகள் வசமுள்ள பகுதிகளில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் விஷக்குண்டுகள் தாக்கியதில் மூச்சுதிணறி உயிரிழந்தனர். அதற்கான வீடியோ ஆதாரங்களும் வெளியிடப்பட்டன. தன்னார்வுத்தொண்டு நிறுவனங்கள் அரசு வீசிய விசக்குண்டு தாக்குதல்களில் 355 பேர் கொல்லப்பட்டனர் என்று கூறியுள்ளது. ஆனால் எதிர்க்கட்கிகளோ 1300-க்கும் மேற்பட்ட மக்கள் பலியாகிவிட்டதாக தொடர்ந்து கூறி வருகிறது. இந் நிலையில், அமெரிக்கா சிரியா மீது தாக்குதல் நடத்த தீர்மானித்துள்ளது.

இதையடுத்து மத்திய தரைக் கடலில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள அமெரிக்க போர்க் கப்பல்கள் ஆயத்த நிலையில் உள்ளன. அமெரிக்கா தலைமையில் சிரியா மீது தாக்குதல் நடத்த இப பகுதிகளில் நிறுத் திவைக்கப் பட்டுள்ள அமெரிக்க, பிரிட்டன், பிரான்ஸ் படைகளும் தயாராகி வரு கின்றன.

இந்நிலையில், சிரியா மீது அமெரிக்கா தலைமையிலான படைகள் தாக்குதல் நடத்தினால், ஒட்டுமொத்த மத்திய கிழக்கு பிராந்தியமும் தீப்பற்றி எரியும் என சிரியா எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக, மூத்த சிரியாவின் தகவல் அமைச்சர் 'ஓம்ரான் அல்-ஜோபி கூறுகையில், தற்போதைய நிலையில் எங்கள் நாட்டு பிரச்சினையில் யார் தலையிட்டாலும் அது தீயை வீசுவதற்கு ஒப்பானதாகும்.

அந்த தீ சிரியாவை மட்டுமல்ல, ஒட்டுமொத்த மத்திய கிழக்கு நாடுகளையும் எரித்துவிடும்.

சிரியா மீது தாக்குதல் நடத்திவிடலாம் என நினைப்பது அவ்வளவு சாதாரனமாக நடக்கக்கூடியது அல்ல என்று கூறியுள்ளார்.


சிரியா மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது அபாயக் கோட்டை தாண்டும் நடவடிக்கையாகும் என ஈரானும் எச்சரித்துள்ளது.

போர்க்கப்பல்களை அனுப்புவதால் நிலைமை மேலும் தீவிரமாகுமே ஒழிய, கட்டுப்படுத்த முடியாது என் ஈரான் நாட்டின் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் அபாஸ் அரக்ஜி கூறியுள்ளார்.

அந்நாட்டின் ராணுவ துணைத் தலைவர் மசூத் ஜசாயெரி, அபாயக் கோட்டை அமெரிக்கா தாண்டினால் விளைவுகளை வெள்ளை மாளிகை சந்திக்க நேரிடும். எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுபவர்கள் மக்களிடம் இருந்து தப்பிவிட முடியாது என்று கூறியுள்ளார்.

உலகச் செய்திகள்

# உரிமை கோர யாரும் இல்லாத 6 கோடி ரூபா பணப் பரிசு



அமெரிக்க அதி'ட சீட்டில் விழுந்த ரூ.6 கோடி பரிசை பெற ஓராண்டாக யாரும் வராததால், அது காலாவதியானது என அறிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகர் ப்ளேலேண்ட் மார்க்கெட் பகுதியில் உள்ள அதிஷ்ட சீட்டு விற்பனை செய்யும் கடையில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 25ஆம் திகதி விற்கப்பட்ட அதிஷ்ட சீட்டுக்கு ஒரு மில்லியன் டாலர், இந்திய மதிப்பில் ரூ.6 கோடியே 33 லட்சம் பரிசு விழுந்தது.

அதிஷ்ட சீட்டு முடிவுகள் வெளியாகி பல மாதங்கள் ஆகிய பின்பும் பரிசை பெற யாரும் முன்வரவில்லை.

இதனால் பரிசு விழுந்த அதிஷ்ட எண் 1672049 குறித்த விவரம் ஊடகங்கள் மற்றும் சமூக தளங்களில் வெளியிடப்பட்டன. அப்படியிருந்தும் இதுவரை யாரும் பரிசு விழுந்த அதிஷ்ட சீட்டை கொண்டு வரவில்லை. அமெரிக்க சட்டப்படி அதிஷ்ட சீட்டில் பரிசு விழுந்தால ஓராண்டுக்குள் உரிமை கோர வேண்டும். இல்லையென்றால் அந்த அதிஷ்ட சீட்டு காலாவதியாகிவிடும்.

அதன்படி நேற்றுடன் ரூ.6 கோடி பரிசு விழுந்த அதிஷ்ட சீட்டு காலாவதியாகிவிட்டது. அதிஷ்ட சீட்டு வாங்குபவர்கள் மறந்து விடுவதால் அல்லது தொலைத்து விடுவதால் பரிசுத் தொகைக்கு யாரும் உரிமை கோராத சம்பவம் அமெரிக்காவில் பலமுறை நடந்துள்ளது.

கடந்த 2001ம் ஆண்டு புரூக்ளின் பகுதியில் விற்பனையான சீட்டுக்கு 68 மில்லியன் டொலர் அதாவது ரூ.430 கோடி பரிசு விழுந்தது. இந்த ஜாக்பாட் தொகையை வாங்கவும் யாரும் முன்வரவில்லை.

நியூயோர்க் வரலாற்றில் யாரும் உரிமை கோராத மிக அதிக அளவிலான பரிசுத் தொகை இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

# வன விலங்குகள் தண்ணீர் அருந்த ஜெயலலிதா புதிய திட்டம்




பருவமழை பொய்க்கும் காலங்களில், வனங்களில் உள்ள நீர்நிலைகள் வறண்டு காணப்படுவதால், நீரைத்தேடி, வன விலங்குகள் வனத்தை விட்டு வெளியேறி அருகிலுள்ள மனிதர்கள வசிக்கும் பகுதிகளில் நுழைந்து அதிக அளவு சேதம் விளைவிக்கின்றன. இதனால் பொதுமக்கள் மிகுந்த துன்பத்துக்கு ஆளாகின்றனர்.

இதனைத் தவிர்க்கும் பொருட்டு, வன விலங்குகளுக்கு தேவையான நீர், அவைகள் வசிக்கும் வனங்களிலேயே கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி முதல் அமைசசர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

வனத்திற்குள் 400 அடி ஆழத்தில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு, அதிலிருந்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தண்ணீர் கொண்டு செல்வதற்காக சூரிய ஒளி மின் சாரத்தில் இயங்கும் நீர்மூழ்கி மோட்டார் பம்பு ஒன்று ஒவ்வொரு கிணற்றிலும் பொருத்தப்படும். இதன் மூலம், நீர்மூழ்கி மோட்டார் பம்பு இயக்கத்தின் மூலம் தண்ணீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு எடுத்துச் செல்லப்பட்டு தேக்கி வைக்கப்படும். பின்னர் இந்த நீர் தேவைப்படும் நேரத்தில் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து அதிகப்படியான நீர் பைப்புகள் மூலம் திறந்த வெளியில் வன விலங்குகள் நீர் அருந்துவதற்காக தேக்கி வைக்கப்படும். இதன் மூலம் வன விலங்குகளுக்கு தேவைப்படும் நேரங்களில வன விலங்குகள் தாங்கள் வசிக்கும் வனப் பகுதியிலேயே தண்ணீர் அருந்த வழிவகை ஏற்படும்.

# மிக துல்லியமான கடிகாரம் வடிவமைப்பு



உலகின் மிகத் துல்லியமான கடிகாரத்தை, அமெரிக்க விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர்.

அமெரிக்காவின், தேசிய தரம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் இயற்பியலாளர், ஆன்ட்ரு லுட்லோ இது தொடர்பாகக் கூறுகையில்


அடுத்த தலைமுறைக்கான, அதிநவீன மற்றும் துல்லியமான இரண்டு கடிகாரங்கள் பரிசோதனைக்காக தயாரிக்கப்பட்டுள்ளன.

"ஏட்டர்பீயம் லேட்டிஸ்" என்ற வேதியியல் தனிமம் பயன்படுத்தப்பட்டிருப்பதால், கடிகாரதின் அளவீட்டு முறை நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த கடிகாரம், அதில் உள்ள பெண்டுலத்தின் அலை வீச்சுக்கு ஏற்ப செயல்படும். இந்த, எட்டர்பியம் கடிகாரத்தில், 10 ஆயிரம், அரிய அணுக்கள், 10 மைக்ரோகெல்வின் அளவுக்கு குளிர்விக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டுள்ளது.

இது, மற்ற கடிகாரங்களை விட, 10 மடங்கு துல்லியமான நேரத்தைக் காட்டும். இக்கடிகாரத்தை, கப்பல் போக்குவரத்து, காந்தப்புலங்கள் மற்றும் வானிலை போன்றவற்றில் பயன்படுத்த முடியும் என்று ஆன்ட்ரு கூறினார்.

# விண்வெளியிலிருந்து நிலவுக்கு விண்கலம்



விண்வெளியிலிருந்து முதன் முறையாக நிலாவுக்கு செயற்கை கோள்களை அனுப்ப நாசா திட்டமிட்டுள்ளது.

பூமியின் துணைக்கோளான நிலாவின் வளிமண்டலம் பற்றி இன்னும் முழுமையாக தெரிய வரவில்லை. இதனை அறிந்து கொள்ளும் பொருட்டு அடுத்த மாதம் செயற்கைகோளினை அனுப்ப நாசா திட்டமிட்டுள்ளது.

அதாவது, நிலாவினுடைய மெல்லிய வளிமண்டலத்தின் அமைப்பு மற்றும் வடிவம் பற்றி சிறந்த புகைப்படங்களை எடுக்க கார் அளவிலான ஒரு ஆய்வுக் கருவியை(ரோபோ) உருவாக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் செப்ரெம்பர் 6ஆம் திகதி அமெரிக்க விமானப்படை ரொக்கெட் மூலம் அனுப்பப்பட உள்ள இந்த செயற்கை கோளானது பூமியின் சுற்றுவட்டப் பாதைக்கு அப்பால் உள்ள நாசாவின் விர்ஜினியா விண்வெளி கடற்கரை ஏவுதளத்தில் இருந்து புறப்பட்டு நிலாவை சென்றடையும்.

விண்ணிலிருந்து ஒரு விண்கலம் அனுப்பப்படுவது இதுவே முதல் முறையாகும். இந்த விண்கலத்தில் அனுப்பி வைக்கப்படும் ஆய்வுக்கருவியானது நிலாவை சுற்றி வளிமண்டலம் மற்றும் தூசு மண்டலம் பற்றிய விவரமான செய்திகளை அனுப்பும். மேலும் அதிநவீன லேசர் கருவிகளுடன் செயல்படும் இந்த ஆய்வுக்கருவியானது பூமியில் உள்ள ஆராய்ச்சிக் கூடத்திற்கு அறிய புகைப்படங்களை அனுப்பி வைக்கும்.

இதன் மூலம் சூரிய மண்டலத்திலுள்ள மற்றக் கோள்கள், விண்பாறைகள் பற்றி அறிந்து கொள்ளலாம்.

# குழந்தையின் மரணத்துக்கு நஷ்டஈடு வழங்கிய மருத்துவமனை



மருத்துவமனை ஊழியர்களின் கவனக்குறைவினால் பச்சிளம் குழந்தை உயிரிழந்ததற்கு மன்னிப்பு கோரியதுடன், ந'டஈடு வழங்க மருத்துவமனை முடிவு செய்துள்ளது.

இங்கிலாந்தில் வசிக்கும் இந்திய வம்சாவளியினர் கமல்ஜித், கடந்த 2008ஆம் ஆண்டு மான்செஸ்டர் நகரத்தில் உள்ள செயிண்ட் மேரிஸ் மருத்துவமனையில் பிரசவத்திற்காக தனது மனைவியை அனுமதித்துள்ளார். இந்நிலையில் குழந்தை பிறந்திருந்ததை சிறிது நேரம் கழித்துதான் ஊழியர்கள் கவனித்துள்ளனர்.

மோசமான உடல்நிலையுடன் பிறந்த குழந்தையினை உடனடியாக கவனிக்க தவறியதால், குழந்தை மூளைத்தாக்கத்திற்கு ஆளாகி 2009ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதி இறந்துவிட்டது.

மனிந்தர்சிங் என்று பெயரிட்ட தனது குழந்தை இறந்ததற்கு மருத்துவமனை ஊழியர்களின் அலட்சியமே காரணம் என்று கமல்ஜித் மருத்துவமனை மீது வழக்கு தொடுத்தார். நான்கு வருட போராட்டத்திற்குப் பின்னர், தற்போது அந்த மருத்துவமனை ஐந்து இலக்கத் தொகை ஒன்றினை நஷ்டஈடாக கமல்ஜித்திற்கு அளிக்க உள்ளது.

மேலும் இந்த நஷ்டஈடு தங்கள மகனின் இழப்பை ஈடு செய்யாது என்றும், தங்களுக்கு சிறிய அளவிலாது நியாயம் கிடைத்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# பாக்.தீவிரவாதிகள் இலங்கையில்; ஊடுருவியது உண்மைதான்

## உறுதி செய்கிறது தமிழக "கியூ" பிரிவு

தமிழகத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்காக இலங்கையில் ஸ்லீப்பர் செல்கள் (மக்களோடு மக்களாக இருந்துகொண்டு அரசாங்கத்துக்கு எதிராகச் செயற்படும் பிரிவினர்) பதுங்கியிருப்பது உண்மையே என்று தமிழக கியூ பிரிவு பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

தீவிரவாதிகள் அச்சுறுத்தல் குறித்து தமிழக அரசுக்கு ஏற்கனவே இந்திய மத்திய உளவுத் துறை எச்சரிக்கை விடுத்து வருகின்ற நிலையில் இலங்கையில் இருந்து கிடைக்கப்பெற்ற மர்மத் தொலைபேசி அழைப்பொன்றில், தமிழகத்துக்குள் 32 தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து தமிழகத்தின் அனைத்து கடலோர பகுதிகளிலும் உச்சக்கட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் தமிழகத்தைத் தாக்கக் கூடிய பாகிஸ்தான் தீவிரவாத இயக்கங்களுடன் கூடிய ஸ்லீப்பர் செல்கள் இலங்கையில் பதுங்கியிருப்பது உண்மைதான் என்று தமிழக கியூ பிரிவு பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

இருப்பினும் அவர்களால் உடனடியாக தமிழகத்துக்கு ஆபத்து இல்லை என்றாலும் எதிர்காலத்தில் ஆபத்து இருக்கிறது என்றும் கியூ பிரிவு பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

## அபிவிருத்தி நோக்கிய பயணம் வெற்றி; பின்னடைவுக்கு இனி இடமில்லை

### விமல் வீரவன்ச பெருமிதம்

(கொழும்பு)

மக்கள் நாடு தொடர்பில் சிந்தித்து பார்க்க வேண்டுமென அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். நாடு 2005 ஆம் ஆண்டின் பின்னர் முன்னோக்கி பயணிக்கிறதே தவிர, பின்னடைவுகளை எதிர்கொள்ளவில்லையென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாடு முன்னோக்கி வந்திருக்கும் நிலையில், மேலும் முன்னோக்கி பயணிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க முடியும். ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம், முன்னேற்றப்பாதையில் பயணிக்கிறது. அதன் காரணமாகவே, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பின்னடைவுகளை எதிர்கொண்டுள்ளன.

நாடு பின்னோக்கி பயணிக்குமாயின் எதிர்கட்சிகள் முன்னணிக்கு வரும். எனினும் எதிர்க்கட்சிகள் நாளுக்கு நாள் பின்னடைவையே சந்திப்பதாக அமைச்சர் விமல் வீரவன்ச சுட்டிக்காட்டியுள்ளார். இந்நிலையில் நடைபெறும் அனைத்து தேர்தல்களிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றிபெறுமென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யுத்தம் நிறைவடைந்தும்...

மன்ற அணுகுமுறை தொடர்பாகவும் என்னிடம் கேட்டறிந்து கொண்டார்.

யுத்தத்திற்கு பின்னரான தற்போதைய நிலைமைகள், புரிந்துணர்வு நடவடிக்கைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் ஆராய்ந்தார். இது தொடர்பில் எமது அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் பரிந்துரைகள் குறித்து தெளிவுபடுத்தினேன்.

தடுப்புக் காவலில் உள்ளவர்களின் பல வழக்குகள் ஏன் நிலுவையில் இருப்பதாகவும் அவர்களை பார்வையிடுவதற்கு உறவினர்களுக்கு அனுமதி வழங்கப்படாமை தொடர்பிலும் கேட்டறிந்தார்.

இதேவேளை, பள்ளிகள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவது மற்றும் சிறுபான்மை முஸ்லிம் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தொடர்பிலும் அவரது கவனம் உள்ளதுடன் இது தொடர்பில் எனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்துமாறு கேட்டார்.

இதற்கு முஸ்லிம் அமைச்சர் என்ற வகையில் நானும் ஏனைய முஸ்லிம் அமைச்சர்களும் இணைந்து ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை கையளித்துள்ளோம். இது குறித்து ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை எமக்குள்ளது எனத் தெரிவித்தேன்.

இதேவேளை, ஏனைய மதங்களை பற்றி இழிவுபடுத்து வதை குற்றமாக கருதும் சட்டம் ஒன்று கொண்டுவரப்படவுள்ளமை குறித்தும் தெரிவித்தேன். மற்றும் தற்போது புதிதாக உருவாக்கப்பட்டுள்ள அமைச்சு தொடர்பிலும் பேசினோம்.

ஆனால் பொலிஸ் திணைக்களம் நீதியமைச்சின் கீழ் கொண்டுவருவதுதான் சரியான விடயம் என்ற அபிப்பிராயத்தையும் அவர் வெளியிட்டார். இது தொடர்பில் ஜனாதிபதி தான் முடிவெடுக்க வேண்டும் என்பதையும் அவரிடம் நான் தெரிவித்தேன்.

பயங்கரவாத தடைச்சட்டம் தற்போதும் நடைமுறையில் ஏன் உள்ளது என கேள்வியெழுப்பினார்.

யுத்தம் நிறைவடைந்த போதிலும் நாட்டில் தற்போதும் பாதுகாப்பு பிரச்சினை இருப்பதனால் அதனை அரசு நீக்கும் நிலையில் இல்லை என்பதையும் தெரிவித்தேன்.

வெலிவேரிய சம்பவம் தொடர்பிலும் அவர் என்னிடம் கேள்விகளை கேட்டார். பல பொது விடயங்கள் பற்றி என்னுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்ட அவர் தகவல் அறியும் சுதந்திரம் தொடர்பிலும் இராணுவம் மற்றும் பொலிஸாருக்கிடையிலான பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடினார் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, முன்னதாக , சட்டமா அதிபர் பாலித்த பெர்ணாண்டோ; பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ்ஆகியோரையும் நவநீதம்பிள்ளை சந்தித்தார்.

## யாழில்...

மணியளவில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியுடன் விசேட பேச்சுக்களை நடத்தவுள்ளார். தொடர்ந்து 9.00 மணிக்கு யாழ்.பொது நூலகத்துக்கு விஜயம் செய்யவிருக்கிறார். அங்கு வடக்கு மாகாண பிரதம செயலாளர் விஜயலட்சுமியைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

தொடர்ந்து யாழ்.நூலகத்தில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை சந்திக்கவுள்ளார். தொடர்ந்து அங்கிருந்து புறப்பட்டு 10.15 மணியளவில் யாழ்.கோவில் வீதியில் உள்ள அதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அங்கு யாழ்.சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் முக்கிய சந்திப்பு ஒன்றை நடத்துவார்.

பின்னர் 11.45 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டு கிளிநொச்சிக்கு செல்லவுள்ளார்.

கிளிநொச்சியில் தொழிற் பயிற்சி மையம் ஒன்றைப் பார்வையிடும் அவர் மாவட்ட அரச அதிபரையும் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

தொடர்ந்து அங்கிருந்து புறப்பட்டு முல்லைத்தீவுக்குச் செல்லவுள்ளார். அங்கு புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால் மற்றும் சூரியபுரம் ஆகிய பகுதிகளுக்கு நவிப்பிள்ளையின் குழுவினர் செல்லவுள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களைச் சந்தித்து உரையாடுவதற்கு அவர் திட்டமிட்டிருக்கின்றார்.

## இராஜதந்திர....

லாம் எனவும், அந்த பாதக நிலைமையைச் சீர்செய்ய ஆர்ப்பாட்டங்களை செய்யாது, அதனைப் புத்திசாலித்தனமாக அணுக வேண்டும் என கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

## மக்களின்...

மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க ஆகியோர் கலந்துகொண்டு காணி மற்றும் வீடுகளை உரிமையாளர்களிடம் கையளித்தனர்.

1996 ஆம் ஆண்டு தொடக்கம் தென்மராட்சி பிரதேசத்தில் கெற்பேலி, மந்துவில், சங்கரத்தை, வரணி, எழுதுமட்டுவாள் ஆகிய பிரதேசங்கள் பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த காணிகள் 17 வருடங்களுக்கு பின்னர் 53 பேரிடம் மீளக் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செப்ரெம்பர்...

கொண்டு வருகைதரவுள்ள ஜனாதிபதி யாழில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்து வைக்கவுள்ளார். இந்நிலையில், சுன்னாகம் மின்சார நிலையத்தில் லக்ஷபானா மின் இணைப்பினையும் சாவகச்சேரி பகுதியில் பிரசார நடவடிக்கையினை ஆரம்பிக்கவுள்ளார்.

அத்துடன் கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கும் ஜனாதிபதி விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என அவர் குறிப்பிட்டார். (25)

## தமிழ்மக்களின் நலன்களில் அக்கறையில்லாத கூட்டமைப்பு

### அமைச்சர் திஸ்ஸ குற்றச்சாட்டு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவே செயற்பட்டு வருவதாக அமைச்சர் திஸ்ஸ விதாரண குற்றம் சுமத்தியுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு செயற்படத் தவறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் யதார்த்தமான உரிமைகளுக்காக லங்கா சமசமாஜ கட்சி குரல் கொடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளார். தேசியப் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முனைப்புக்களில் அரசாங்கத்திற்கு, கூட்டமைப்பு உதவியளிக்கத் தவறியுள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மாறாக புலி ஆதரவு தரப்பினருக்கும் புலம்பெயர் தமிழர்களுக்குமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்கி வருவதாகத் தெரிவித்துள்ளார். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆக்கபூர்வமான பங்களிப்பினை வழங்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவதன் மூலமே நிரந்தரமான தீர்வுத் திட்டமொன்றை எட்ட முடியும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களினால் தமிழ் மக்கள் பாரியளவில் நன்மைகளை அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## இராஜதந்திரத் தாக்குதல் நடத்த ஐ.நா. சபை துணை போகிறதா?

### ஜனாதிபதி மகிந்த கேள்வி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையைப் பயன்படுத்தி சிலர் இலங்கையைத் தாக்கி வருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்

பெலாரஸிற்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அந்நாட்டு ஜனாதிபதி அலெக்சான்டர் லுக்சனாகோவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம் குறித்து ஜனாதிபதி, பெலாரஸ் ஜனாதிபதிக்கு விளக்கமளித்துள்ளார்.

சமாதானம் இல்லாத நாட்டில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டதன் பின்னர் நாட்டில் பாரியள்வில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவப் பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பெலாரஸ் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

## உண்மையான...

களுக்கு நெடுந்தீவுச் சம்பவம் ஒன்றே தேர்தல் வன்முறையாக கிடைத்திருப்பதாக தமக்கு தெரிவித்திருப்பதாகவும் ஆனால் காரைநகரில் தமது வாகனத்தை படமெடுத்து அச்சுறுத்தப்பட்டமை மற்றும் யாழ்.நகரில் தமது வாகனம் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டமை தொடர்பிலும் எவ்விதமான முறைப்பாடுகள் தேர்தல் வன்முறையாகப் பதிவு செய்யப்படவில்லை.

அத்துடன் நான் பயணம் செய்த வாகனம் தாக்கப்பட்டமை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கண்டிக்கவும், எனக்கு உதவவும் முன்வரவில்லை.

அவ்வாறாக அவர்கள் என்னை ஏன் புறக்கணிக்கின்றனர் என்று புரியவில்லை நான் பிழை செய்திருந்தால் எனது பாதை தவறானது என்றால் அவர்கள் என்னை அழைத்துச் கூறியிருக்கலாம் அவ்வாறு இல்லாது கூட்டமைப் பின் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எனது வாகனம் தாக்கப்பட்டுள்ளமை மற்றும் யாழ். பொலிஸ் நிலையத்திலும் சத்தியாக்கிரகம் இருப்பது குறித்து கைத்தொலைபேசியில் தொடர்புகொண்ட போதும் அவர்களது தொடர்பு கிடைக்கவில்லை.

இவ்வாறு அவர்கள் செயற்படுவதன் மர்மம் எமக்குப் புரியவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உண்மையான தலைவரினால் உருவாக்கப்படவில்லை:

அது உருவாக்கப்பட்டு மூன்று வருடங்களில் விடுதலைப் புலிகளின் அங்கீகாரத்தைப் பெற்று செயற்பட ஆரம்பித்த ஒரு கூட்டு மட்டுமே என்றும் தெரிவித்தார்.

(பா)

# 12 பால்மா மாதிரிகளில் டி.சி.டி. இரசாயனம் இல்லை

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

பொன்டேரா, மெலிபன் மற்றும் லைப் சேர்ச் ஆகிய நிறுவனங்களினது 12 பால்மா மாதிரி பிரிவுகளின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற பால்மா வகைகளில் DCD இரசாயனம் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த பால்மாக்களில் DCD மற்றும் பொட்டியூலினம் பக்டீறியா அடங்கியுள்ளதா? என்பது தொடர்பிலான ஆய்வுகளுக்காக, அதன் மாதிரிகள் தொழில்நுட்ப ஆய்வு நிறுவனத்திற்கும், அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில், இந்த பால்மாக்களில் குறித்த இரசாயனப் பதார்த்தங்கள் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படுகின்ற பால்மா வகைகள் தொடர்பில் அண்மையில் பரவிய செய்திகளை கருத்திற்கொண்டு நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் ஆலோசனைகளுக்கு ஏற்ப, சுகாதார சேவைகள் ஆணையாளரினால் ஆய்வுகளுக்காக இந்த பால்மாக்களின் மாதிரிகள் ஆய்வு நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

இதனைத் தவிர, புரோட்டின் அடங்கிய சிறுவர்களுக்காக 8 வகையான பால்மா மாதிரிகளை ஆய்வுகளுக்கு உட்படுத்தியுள்ளதாகவும், அதில் க்ளோஸ்டியம் பொட்டியூலியனம் இரசாயனப் பதார்த்தம் அடங்கவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மைலோவின் உள்நாட்டு உற்பத்திக்கு புரோட்டினை பயன்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த புரோட்டின் பிரான்சிலேயே உற்பத்தி செய்யப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், அதனை களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் என்பவற்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிசிடி (Dicyandiamide) இரசாயனப் பொருள் கலப்படம் அற்ற பால் மா பொருட்கள் என அறிவிக்கப்பட்டுள்ளவை.

(பால்மா வகை - Full Cream Milk Powder) - (இறக்குமதி செய்பவர் - Maliban Milk Products Ltd). - (தொகுதி எண் - xpf /12 Jun 13wI, xpf /13 Jun13wI, xpf /14 Jun 13wI)

(பால்மா வகை - Full Cream Milk Powder)- (இறக்குமதி செய்பவர் - Fontera Brands Lanka) - (தொகுதி எண் - Ix16)

(பால்மா வகை - UHT Whipping Cream) - (இறக்குமதி செய்பவர் - Fontera Brands Lanka) - (தொகுதி எண் - LXO2)

(பால்மா வகை - Full Cream Milk Powder) - (இறக்குமதி செய்பவர் - Fontera Brands Lanka) - (தொகுதி எண் - IX26, IX27, IX28)

(பால்மா வகை - Full Cream Milk Powder) - (இறக்குமதி செய்பவர் - Fontera Brands Lanka) - (தொகுதி எண் - IX10, IX11)

(பால்மா வகை - Full Cream Milk Powder) - (இறக்குமதி செய்பவர் - Fontera Brands Lanka) - (வகை எண் - IX14, IX15)

(பால்மா வகை - Full Cream Milk Powder) - (இறக்குமதி செய்பவர் - Fontera Brands Lanka)- (தொகுதி எண் - IX26)

பக்டீரியா கலப்படம் அற்ற பால் மா பொருட்கள் என அறிவிக்கப்பட்டுள்ளவை.

Infant Formula - Life Serv Pvt Ltd --391377

Infant Formula - 2 - Life Serv Pvt Ltd -

Infant Formula - 3 - Life Serv Pvt Ltd --387606

NAN 1 400G - Cabuyao Factory> Philippins

NAN 1 350G - Cabuyao Factory> Philippins

NAN 2 400G - Cabuyao Factory> Philippins

NAN 2 350G - Cabuyao Factory> Philippins

NAN 3 400G - Cabuyao Factory> Philippins

NAN 3 350G - Cabuyao Factory> Philippins

Lactogen1 - Cabuyao Factory> Philippins

Lactogen2 - Cabuyao Factory> Philippins

## ஆர்ப்பாட்டம்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் வருகையைக் கண்டித்து ராவணா சக்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டுள்ளது.

கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்திற்கு முன்பாக நேற்றைய தினம் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# கடந்த இரண்டு வாரங்களில் யாழில் 17 தேர்தல் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த இரண்டு வாரத்துக்குள் மட்டும் 17 தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இம் முறைப்பாடுகள் தொடர்பாக உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளதாக வட மாகாண பிரதித் தேர்தல் ஆணையாளரும் யாழ். மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான சி.அச்சுதன் தெரிவித்தார்.

தேர்தல் வன்முறைகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு வாரங்களுக்குள் மட்டும் 17 தேர்தல் வன்முறைகள் தொடர்பிலான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சோசலிஸ சமத்துவக் கட்சியினால் மூன்று முறைப்பாடுகளும் சாவகச்சேரி நகர சபையினால் தேர்தல் துண்டுப் பிரசுரம் ஒட்டுவதாக ஒரு முறைப்பாடும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டினால் மூன்று முறைப்பாடுகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் மூன்று முறைப்பாடுகளும் மக்கள் விடுதலை முன்னணியினால் ஒரு முறைப்பாடும் தனிப்பட்ட நபர்களினால் மூன்று முறைப்பாடுகளும் கிழக்கு பிரதேச சபையினால் ஒரு முறைப்பாடும் வலி கிழக்கு பிரதேச சபையினால் ஒரு முறைப்பாடும் வேட்பாளர் ஒருவரின் தொலைபேசியூடாக ஒரு முறைப்பாடும் யாழ். மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இம் முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளும்படி பொலிஸாருக்கு தகவல்கள் வழங்கியுள்ளோம். அம் முறைப்பாடுகள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவித்தார்.

# தேசிய மொழிகள் அமைச்சின் பணிகள்; மகிழ்வடைந்தார் நவிப்பிள்ளை

## என்கிறார் அமைச்சர் வாசு



(கொழும்பு)

தனது அமைச்சினூடாக மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகளுக்குப் பொறுப்பான ஆணையாளர் நவநீதம்பிள்ளை மகிழ்ச்சியடைந்ததாக தேசிய மொழிகள் மற்றும் சமூக சேவை ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் நவநீதம் பிள்ளையுடனான சந்திப்புக் குறித்துப் பேசும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் விசேட உறுப்பினர் அவை, அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெற வேண்டிய மாற்றங்கள் மற்றும் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலமாகப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளில் மீளவும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமா? போன்றன தொடர்பில் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தன்னிடம் வினவியதாகவும் தற்போதைக்கு அவ்வாறானதொரு கருத்து இல்லை எனவும், தான் அது தொடர்பில் நீண்ட காலமாக ஆராய்ந்து வருவதாக அவரிடம் குறிப்பிட்டதாக வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்.

வடக்கில் இருந்து சில தமிழ்ப் பெயர்கள் அழிக்கப்பட்டு, சிங்களம் உட்புகுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் அவர் தம்மிடம் வினவியதாகவும், அதற்கு அவர், இலங்கை இருவேறு பிரதேசங்களாகப் பிரிந்து காணப்படுவதால் தற்போது மொழியின் தேவைப்பாடு எல்லா இடங்களுக்கும் தேவையில்லை எனவும், எனவே அதனால் தான் அதுபற்றிச் சிந்திக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ள அமைச்சர், சட்டத்திற்கு ஏற்ப மும்மொழிகளுடனும் கூடிய பெயர்ப்பலகைகள் அமுலுக்கு வரும் என்றும் அதற்கு நெடுங்காலம் செல்லலாம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# இறுதி யுத்தத்தில் இந்திய கடற்படை பொதுமக்கள் மீது குண்டு வீசியதா?

## வவுனியா நீதிமன்ற வழக்கில் சர்ச்சை

இறுதி யுத்தத்தின் போது இந்தியக் கொடி தாங்கிய கப்பலில் இருந்து கரையில் பொதுமக்கள் பகுதி மீது குண்டுகள் வீசப்பட்டதாக வவுனியா நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு ஒன்றில் கூறப்பட்டிருந்ததாக சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல் தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தத்தின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற் போயிருப்பவர்கள் தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 5 ஆட்கொணர்வு மனுக்கள் தொடர்பான விசாரணைகள் நேற்று நடைபெற்ற அதேவேளை, மேலும், புதிதாக 7 ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அவைகள் நீதிமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

விடுதலைப்புலிகளின் முன்னாள் திருகோணமலை அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் உட்பட்டவர்கள் சார்பிலான முதல் ஐந்து ஆட்கொணர்வு மனுக்கள் தொடர்பில் எதிர் மனுத் தாக்கல் செய்வதற்கு எதிரணித் தரப்பினருக்கு கடைசி சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

எனினும், இன்னும் இரண்டு தினங்களில் அந்த எதிர்மனு தாக்கல் செய்யப்படும் என்று அரச தரப்பு சட்டத்தரணி தெரிவித்ததையடுத்து, நீதிமன்றம் இந்த வழக்குகளை வரும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

புதிதாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுக்களில் பல புதிய விடயங்கள் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாக இந்த வழக்குகள் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த மூத்த சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் தெரிவித்தார்.

பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த சுதந்திரபுரத்தினுள் தாங்கள் இருந்த போது, விமானத்திலிருந்து அந்தப்பகுதி மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும், கடலில் நிறுத்தப்பட்டிருந்த இந்தியக் கொடி பறக்கவிடப்பட்டிருந்த கப்பல் ஒன்றிலிருந்தும் கரையில் மக்கள் இருந்த பகுதிகளை .நோக்கி குண்டுகள் எறியப்பட்டன என்றும் இந்த மனுக்களில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் போயுள்ளவர்களின் குடும்ப உறவினர்கள் தெரிவித்துள்ளனர் என்றார் சட்டத்தரணி ரட்னவேல்.

அது மட்டுமன்றி, கொத்துக் குண்டுகளும் இரசாயன குண்டுகளும் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ள மனுதாரர்கள் தங்களின் கண் முன்னாலேயே இவற்றால் பாதிக்கப்பட்டவர்களுடைய முகங்கள், உடல்கள் விகாரமடைந்து, துன்பமடைந்து அவர்கள் மரணமடைந்ததைக் கண்டதாகவும் முதன் முறையாகத் தெரிவித்திருக் கின்றார்கள் என்றும் சட்டத்தரணி ரட்ணவேல் தெரிவித்தார்.

இந்த வழக்குகள் யாவும் வரும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதிக்கு நீதிமன்றத்தினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

# நவிப்பிள்ளையை வரவேற்காது ஜனாதிபதி பெலாரஸ் சென்றது ஏன்?

## கேட்கிறது ஐ.தே.க.



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை வரும்போது நாட்டின் தலைவர் வெளிநாடு சென்றுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஏகாதிபத்திய நாடாக குறிப்பிடப்படும் பெலாரஸ் நாட்டிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சென்றது ஏன் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வரும்போது நாட்டின் தலைவர் என்ற ரீதியில் அவரைச் சந்திக்காது, சென்றமை தவறான விடயம் என திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக் காட்டினார்.

ஊடகவியலாளர் மந்தனா இஸ்மாயிலின் வீட்டிற்குச் சென்ற குழுவினர் கொள்ளையிடுவதற்காகச் சென்றிருந்தார்கள் எனின், பல மணிநேரங்களாக அவர்கள் அங்கு இருந்தமை ஏன் எனச் சந்தேகம் எழுந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மந்தனா இஸ்மாயிலின் வீட்டில் கொள்ளைச் சம்பவம் இடம்பெறவில்லை எனவும் இது ஊடகவியலாளர் மீதான தாக்குதலே இடம்பெற்றதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஆகஸ்ட் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.